
கல்கி



KALKI · 15-12-1968 40 காசு


பெண்மணிகளே!
ஓர் அரவிந்த் சேலை அணிந்து அலாதி
அழகோடு திகழுங்கள்
பாப்லின்கள்
ஷர்ட்டிங்குகள்: ஸ்ட்ரைப், டாபி, செக், பைஜாமா,
வேஷ்டிகள்: பனாடினம், ராஜா ஸ்பெஷல்,
மெர்ஸிரைஸ்ட் லான்: 5531
சூட்டிங்குகள்: காபர்டீன்
ப்ரின்டுகள், ப்ரின்டெட் லான்கள், வாயில்கள்,
பாப்லின்கள்:
சலவை செய்த கலர் புட்டாக்கள்.
லெனோ மற்றும் புட்டாக்களில்
2x2 ஃபேன்ஸி ஃபுல் வாயில்கள்.
SANFORIZED
TEBILIZED* AND
TEBILIZED DOUBLE TESTED
*REGISTERED USERS
LALBHAI GROUP
அரவிந்த் மில்ஸ் லிமிடெட் அகமதாபாத்


ரசித்துச் சாப்பிடுங்கள்
5 star
காட்பரிஸ் 5 ஸ்டார்
இது இன்சுவை கொண்டது மட்டுமல்ல
போஷாக்குச் சத்தும் நிரம்பியது!
காட்பரீஸின் புத்தம் புதிய புதுமையான சாக்கலேட்
5 ஸ்டார், மூன்று சிறந்த பொருள்கள் சேர்த்துத்
தயாரிக்கப்பட்டிருக்கிறது. காரமல்,
பாலேடு மிகுந்த நூகா, மற்றும் பாலின்
சிறந்த குணங்கள் நிறைந்த மில்க்
சாக்கலேட்தான் அவை. சுவைத்துப்
பார்த்தாலே தெரியுமே, இந்த
சாக்கலேட்டின் அலாதி ருசி;
அற்புத இனிமை!
வாழ்க்கையை இனிமையாக்குவது காட்பரிஸ்!


கல்கி

பொருளடக்கம்

கீலக வருஷம், கார்த்திகை 30உ. டிசம்பர் 15உ.

ரூபாய் மதிப்பைக் காக்க...	—	5
ராஜாஜியின் கருத்துக்கள்	—	7
குழலா, குயிலா ?	—	11
சீரணிப் படையும் சீரான பாதையும்	—	14
பொன்னியின் செல்வன்	—	18
மகாபாரதம்	—	29
007 பாலு	—	34
கிளிஞ்சல் கோபுரம்	—	37
விட்டுக் கொடுத்தவள்	—	45
முற்பகல் செய்யின்...	—	61
புகையிலை புராணம்	—	73
வைரமுடைய நெஞ்சு வேண்டும்	—	79
அட்டைப்படம் : 'வித்யாவ்ரதா'		

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே, சம்பவங்களும் கற்பனையே.


இயற்கையை மாற்ற முடியுமா?
மழையே, நீ பெய்யக் கூடாது என்று உத்தரவிடுகிறேன்.
வரிச் சுமையால் சர்க்கார் வருமானமே குறையும் நீதி
மழையே, நீ பெய்யக் கூடாது என்று உத்தர விடுகிறேன்
கம்யூனிஸ்ட்டுகளை அடக்காததால் நாசவேலை நடக்கும் நீதி



மலர் 28 ★ இதழ் 20

ரூபாய் மதிப்பைக் காக்க......

ஒரு நாடு மற்ற நாடுகளுடன் கொள்கிற வர்த்தகத்தைப் பொறுத்ததே அந்நாட்டு நாணயத்தின் சர்வ தேச மதிப்பு. ஒரு நாட்டின் விவசாய உற்பத்தி, தொழில் உற்பத்தி இவற்றையும், இவற்றில் அது அந்நிய நாடுகளுடன் எந்த அளவுக்குப் போட்டியிட முடிகிறது என்பதையும் பொறுத்தே அதன் நாணய மதிப்பு நிர்ணயமாகிறது. உற்பத்தியில் உயர்ந்து விளங்கிப் பிறநாடுகளுடன் போட்டியிட முடிந்தால் நாணய மதிப்பு ஓங்குகிறது. மாறாக உற்பத்தியில் நலிவுற்று, அந்நிய இறக்குமதி நிறையச் செய்ய வேண்டியுள்ள நாட்டின் நாணயம் மதிப்பில் குறைகிறது. ஒரு நாடு தன் நாணய மதிப்பை உயர்த்திக் கொள்ள விரும்பினால், அது அயல் நாடுகளில் நன்கு விற்பனை போகிற அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கி ஏற்றுமதி செய்ய வேண்டும். அல்லது தான் அயல் நாடுகளிலிருந்து செய்து கொள்ளும் இறக்குமதியைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

நாணய மதிப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, மக்கள் உபயோகிக்கும் பல பண்டங்களின் இறக்குமதியைக் குறைத்து, மக்கள் தியாகமாக இருக்கக் கோருவதுண்டு. மக்கள் எந்த அளவுக்கு இந்த இறக்குமதிப் பொருள்களின் இல்லாமையைத் தாங்கும் திறன் பெற்றிருக்கிறார்களோ, அந்த அளவுக்கே இந்த நடவடிக்கை வெற்றி பெறும். இதற்கு மக்களுக்கு நிறைய தேச பக்தி இருக்க வேண்டும்.

இறக்குமதிகளில் பலவிதம் உண்டு. ஒரு நாட்டு உற்பத்தித் தொழிலுக்கு அத்தியாவசியமான உபகரணங்கள் இறக்குமதி செய்யப்படலாம். விவசாயம், ஆலைத் தொழில், சுரங்கத் தொழில் முதலியவற்றுக்கு இறக்குமதிப் பண்டங்கள் தேவைப்படலாம். நாணய மதிப்பில் சாதக நிலை ஏற்படுத்துவதற்காக, இறக்குமதியை வெட்டினால் இத் தொழில்கள் மிகவும் பாதிக்கப்படும். எனவே, இந்த அம்சங்களில் இறக்குமதியைப் பலவந்தமாகக் குறைப்பதால் உள்நாட்டு உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டு, நாணயத்தைக் காக்கும் நடவடிக்கையால் எந்த லாபமும் இல்லாமல் போய் விடும். மக்கள் விட்டுக் கொடுக்கக்கூடிய பண்டங்களில் மட்டுமே இறக்குமதியைக் குறைக்கலாம்.

மக்கள் எவற்றை விட்டுக் கொடுக்க முன்வருவார்கள் என்று பார்க்க வேண்டும். முன் நாட்களில் — வரலாற்று அடிப்படையில் அதைச் சமீப காலம் என்றே சொல்லலாம் — இந்திய மக்கள் அனைவரும் நிதி நிலைமையில் பல வேறு மட்டங்களில் இருந்தாலும், ஏறக்குறைய ஒரே விதமாக வாழ்ந்தனர். பண வசதி உள்ளவர்கள் மற்றவர்களைவிட மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்ததில்லை. பணத்தைத் தங்கள் படாடோபத்துக்கு மட்டுமே பயனாக்கிக் கொள்ள வில்லை. அதிகம் செலவழிக்காமல் தம் குழந்தைகளுக்குப் பெரிய சொத்து விட்டுச் சென்றார்கள்; அல்லது தர்மத்துக்கு நிறைய எழுதி வைத்தனர். பொதுவாக போகப் பொருட்களுக்குச் செலவழித்தது கிடையாது. ஆனால் இன்று பணக்காரர் மட்டுமின்றி, மத்தியதர மக்களும் கூட, முன் நாட்களில் அவசியமாகவே கருதப்படாத பல பண்டங்களைக் கட்டாயத் தேவை என்று நினைத்துவாங்குகின்றனர். இந்தப் பண்டங்களை விட்டுக் கொடுக்கக் கூட இப்போது மக்கள் தயாராக இல்லாததால், சர்க்கார் இறக்குமதியில் சிக்கனம் செய்வது கடினம்.

ஆனால் கடினமாயினும், இத்திசையில் சிக்கனம் அவசியமாகும். எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் நாட்டைத் திவாலா நிலையிலிருந்து காக்க வேண்டுமாயின், அநாவசியத் தேவைகளைக் குறைக்கத்தான் வேண்டும். அவசியமான உணவு இறக்குமதியை இப்போது நாம் குறைப்பதற்கில்லை. ஆனால் முடிகிற மட்டும் சிக்கனம் செய்யவே பழக வேண்டும். இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பொருட்களைக் குறைப்பதில் ஓர் அநுகூலம், இப்பொருட்களை ஏழைகள் உபயோகிப்பதில்லை. பொருளாதாரத்தில் மத்தியதர, உயர்தர மக்களே இப்பண்டங்களுக்குப் பழக்கப்பட்டிருக்

மகாத்மாவின் மணிமொழி



தவறு செய்கிற ஒரு மனிதனைப் பார்க்கும் போதெல்லாம், 'நானும் தவறுகள் செய்திருக்கிறேன்' என்று எனக்கு நானே சொல்லிக் கொள்கிறேன். காமம் மிகுந்த ஒருவனைப் பார்க்கும்போது, நானும் ஒரு காலத்தில் இப்படித் தான் இருந்தேன் என்று சொல்லிக் கொள்கிறேன். இவ்விதத்தில் உலகத்தில் உள்ள ஒவ்வொருவரிடமும் எனக்கு உறவு இருப்பதாக உணர்கிறேன். இதனால்தான் நம்மில் மிக மிகத் தாழ்ந்தவனும் சுகம் கண்டாலன்றி என்னால் சௌக்கியமாய் இருக்க முடியாது என்று காண்கிறேன்.

கிறார்கள். இந்த வர்க்கத்தினர் சிறிது இன்னலை ஏற்குமளவுக்கு அவர்களுக்குத் தேச பக்தியை ஊட்ட முடியும் என்று நம்புவோமாக!

அநாவசியப் பொருட்களை உபயோகிப்பதில் சிக்கனம் காட்டுவது வேறு, அவசியமான உணவுப் பொருளின் விஷயம் வேறு. இப்போது உணவு இறக்குமதியைத் தவிர்க்கவும், உணவு உற்பத்திக் குறைவுக்கு ஈடுகட்டவும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பரிகாரமாக எண்ணியுள்ளனர். இந்தத் திட்டத்தைப் பணக்காரர்களும், மத்தியதர வர்க்கத்தினருமே மேற்கொள்கின்றனர். இதனால் இவர்கள் ஆடம்பரப் பொருட்கள் உள்படத் தாங்கள் நிகழ்காலத்தில் உபயோகித்து வரும் எல்லாப் பண்டங்களையும் தொடர்ந்து வாங்க முடிகிறது. அநாவசியப் பண்டங்களை மக்கள் உபயோகிப்பது குறையவில்லை. இதுதான் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினால் ஏற்பட்டிருக்கும் விளைவு. எதிர்காலத்தில் நெடுநாளுக்கு உணவுப் பிரச்னையைத் தீர்க்க இந்தத் திட்டம் உதவப் போவதில்லை.

ஜனத் தொகையைக் குறைத்து, சுபிட்சம் ஏற்படுத்த எண்ண வேண்டாம். அந்நிய வர்த்தகத்தில் நமக்கு நல்ல நிலை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய அளவுக்குப் பல அநாவசியப் பொருட்களை உயர்தர, மத்திய தர மக்கள் கைவிடச் செய்து, அவசியப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கி சுபிட்சம் காண இடமுண்டு. சுகாதார வாழ்க்கைக்கான நவீன கழிவுகால் முதலிய வசதிகளிலும், சுத்தமான குடி நீர், மருத்துவ உதவி, கல்வி அபிவிருத்தி முதலியவற்றிலும் சிக்கனம் வேண்டியதில்லை. இவற்றை எல்லாருக்கும் விஸ்தரிப்போம். ஆனால் உலக நாடுகளின் ஆயுதப் போட்டி போல், பணக்காரர்களிடையும், மத்தியதரக் குடும்பத்தினரிடையும் ஆடம்பர வாழ்வில் ஏற்பட்டுள்ள போட்டியைப் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தி, நமது அந்நிய வர்த்தகத்தைக் காத்து, நாணய மதிப்பை நிலைப்படுத்தி, சுபிட்சத்துக்கு வழி காணலாம். நம் தேசத்தின் இன்றைய நிலையில் தனி மனிதர்களும், குடும்பங்களும் எப்படி வாழ வேண்டுமோ, அந்த வாழ் நிலைக்கு அதிகமான தேவைகளை வசதியுள்ளவர்கள் மேலும் மேலும் பெருக்கிக் கொண்டு போகிறார்கள். இந்தப் போக்கை விடுத்து, வசதியுள்ளவர்களும் அநாவசியச் செலவில் இறங்காமல், சேமிப்பில் முனைந்தால், அந்தச் சேமிப்பிலிருந்து நாடு நலனடையும்.

(அடிப்படை: 14-12-68 'ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதிய கட்டுரை)

தாதாவின் மறைவு



"தாதா கோடிக்கொருவர்" என்று கூறினார் தமிழ்ப் பாட்டி அவ்வையார். அந்த வாக்குக்கு ஏற்ப வாழ்ந்து அநாயாசமாக இறைவனடி சேர்ந்தவர் ஸ்ரீ லால்சந்த் தாதா. அவர் செய்துள்ள கொடைகளுக்கு ஒரு கணக்கில்லை. சென்னை மீனம்பாக்கத்திலுள்ள ஜெயின் கல்லூரி அவருடைய பெரும் கொடையாலும் முயற்சியாலும் உருவானது. அது அவருடைய பெயரை என்றும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கும். அவர் மருந்துத் துறையில் பெரிய வியாபாரி மட்டுமல்ல; ஏழை எளிய மக்களின் பிணி தீர்ப்பதற்கெனவே சென்னை நகரில் பல பகுதிகளில் தர்ம ஆஸ்பத்திரிகள் நிறுவினார். பிரசவ ஆஸ்பத்திரியும் நிறுவித் தாய்மாருக்குப் பேறுகால உதவி கிடைக்க ஏற்பாடு செய்தார். பல வர்த்தக ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு வர்த்தகப் பிரமுகராக வாழ்ந்தவர். அவர் பிரிவால் வருந்தும் குடும்பத்தாருக்கு நமது மனமார்ந்த அனுதாபங்கள்.

ராஜாஜியின் கருத்துக்கள்

மொழிவாரியில் ராஜ்யங்களைப் பிரித்தது மிகவும் தீமை விளைவித்திருக்கிறது என்ற கருத்தைக் காங்கிரஸ் அக்கிராசனர் வெளியிட்டிருக்கிறார். இந்தியாவில் பகுத்தறிந்து பார்க்கும் ராஜநீதி நிபுணர்களில் பலரும் இவ்வாறே கருதுகின்றனர். ஆனால் மொழி அடிப்படையில் ராஜ்யங்களைப் பிரித்ததால் ஆங்காங்கு சுயலாபம் அடையும் அரசியல் கோஷ்டிகள் ஏற்பட்டுள்ளன. இந்த அரசியல் கோஷ்டிகள் மிகுந்த சக்தி பெற்றுள்ளன. எனவே, மொழிவாரி ராஜ்யத்தை மாற்றுவதற்கு அரசியல் சாஸனத்தில் திருத்தம் கொண்டு வரலாம் என்று நம்ப இடம் இல்லை.

ஃஃஃ

லாட்டரித் திட்டத்தினால் நெறிகள் எப்படிக் குலைகின்றன என்பதற்குச் சான்று வேண்டுமாயின், செய்திப் பத்திரிகைகளில் வெளிவரும் கடிதங்களையும், பத்திரிகை நிருபர்களின் கட்டுரைகளையும் பார்த்தால் போதும். லாட்டரி டிக்கெட் விற்பனை பயங்கரமாக உயர்ந்திருக்கிறது. இதனால் ஒரு கருப்புச் சந்தையும் ஏற்பட்டிருக்கிறது. உழைக்காமல் திடீர் சொத்து பெற விரும்பும் சூதாட்ட மனப்போக்கை ஊக்கி, சர்க்காருக்குப் பணம் தேடும் திட்டம் மிக அகௌரவமான நிலைக்கு அழைத்துச் சென்று விட்டது. சூதாட்டத்தைத் துணைப் பிரதமரவர்கள் எவ்வளவு வன்மையாக ஆட்சேபிக்கிறார் என்பதை நாம் அறிவோம். எனினும் இவ்விஷயத்தில் தம் சகாக்களைத் திருப்ப அவருக்குச் சக்தி இல்லை என்று காண வருத்தமாயிருக்கிறது.

ஃஃஃ


விவசாயம், சுகாதாரம், கல்வி, கூட்டுறவு முதலியவற்றுக்காக உள்ள மத்திய சர்க்கார் மந்திராலயங்களை ரத்து செய்துவிட வேண்டும் என்ற யோசனை ஆந்திரத்திலிருந்து வெளியாகியுள்ளது. இதற்கு ஆதரவாகச் சொல்ல நிறைய விஷயம் உண்டு. சிற்சில துறைகளின் நிலைமையையும் தேவையையும் அநுசரித்து அவற்றை அரசியல்சாஸனம் ராஜ்ய அரசாங்கங்களுடைய நிர்வாகத்தின் கீழ் வைத்துள்ளது. இத்துறைகளில் மத்திய சர்க்காரிலும் மந்திராலயங்கள் இருப்பதற்கு நியாயமில்லை. மனித இயற்கைப்படி, உண்மையான வேலை இல்லாவிடினும் மனிதர்கள் சும்மா இருப்பது முடியாது. உண்மையான வேலை இல்லாத கை சைத்தானின் தொழிற்சாலை என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அவசியமில்லாத, உண்மையான வேலைப் பொறுப்பு இல்லாத மத்திய மந்திராலயங்களாலும் வெறுமனே இருக்க முடியாது.

ராஜ்யங்களுக்கென விதித்த துறைகளில் உள்ள யூனியன் மந்திராலயங்கள் யாவற்றையும் நீக்கிவிடுதல் நலம். டில்லி, ராஜ்யங்கள் இரண்டுக்கும் கூட்டாக உள்ள 'கன்கரன்ட்' துறைகள் அனைத்துக்குமாகச் சேர்த்து ஒரே ஒரு மத்திய மந்திராலயம் இருக்கலாம். இத்துறைகளில் ஒவ்வொன்றுக்குமென 'ஜூனியர்' மந்திரிகளை நியமித்து, அவர்கள் நாடெங்கிலும் சென்று, ராஜ்ய நிர்வாகங்களுடன் தொடர்பு கொள்ளச் செய்யலாம்.

ஃஃஃ

நவம்பர் 28ந் தேதி டில்லியில் முதலீடுகள் குறித்து நடந்த சர்வதேசக் கருத்தரங்கில் கலந்துகொண்ட அயல் நாட்டு அறிஞர்கள், இந்தியாவில் கம்பெனிக்கு விதிக்கப்படும் உயர்ந்த வரி விகிதம் காரணமாகத் தாங்கள் இங்கு முதலீடு செய்ய அசௌகரியமாக உள்ளது என்று கூறினர். இந்தியாவில் ஒரு தொழிற்சாலை வரிகள் கொடுத்த பின் பத்து சதவிகிதம் லாபம் காண வேண்டுமாயின், நடைமுறையில் முப்பது சதவிகிதம் லாபம் பெற வேண்டியிருக்கிறது. இதற்கு மாறாக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளில் பன்னிரண்டிலிருந்து 19 சதம்வரை லாபம் பெற்றாலே போதுமானதாயுள்ளது. தனி மனிதர்களுக்கு விதிப்பது போக, கம்பெனி வரி என்று தனியாக விதிப்பதே அறிவுக்குப் பொருந்தாதது: வருமானம் சம்பாதிப்பதெல்லாம் தனி மனிதர்கள்தான். அவர்களுக்கு வரி விதிக்கப்படுகிறது. கம்பெனியின் சேமிப்பு பங்குதாரர்கள் வரி கொடுத்தது போக மிஞ்சியதே. தொழில் அபிவிருத்தியில் அரசாங்கத்துக்கு அக்கறை இருந்தால் இதற்கு வரி போடக் கூடாது. வரி போட்டாலும் குறைவாக இருக்க வேண்டும்.

சுத்தமான
மனம் கவரும் வெண்மைக்கு





சிங்கம் மார்க்
விக்டோரியா ப்ளூ ஓ ஓ பி (OOB)
(மிகச் சிறந்த நீலம்)

சிறிதளவே விக்டோரியா ப்ளூ ஓ ஓ பி உபயோகித்ததில் உங்கள் ஆடைகளுக்குத்தான் என்ன வெண்மை! ஆடைகளை பளபளப்பான வெண்மையாக்குகிறது. உங்களுடைய சட்டைகள், வேஷ்டிகள், விரிப்புகள் முதலியவைகளை அதிக வெண்மையுடன் வைக்க இதுவே சிறந்த சிக்கனமான முறை.



VAPI:UP:288

தயாரிப்பாளர்கள்: அல்ட்ராமரின் & பிக்மென்ட்ஸ் லிமிடெட், அம்பத்தூர், மதராஸ் 53

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்: கெம்டைல் ட்ரேடிங் கம்பெனி, 318, லிங்கச் செட்டித் தெரு, மதராஸ் 1.







1. திரு கவி. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி சௌ. அருணாவுக்கும், டாக்டர் ராம கிருஷ்ணனுக்கும் நடந்த திருமணத்துக்கு ராஜாஜி விஜயம் செய்து மணமக்களை ஆசிர் வதித்தார்.


2. மயிலை ரசிக ரஞ்சனி சபை அரங்கில் இசைக் கலைஞர் சிதம்பரம் எஸ். ஜயராமன் அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் தமிழகப் பொதுப்பணி அமைச்சர் திரு கருணாநிதி வாழ்த்துரை வழங்குகிறார்.


3. ரஷ்ய சைத்ரீகர் செம்யோன் கமிகோவ் அவர்களது சித்திரக் கண்காட்சியைச் சர்க்கார் கலைக் கல்லூரியில் தமிழகப் பிரதம நீதிபதி திரு அனந்தநாராயணன் தொடங்கி வைத்தார்.

4. தமிழ்நாடு பெயர் அமைப்பு விழா பாலர் அரங்கத்தில் டிசம்பர் 1ந் தேதி விமரிசையாக நடைபெற்றது. அறுவைச் சிகிச்சைக்குப் பின் அறிஞர் அண்ணா கலந்துகொண்ட முதல் கூட்டம் இது.

5. கல்கத்தா ராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி வீரேசுவரானந்தா சென்னை தியாகராய நகர் ராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப் பள்ளியின் வடக்குப் பிரிவில் விஞ்ஞானப் புதுக் கட்டடத்தைத் திறந்துவைத்துப் பேசினார்.

6. கூட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்களும், பிரமுகர்களும்.









சித்தம் கவர்ந்த சோவியத் கலை

மொழி வேற்றுமை, இன வேற்றுமை, நிற வேற்றுமை, அரசியல் கோட்பாடுகளில் வேற்றுமை முதலிய எல்லாவிதமான வேற்றுமைகளையும் மறந்து பல நாட்டு மக்களும் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளப் பெருதவியா யிருப்பது கலை ஒன்றே.

சென்ற மாதம் சென்னைக்கு வந்திருந்த சோவியத் நடனக் குழுவினரின் நடன நிகழ்ச்சிகள் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் மூன்று நாட்கள் நடைபெற்றன. வண்ண வண்ண உடையுடுத்திப் புத்தம் புது மலர்களாகக் காட்சியளித்த நடன நங்கையர்களின் தோற்றம் விண்ணகத்திலிருந்து மண்ணகத்தில் இறங்கித் துள்ளிக் குதிக்கும் விண்மீன்களோ என நினைக்கும்படி இருந்தது. அரங்கத்தின் பின்னணியாகத் திகழ்ந்த சிவப்புத்திரை செவ்வானமாகத் துலங்கியது. நடனக் காட்சிகளுக்கு ஏற்றவாறு ஒலித்த ஹார்மோனியம், பியானோ வாத்தியங்களின் இசை அரங்கில் எழும்பி, மண்டபம் முழுவதும் நிறைந்தது.

ஒரு தந்தநிற ஆண் மகன், ஒரு தங்கநிறப் பெண்ணைப் பதுமைபோல் தன் இச்சைப்படி தூக்கியெறிந்து விளையாடியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அவர்கள் ரப்பர்ப் பொம்மைகளைப்போல் துள்ளித் துள்ளிக் குதித்து விநோதமான 'போஸ்'களில் நின்றது விசித்திரமா யிருந்தது. ஒவ்வொரு நடன நிகழ்ச்சியின் முடிவிலும் ரசிகப் பெருமக்கள் எழுப்பிய கரகோஷ ஆரவாரம் நூற்றாண்டுவிழா மண்டபத்தையே அதிர வைத்தது.

காகஸஸ், உக்ரேன் முதலிய பல்வேறு நாட்டு கிராமிய நடன நிகழ்ச்சிகள் அதியற்புதமா யிருந்தன. தாள வாத்தியக்காரர் ஒருவர் தமது சிறு மேளத்தைக் கையில் வைத்துக்கொண்டு என்ன பாடு படுத்திவிட்டார்! இதில் இரட்டை மேளம் வேறு! வேல்விழி நங்கை யொருத்தி மின்னலாய்த் தோன்றி அந்தத் தாளவாத்திய ஒலிக்கேற்ப நடனமாடித் தன் எழில் கரங்களினால் அவ்வாத்தியத்தில் 'சாப்'பும் கொடுத்து யாவரையும் பிரமிக்க வைத்தாள்.

ரஷ்ய நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த இருபத்தெட்டு நடனக்காரர்கள் இந்தக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள். இக்கலைஞர்களில் பதினொருவர் அன்ன நடையும், மின்னல் இடையும் கொண்ட மெல்லியலார். ஒவ்வொரு நடன நிகழ்ச்சியிலும் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகப் பங்கேற்று நடனம் ஆடி அரங்குக்கு அழகைச் சேர்த்தனர்.

தள்ளாடித் தளர்நடை போடும் கிழவன் ஒருவன் பருவத் துடிப்பில் துள்ளி விளையாடும் ஒரு குமரிப் பெண்ணிடம் காதல் புரிய முயலும் காட்சி பிரமாதமாக இருந்தது. ரசிகப் பெருமக்களின் பேராதரவான கரகோஷமும் அந்த நிகழ்ச்சிக்குத்தான் அமோகமாகக் கிடைத்தது.

கலை நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் ரஷ்யக் கலைஞர்களைப் பாராட்டி, கலைச் சிறப்பு மிளிரும் ஒரு நடராஜர் சிலையைப் பரிசாக அளித்தார்.

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் சார்பில் இந் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

குழலா, குயிலா?

ஸ்ரீமதி சிக்கில் குஞ்சுமணி வேங்கடராமனும் ஸ்ரீமதி சிக்கில் நீலாவும் சேர்ந்து வாசிக்கும் புல்லாங்குழல் கச்சேரியைச் சில மாதங்களுக்குமுன் முதன் முறையாகக் கேட்டேன். ஆனந்தக் களிப்புடன் இந்த இரு சகோதரிகள் இசைக்கும்போது உதய காலத்தில் இரு குயில்கள் கலகலத்வனியிடுவது





போலவே இருந்தது. ஆரம்பத்தி லிருந்து முடிவுவரை இந்தக் கலகலத்வனிதான்.

ரேடியோப் பெட்டியில் 'மாஜிக் ஐ' என்று ஒன்று உண்டு. வானொலி நிலையத்தின் அலை நீளத்தை வெகு சரியாகப் பிடிக்கும்போதுதான் அந்த 'மாஜிக் ஐ' சிறு துடிப்புக் கூட இன்றிப் பளிச்சென்று நிற்கும். ஸ்வர ஸ்தானங்களை அப்பழுக்கின்றி இவ்வாறு பளிச்சென்று பிடிப்பதைக் காட்ட ஒரு 'மாஜிக் ஐ' இருந்தால், அது இவர்களின் கச்சேரி முழுதும் ஓர் அணு மாத்திரமும் சலனமடையாமல் ஒளிரும் எனலாம். அப்பப்பா, எவ்வளவு கனீரென்று ஸ்வர ஸ்தானங்களைப் பிடித்துவிடுகிறார்கள்! கனீரென்று இருந்தாலும் வலி உண்டாக்குவதில்லை; கனுக்கைச் சொடுக்கி விடுவதுபோல் இதமாகவே இருக்கிறது. கற்பனை வளத்துக்கும் குறைவேயில்லை. குழல் நாதமோ கம்மென்று சந்தன வத்தி ஏற்றி வைத்தாற் போலிருக்கிறது. சகோதரிகளின் வாசிப்பில் உள்ள ஒற்றுமை அதிசயமானது. இரண்டு வியக்திகளுக்குள் நிலவும் இந்த அந்நியோந்நியத்தை ரசிப்பதே இன்பமாயிருந்தது.

ஆனாலும் மனம் நிறைந்ததாகச் சொல்ல முடியவில்லை. நண்பகல் போதில், எங்கும் அரவம் அடங்கியிருக்கும்போது பரம தீனமாக, மகா சோகமாகக் குயில் குரல் எழுப்புமே! அதையும் இந்தக் குழலிசையில் கேட்க முடியவில்லையே என்ற தாபம் ஏற்பட்டது. மத்திம காலத்தின் விருவிருப்பும், அடுக்கடுக்கான ஸ்வரப் பிரஸ்தாரங்களின் பரபரப்பும், ரவை ஜாதிகளின் பளபளப்பும், தார ஸ்தாயிக்கே உரிய நரம்பைக் கிண்டும் கிளுகிளுப்பும் மட்டும் சங்கீதமாகி விடுமா? இவ்வளவு லாகவமான கையும், அழுத்தமான ராக — லய ஞானமும் உள்ள இச் சகோதரிகள் விச்ராந்தியாக வாசிப்பதன் சௌக்கியத்தையும், மந்தர ஸ்தாயியின் நாதபூரிதத்தையும் உணர்ந்துவிட்டால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்று எண்ணத் தோன்றியது. ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் விழாவில் தி. நகர் கிருஷ்ணகான சபாவில் இவர்கள் கச்சேரி செய்வதை அறிந்ததும் மிக சந்தோஷமாக இருந்தது. தீக்ஷிதர் கிருதிகளுக்குரிய விலம்பமும் விச்ராந்தியும் இவர்களது ஞானத்தைப் போஷித்து வளர்க்கும் என்ற நம்பிக்கையுடன் சென்றேன். நம்பிக்கை பெருமளவுக்கு நிறைவேறிவிட்டது. ஹைமவதி, த்விஜாவந்தி, சங்கராபரண ஆலாபனைகள் கனிந்த ஞானத்தை, கௌரவமான ஞானத்தைக் காட்டின. மனத்தைக் கிளறி விடுவதை விடச் சமனம் செய்வது எவ்வளவு உயர்ந்தது என்று அநுபவிக்க முடிந்தது.

இன்னும் ரக்தி ராகங்களை நிறைய வாசிக்க வேண்டும். லய வித்தியாசங்களில் கட்டுப்பாடு வேண்டும். 'இன்னும் வராதா?' என்று ஏங்குகிற நிலையில் நிறுத்திவிட வேண்டும். இனிப்புப் பண்டங்களுக்கு நல்ல வர்ணம் ஏற்படச் சிட்டிகை கேஸரிப் பவுடர்தான் போடுவார்கள். அது போன்ற கேஸரிப் பவுடர்கள் சங்கீதத்திலும் உண்டு. அவற்றை அளவோடு உபயோகிக்க வேண்டும். 'பாபுலாரிட்டி'யைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ''இதுதான் சத்தியம்'' என்ற திட பிரக்ஞை கலைஞருக்கு உண்டாகிவிட்டால் அந்த உறுதி உணர்வே தன்னுல் ஜனங்களை ஆகர்ஷிக்கும். சந்தேகமில்லை.

சத்திய தரிசனம் செய்வது சாமானியமல்ல. ஆனால் அந்த அசாமானியத்தை எய்தும் தகுதி சிக்கில் சகோதரிகளுக்கு நிச்சயமாக இருக்கிறது என்பதாலேயே இந்தத் தாபத்தை வெளியிடத் தோன்றுகிறது. இன்று இவர்கள் மேதைகளாக இருக்கிறார்கள். கலைஞர்களாக ஆகவேண்டும்; ஆக முடியும். அதற்குக் கலைவாணி அருள் புரிவாளாக !

— **கன்யா**

அமிர்தாஞ்சனம்



இதமாகவும்
துரிதமாகவும்
ஜலதோஷம் இருமல்
இவைகளைப் போக்கி
நிம்மதியளிக்கிறது




- அமிர்தாஞ்சனம் எந்த விதத்திலும் தீங்கு செய்யாது. வலியுள்ள இடத்தில் சிறிதளவே தடவினால் போதும்.
- அமிர்தாஞ்சனம் வலியைத் துரிதமாகப் போக்குகிறது. ஏனெனில் இதில் சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் உள்ளன.
- அமிர்தாஞ்சனம் தடவிக் கொண்டால் இதமான நிம்மதியளிக்கிறது. ஏனெனில் இதில் மெந்தால், கற்பூரம் ஆகியவை கலந்துள்ளன.
- அமிர்தாஞ்சனம் சிக்கனமானது. ஏனெனில் ஒரு பாட்டில் மருந்தை வெகுநாட்களுக்கு உபயோகிக்கலாம்.

அமிர்தாஞ்சனம் லிமிடெட்
மதராஸ் . பம்பாய் . கல்கத்தா
புது டில்லி . ஹைதராபாத்



75
வருடங்களுக்கும்
மேலாக
புகழ்வாய்ந்தது.

AMR - 12 Tam



பம்பாயின் ரஸிகப் பெருமக்கள், இன்றைய முதுபெரும் சாஹித்திய கர்த்தா பிரம்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களைப் பாராட்டி, நிதி வழங்குவதற்காக எடுத்த முயற்சி அற்புதமாகப் பலிதமாயிற்று. நவம்பர் 29ந் தேதி பம்பாய் ஷண்முகானந்த சபையில் சிவன் அவர்களுக்குக் கோலாகலமாகப் பாராட்டு விழா நடந்து, ரூ. 15000 நிதியும் வழங்கப்பட்டது.



1. விழாவுக்குத் தலைமை வகித்த திரு நாராயண மேனன் பேசுகிறார். விழாவில் பங்கெடுத்துக் கொண்ட ஸ்ரீ ரங்கராமானுஜம், ஸ்ரீ டி. வி. ராமானுஜம், கௌரவ விருந்தினரான ஸ்ரீ லக்ஷ்மண சாஸ்திரி ஜோஷி, விழாவுக்குக் காரணகர்த்தரான ஸ்ரீ நடராஜன்.



2. திரு கல்யாணசுந்தரம் அவர்களால் வாசித்தளிக்கப்பட்ட வாழ்த்துப் பத்திரத்தை, விழாவுக்குத் தலைமை வகித்த ஸ்ரீ வி. கே. நாராயண மேனன் அவர்கள் பிரம்மஸ்ரீ சிவன் அவர்களுக்கு அளிக்கிறார்.

3. ரஸிகர்களைத் தமது பக்திமயமான சாஹித்யங்களால் மகிழ்விக்கும் பிரம்மஸ்ரீ சிவன் அவர்களும் அவரது புதல்வியும்.

4. விழாவுக்கு வந்திருந்த ரஸிகர் கூட்டத்தில் ஒரு பகுதி.





சீரணிப் படையும் சீரான பாதையும்



மேலே: சீரணிப் படையினரின் சிறப்புமிக்க பணி.
இங்கே: பூர்த்தியான பாலமதி மலைப்பாதை...

தமிழக அரசினர் தமது மாவட்டங்களின் திட்ட வளர்ச்சிகளைப் பத்திரிகையாளர்களுக்கு நேரடியாக விளக்கிக் காட்டுவதற்காக ஒரு சுற்றுப் பயணத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இதில் முதல் கட்டமாக வட ஆர்க்காடு, தர்மபுரி, சேலம், கோவை, நீலகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களின் வளர்ச்சிகளை ஏழு நாட்களில் கண்டறியும் வகையில் ஆய்வுப் பயணம் அமைக்கப்பட்டிருந்தது.


ஒரு நாள் காலை ஒன்பது மணி அளவில் 'டீலக்ஸ் கோச்' பத்திரிகையாளர்களையும், அரசாங்க அலுவலர்களையும் சுமந்து போகிறோம் என்ற பெருமிதத்துடன் கம்பீர நாதமிட்டுக் கிளம்பிற்று.

மாவட்ட ஆணையர்களைச் சந்தித்தல், ஊராட்சி ஒன்றியங்களின் வரவேற்புகளில் கலந்து கொள்ளுதல், சீரணிப் படையினரின் சாதனைகளைப் பார்வையிடுதல், அந்தந்த வட்டாரப் பகுதி வளர்ச்சித் திட்டங்களைக் காணுதல் இவையே பயணத்தின் முக்கிய குறிக்கோள்கள். இவற்றுள் முதலாக இடம் பெறுவது சீரணிப் படையினரின் வேலைகளைக் காணுவதுதான். தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பு கழகத்திடம் வந்த பிறகு பொது மக்களின் காதில் அடிக்கடி விழும் வார்த்தை இந்தச் 'சீரணிப் படை'. பல்வேறு மாநிலங்களிலும் பல்வேறு பெயர்களில் 'படைகள்' இருந்தாலும்கூடத் தமிழக அரசின் சீரணிப் படை சீரிய பணிகளுக்காகவே உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தப் பயணத்தில் நன்கு தெரிந்து கொள்ள முடிந்தது.

சமூகச் சீர்திருத்தங்களில் ஆர்வம் கொண்டுள்ளவர்களை ஒன்று திரட்டி உழைப்பை நல்கக் காத்திருக்கும் அவர்களைப் பல நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளுவதே இந்தத் திட்டத்தின் நோக்கம். இது அப்படியொன்றும் திடீரென்று உருவாக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புமல்ல. காங்கிரஸ் ஆட்சியிலும் இதே முறை (வேறு பெயரில்) செயல்படுத்தப்பட்டதுதான். ஆனால் கால ஓட்டத்தில்

எப்படிப் பல கடமைகளைக் காங்கிரஸார் மறந்து செயல்பட்டார்களோ அதே போல இந்தச் 'சிரமதான'ச் செயல்முறையும் ஊக்குவிக்கப்படாமல் போயிற்று. புதிதாக ஆட்சிக்கு வந்த கட்சியினர் களிம்பேறிப் போன இந்தத் திட்டத்தைப் புளி போட்டு விளக்கிப் புதுப் பெயரும் கொடுத்துப் பொலிவு உண்டாக்கிவிட்டார்கள். ஓய்வு நேரத்தில் ஊதியமின்றி நாட்டுக்காக உழைக்கக் காத்திருக்கும் ஆண்-பெண் இருபாலரையும் இப்படை வரவேற்றுப் பயன்படுத்திக்கொள்ளுகிறது. இதிலும்கூடக் குறை





மேலே: பத்திரிகையாளர்களை வழியனுப்பி வைத்தார் மாண்புமிகு அமைச்சர் திரு மு. கருணாநிதி.
இங்கே: மலைப்பாதை வேலை துரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

இல்லாமல் இல்லை. சிரணிப்படையில் 'கட்சி' புகுந்து கொஞ்சம் காரியத்தைக் கெடுப்பதாகவும் ஒரு பேச்சு இருக்கிறது. உழைப்பை நல்க விரும்பும் மாற்றுக் கட்சி நபர்களுக்கு இப்படையில் இடமில்லை என்பதே அக்குறை. பொதுப்பணியாகிய இதில் நாட்டுப் பற்று கொண்ட யாருக்கும் இடமிருக்க வேண்டும் என்பது மறுக்க முடியாததைப் போலவே ஒற்றுமையைக் குலைக்கும் தீயசக்திகள் எதற்கும் இதில் இடம் கிடைக்காது என்பதையும் மறக்காமல் சொல்ல வேண்டியிருக்கிறது.

சிரணிப் படையினர் செய்யும் வேலைகள் என்ன? குளம் கிணறுகளைத் தூர் எடுத்து ஆழப்படுத்துதல், புதிய கால்வாய்கள், குளம், கிணறு வெட்டுதல், சாலைகள் அமைத்தல், பள்ளிக்கூடம் கட்டும் வேலையில் உதவி செய்தல், பள்ளிகளுக்கு வெள்ளையடித்துச் சுத்தப் படுத்துதல், பள்ளிகளில் திருக்குறள் பாக்களை எழுதுதல், இப்படிப் பலப்பல. தீண்டாமை ஒழிப்புக்குப் பாடுபடுதல், சமூகக் கேடுகளைக் களைவது என்றும் சிரணிக்குப் பல பொறுப்புக்கள் உண்டு.

வட ஆர்க்காடு மாவட்டம் சிரணிப் படையினரின் பணிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறது. இதற்கு இம் மாவட்டத்தின் ஆட்சியாளர் திரு பி. எம். பெல்லியப்பா அவர்களின் உற்சாகமும் ஈடுபாடும் ஓரளவு காரணம். வட ஆர்க்காடு மாவட்டத்தின் சிரணிப் படையில் 2,500 தொண்டர்கள் இருக்கிறார்கள். 138 வேலைகளுக்குத் திட்டங்களிட்டு அதில் இந்த ஓராண்டு காலத்தில் 114ஐ முடித்திருக்கிறார்கள் என்றால் பாராட்டத்தானே வேண்டும். வேலையின் மதிப்பு ரூ. 1,37,871. அரசாங்கம் வழங்கியுள்ளதோ ரூ. 67,220தான்.

சிரணிப் படையின் வேலையைக் காணும் முதல் வாய்ப்பு எங்களுக்கு இம் மாவட்டத்தின் சிறுகரும்பூர் பஞ்சாயத்தில் கிட்டியது. ஐம்பத்து நாலே நாட்களில் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக்கூடத்தைக் கண்டு மகிழ்ந்தோம். 355 மாணவ மாணவிகள் பயிலும் இந்த உயர்நிலை தொடக்கப்பள்ளி கட்டுவதற்கான அரசாங்க மான்யம் 4000 ரூபாய் தானும். கட்டிடத்தின் மதிப்பு ரூ. 10,050. பொதுமக்கள் நன்கொடை அளித்திருக்கின்றனர். சிரணிப் படையினர் தங்கள் உழைப்பை நல்கி இதை உருவாக்கி யிருக்கின்றனர்.

"இதற்கு மேலே போகாது ஸார், நமது டீலக்ஸ் கோச்" என்றார் தமிழக அரசு போக்குவரத்துப் பெருந்துவின் இயக்குனர் (சிரமமாக இருக்கிறதா? வேறொன்றுமில்லை. பஸ் டிரைவருக்குத்தான் இத்தனை விருதுகள்!) நாங்கள் அடுத்துப் போய்ப் பார்க்க வேண்டிய பகுதி

கடல் மட்டத்திலிருந்து 1840 அடிகள் உயரத்தில் உள்ளதோர் திட்டப் பகுதி. வேலூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ளது. பாலமதி என்னும் சின்னக் கிராமம். இதன் ஜனத்தொகை 972தான். வேலூரின் கிழக்கே மூன்று மைல் தூரத்தில் ஒரு மலை உச்சியில் இருக்கிறது. இம்மலையின் மறு பக்கத்தில் ஐந்தாறு கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராமங்களை யெல்லாம் இணைக்கும் ஒற்றையடி மலைப்பாதையுண்டு. ஒவ்வொரு நாளும் இங்குள்ள கிராமத்து மக்கள் காய்கறி, தயிர், பால் முதலியவைகளைத் தலையில் சுமந்தபடி வேலூர் டவுனை நோக்கிச் சாரி சாரியாக வருவது அன்றாடம் காணும் காட்சி தான். மலையுச்சியில் பக்தர்களிடையே பிரபலமாகியுள்ள சக்தி வாய்ந்த ஆஞ்சநேயர் கோயில் வேறு இருக்கிறது. ஞாயிற்றுக் கிழமைகளில் வேலூர் மக்கள் இந்தக் கோயிலுக்கு ஏராளமாகச் செல்வது வழக்கம். இவர்களெல்லாம் இந்தப் பாலமதி கிராமத்து வழியாகத்தான் போக வேண்டும். இப்படிக் கிராம மக்களுக்கும் வேலூர் நகர வாசிகளுக்கும் பயனுள்ளதோர் பகுதியில் போக்குவரத்தைச் சுலபமாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த கலெக்டர் பெல்லியப்பா நல்லதொரு மலைப்பாதை அமைக்கத் திட்டமிட்டு அதற்காக ஒரு கமிட்டியையும் நிறுவினர். சாத்தியக் கூறுகளை ஆராய்ந்த பின் மலைப்பாதை அமைக்க (தார் போட்ட ரோடாக) ரூ. 2,38,000 செலவாகுமென்று எஸ்டிமேட் கொடுக்கப்பட்டது. ஆர்க்காடு அல்லது திமிரி ஆகிய ஊர்களைச் சுற்றிக் கொண்டு கரடு முரடான ஒற்றையடி மலைப் பாதையில் 20 மைல்கள் பிரயாணம் செய்து வேலூரை அடையும் வேதனையைக் குறைத்து ஒன்றரை மைலில் பிரயாணத்தை முடித்துக் கொடுக்கும் இந்தப் பாலமதி மலைப் பாதையின் அவசியத்தை யார்தான் மறுக்க முடியும்? வேலூர், திமிரி, கன்னியம்பாடி ஆகிய மூன்று பஞ்சாயத்து யூனியன்களின் சார்பில் கலெக்டர் பெல்லியப்பா இந்த வேலையைத் துணிந்து தொடங்கி விட்டார். எந்தெந்த வகையிலெல்லாம் இதற்குப் பணம் ஒதுக்க முடியுமோ அத்தனையையும் பெற உத்தேசித்துள்ளார். வேலூர், திமிரி பஞ்சாயத்து யூனியன்கள் ஒவ்வொன்றும் ரூ. 25,000மும், கன்னியம்பாடி 20,000மும் கொடுத்துள்ளன. சிரணிப் படைக்கான அரசாங்கப் பணத்திலிருந்து இம்மூன்று பஞ்சாயத்து யூனியன்களின் சார்பாகவும் ரூ. 13,000த்தை இந்தத் திட்டத்துக்காகக் கொடுத்திருக்கிறார் கலெக்டர். 7-7-68ல் தொடங்கப்பட்ட வேலை ஆச்சரியப்படத் தக்க வகையில் முன்னேறி வருகிறது. மண் வேலையும் பாறைகளை உடைத்தலும் நான்கு பர்லாங் வரை முடிந்து பாதை பூர்த்தியாகி விட்டது. 5, 6, 7வது பர்லாங்கின் வேலைகள் பாலமதி கிராம மக்களாலும் சிரணிப் படையினராலும் மேற்கொள்ளப்பட்டு நடந்து வருகின்றன. வரும் பொங்கல் திருநாளுக்கு இந்தப் புதிய மலைப் பாதை போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டு விடுமாம். சிரணிப் படையினரின் குறையாத ஊக்கமும் சலியாத உழைப்புமே இதைச் சாதித்திருக்கின்றன என்னும் போது தமிழக அரசு பெருமைப்படக் கூடாதா?

கலெக்டர் பெல்லியப்பா பாலமதி மலையுச்சியை உல்லாசப் பயணிகளுக்கானதோர் பகுதியாக்க உத்தேசித்திருக்கிறார். கண்கவர் உத்தியானவனம், படகு ஓட்டுவதற்கான ஏரி, தொங்கு பாலம் இப்படி ஏதேதோ திட்டமெல்லாம் பெல்லியப்பா தீட்டிக் கொண்டிருக்கிறார். அவர் எண்ணம் ஈடேற வாழ்த்துவோம்.

அன்று பகல் வேலூர் ஜவான்ஸ் பவனில் உணவருந்தினோம். அதென்ன ஜவான்களின் பவனம்? கேள்விக்கு விடை அங்கு சென்ற போது கிடைத்தது. சென்னை மாநிலத்தில் உள்ள மற்ற எல்லா மாவட்டங்களைக் காட்டிலும் ராணுவத்துக்குச் சேவைபுரிய பெருவாரியான ஜவான்களை அனுப்பியுள்ள பெருமை வட ஆர்க்காடு மாவட்டத்தையே சேரும். 16400 ஜவான்களை இம்மாவட்டம் நமது ராணுவத்துக்கு அனுப்பி யிருக்கிறது என்றால் சாமானியமா? அதுமட்டுமல்ல, சரித்திர காலத்திலிருந்தே வேலூர் சிப்பாய்களுக்குப் புகழ் பெற்ற ஊராயிற்றே! ஆகவே இம்மாவட்டத்தில் ராணுவத்தினரின் குடும்பங்கள் அதிகம்.

இக் குடும்பங்களின் நலனுக்காகப் பாடுபட ஒரு சங்கம் அமைத்தார்கள். இதன் நோக்கம் யுத்தத்தில் உயிர் துறந்த ராணுவத்தினரின் குடும்பங்களுக்கு உதவுதல். அங்கஹீனமுற்ற வீரர்களுக்குச் செயற்கை உறுப்புகள் வழங்க உதவுதல். ராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுடைய குழந்தைகள் கல்வி கற்பதற்குப் பண வசதி செய்தல், தொழில் புரிய வட்டி இல்லாமல் கடன் கொடுத்தல், திருமணம், ஈமச்சடங்கு ஆகியவற்றுக்குத் தகுந்த அளவில் பண உதவி செய்தல் முதலியன. இவற்றுக்கெல்லாம் பணம் வேண்டாமா? இந்த நல்ல காரியங்களுக்குப் பொருளீட்டுவதற்காகத் தோன்றியதுதான் ஜவான்ஸ் பவன். 27,140 சதுர அடியில் 4.61 லட்ச ரூபாய் செலவில் ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டினார்கள். இவ்வளவு பெரிய கட்டிடத்தைப் பொதுக் காரியங்களுக்கு வாடகைக்கு விடுவதென்றும் தீர்மானித்தார்கள். வேலூரின் அத்தியாவசியத் தேவையான கூட்டுறவுச் சிறப்பு அங்காடி இங்கு அமைக்கப்பட்டது. முதல்தரமானதோர் உணவு விடுதியும் இதில் இடம் பெற்றது. இவ்விரண்டும் வருட வாடகையாக ரூ. 78,000 தருகின்றன. இந்தத் தொகை ஜவான்களின் குடும்ப நலனுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.


வேலூர் நகரம் தனக்கு ஓர் அழகிய விஸ்தாரமான விளையாட்டு அரங்கம் வேண்டுமென்று வெகு நாளாகத் தவம் கிடந்து வந்தது. ரிஸர்வ் போலீஸ் மைதானத்தில் வெகு விரைவிலேயே வேலூரின் ஸ்டேடியத் திறப்பு விழா நடக்கப் போகிறது. வேலை வெகு துரிதமாக நடைபெற்று வருகிறது. ரூ. 1.65 லட்சம் இந்த ஸ்டேடியத்தைப் பூர்த்தியாக்கத் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்க மானியமும் முனிஸிபாலிடியாரின் தாராளமும் இதற்கு உதவுகின்றன.

—கௌசிகன்

சிறுவர் விருந்து



தயாரிப்பு: வாண்டு மாமா



அருகில் உள்ள படத்தில் மூன்று உருவங்கள் உள்ளன. 1-ஒரு நீண்ட சதுரம்; 2-ஒரு சதுரம்; 3-ஒரு முக்கோணம். அவற்றில் சில எழுத்துக்களும் உள்ளன. கீழே உள்ள கேள்விகளுக்குச் சட்டென்று விடை கூறவேண்டும்.

(1) எந்த எழுத்து 2ல் மட்டும் இருக்கிறது? (2) எந்த எழுத்து 1ல் மட்டும் உள்ளது? (3) எந்த எழுத்து மூன்று உருவங்களுக்குள்ளும் இருக்கிறது? (4) எந்த எழுத்து உருவம், 1, 3ல் இல்லாமல் உருவம் 2ல் மட்டும் உள்ளது? (5) எந்த எழுத்து உருவம் 2, 3லும் ஆனால் உருவம் 1ல் இல்லாமல் இருக்கிறது? (6) எந்த எழுத்து உருவம் 1, 2லும் ஆனால் 3வது உருவத்திலுள் இல்லாமல் இருக்கிறது?

பிறந்தது எப்படி ?

உடல் நலம் சரியில்லை என்று நாம் டாக்டர்களிடம் போனதும் முதலில் அவர் செய்வதென்ன? ஸ்டெதாஸ்கோப்பைக் காதில் மாட்டிக்கொண்டு நமது இதயத் துடிப்பைக் கவனிக்கிறார். தட்டிப் பார்ப்பதும், உற்றுக் கேட்பதும் மருத்துவத் தொழிலுக்கு இன்றியமையாத ஒன்று. இவைகளில் இந்த உற்றுக் கேட்கும் முறையை முதலில் மருத்துவ உலகுக்கு வழங்கியவர் ரெனி தியபில் ஹயாஸிந்த் லானக் என்ற பிரெஞ்சு டாக்டர்தான். இவருக்கு இந்த யோசனை தோன்றியது எப்படி? அது ஒரு ரசமான சம்பவம்.


முப்பத்தைந்தாவது வயதில் நெக்கர் ஆஸ்பத்திரியின் டாக்டராகப் பணியாற்றி வந்த லானக், 1816ல் ஒரு நாள் இதய நோயால் அவதிப்பட்ட பருத்த உடலுடைய ஒரு பெண்மணியின் நினைவாகவே நடந்து போய்க் கொண்டிருந்தார். அவளது நோயை எப்படிப் பகுத்தறிவது என்பதே அவரது கவலை. அப்போது தூரத்தில் சில குழந்தைகள் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார். சிந்தனையிலிருந்த அவரது கவனம் விளையாடிக் கொண்டிருந்த அந்தக் குழந்தைகளின் செயலில் லயித்தது. குவிக்கப்பட்டிருந்த மரக் கட்டைகளிடையே விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளில் ஒன்று ஒரு பெரிய மரத்தின் ஒரு பக்கத்தில் காதை வைத்துக் கொள்ள மறு பக்கத்தில் வேறொரு குழந்தை கையால் தட்டி ஒலி உண்டாக்கிறான். இந்தப் பக்கத்திலுள்ள சிறுவன் அதைக் கேட்டு மகிழ்ந்து குதித்தான். மரத்தின் ஒரு பக்கத்தில் உண்டாக்கிய ஒலியை மறு பக்கத்தில் கேட்டு மகிழ்ந்த இந்தக் குழந்தைத்தனம் லானக்கிடம் ஒரு புதிய விழிப்பை உண்டாக்கிற்று. நெக்கர் ஆஸ்பத்திரிக்கு ஓடினார்.

"ஒரு காகிதத்தைக் குழல் போலச் சுருட்டிக் கொண்டேன்" - இப்படித் தனது புத்தகத்தில் லானக் எழுதுகிறார். "அதன் ஒரு முனையை நோயாளியின் இதயத்திலும் மறு முனையை என் காதிலும் பொருத்தி உற்றுக் கேட்டேன். என்ன ஆச்சரியம்! இதுவரை இத்தனை தெளிவாக, சுலபமாக இதயத்துடிப்புகளை நான் கேட்டதே இல்லை!"

காகிதக் குழல் உபகரணத்தில் படிப்படியாகப் பல மாற்றங்களைச் செய்தார். ஸ்டெதாஸ்கோப் என்ற பெயரும் சூட்டினார்.

ஆரம்பத்தில் இவரது கருவியைக் கண்டு எள்ளி நகையாடினார்கள். சொந்த நாட்டில் நல்ல வரவேற்பு இல்லை. ஆனால் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் வட அமெரிக்காவிலும் இதற்கு அமோகமான ஆதரவு இருந்தது. லானக்கின் கண்டுபிடிப்பில் படிப்படியான மாற்றங்களைச் செய்தார்கள். முடிவாக 1855ல் ஜார்ஜ் பிலிப் கேம்மான் என்ற நியூயார்க்கைச் சேர்ந்த டாக்டர் இன்று நாம் காணும் ஸ்டெதாஸ்கோப் போன்ற அமைப்பை உருவாக்கினார். இரு காதுகளிலும் செருகிக் கொண்டு கேட்கும் அமைப்பு அப்போதுதான் உருவாயிற்று.


மருத்துவ உலகுக்கு இன்றியமையாத சாதனமான ஒரு கருவி குழந்தைகளின் விளையாட்டுச் செயலிலிருந்து உருவாக்கப்பட்டது வியப்பாக இருக்கிறதில்லையா?



துப்புத்துலக்க வாரீகளா?

ரூபேரா பாங்கியில் கொள்ளை போய்விட்டது. பாங்கி சிப்பந்திகளில் இருவர் திட்டமிட்டு பல லக்ஷம் ரூபாய்களை 'அபேஸ்' செய்து கொண்டு அந்தர்த்தியானமாகி விட்டார்கள். இது போலீஸ் இலாகாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. போலீஸார் அவர்களைக் கண்டுபிடிப்பதில் மிக்க தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். அந்த மாகாணத்தை விட்டுத் தப்பிச் செல்ல முடியாதபடி தக்க முன்னேற்பாடுகள் செய்துவிட்டனர். போலீஸ் நாய்களின் உபயோகம் தெரியாத காலம் அது.

கையாடல் பேர்வழிகளைத் தொடர்ந்து வந்த போலீஸ், கடற்கரை ஓரமுள்ளதோர் கிராமத்துக்கு வந்ததும் ஒரு முடிவுக்கு வரும்படியாகி விட்டது. அங்குள்ள ஒரு குன்றை நோக்கி சென்ற பூட்ஸ் காலடிகள் அதன் உச்சிக்குப் போய் அப்படியே நின்றுவிட்டன. அந்தப் பூட்ஸ் காலடிகள் பணத்தை எடுத்துச் சென்ற காளியப்பன், கருப்பண்ண ஞுடையவைதான் என்பது உறுதி யாயிற்று. 'இனித் தப்ப வழி யில்லை, எப்படியும் பிடிபட போகிறோம் என்ற நிலையில் இரு வரும் இந்தக் குன்றின் உச்சியி லிருந்து அதன் கீழே இருநூறு



அடி ஆழத்தில் சீறிச் சிரிக்கும் கடலில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டு விட்டார்கள். ஆகவே இனி அவர்களின் உடலங்கள் கடற் கரையில் எங்கு ஒதுங்கி யிருக்கிறது என்பதைத்தான் தேட வேண்டும்' - இப்படி ரிப்போர்ட் எழுத லானார் இன்ஸ்பெக்டர் இளவழகனார். ஆனால் அருகிலிருந்த துப்பறியும் புலியான சி.ஐ.டி. சந்துரு, "இன்ஸ்பெக்டர் ஸார்! உங்கள் முடிவு தவறு. அவர்கள் தற்கொலை செய்துகொள்ளவில்லை. இந்தப் பகுதியில்தான் எங்கோ ஒளிந்து கொண் டிருக்கிறார்கள். மறுபடி பாத அடையாளங்களைப் பாருங்கள்!" என்றான்.

"இது காளியப்பனுடையது. சிறிய பாதம் கருப்பண்ணனுடையது. காளி நல்ல உயரம், தாட்டியான ஆள். கருப்பண்ணன் குள்ளமானவன்" என்றார் இன்ஸ்பெக்டர். "அப்படி யிருந்தும் கருப்பண்ணனை விடக் காளியப்பனின் காலடிகள் அருகருகே இருக்கின்றன. கால்களை அவன் எட்டப் போட வில்லை. இன்னொன்றையும் கவனியுங்கள் இன்ஸ் பெக்டர் ஸார்! கருப்பண்ணன் குதிகாலை அழுத்தி நடந்திருக்கிறான். ஆனால் காளியோ முன் விரல் களை அழுத்தி நடந்திருக்கிறான். இந்த வித்தியாசத்தில் சந்தேகம் ஏதும் தோன்றவில்லையா? அது போகட்டும். காளி, கருப்பண்ணனுக்குப் பின் னால் நடந்து போயிருக்கிறான் அது ஏன் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? ஏனென்றால் சில இடங் களில் காளியின் பாத அடையாளங்கள் கருப்பண்ண னின் பாத அடையாளத்தின் மீது பதிந்திருக்கிறது. ஆனால் கருப்பண்ணனின் பாதச் சுவடு அப்படி ஓர் இடத்தில் கூட மற்றதன்மேல் மிதிபடவில்லை. ஆகவே அவ்விருவரும் தற்கொலை செய்து கொள்ள வில்லை" என்று தன் முடிவுக்கான காரண காரி யங்களை விளக்கினான் சந்துரு. போலீஸ் திருப்தி அடைந்தது. தீவிர முயற்சிக்குப் பின் இருவரும் ஒரு வைக்கோல் போருக்குள் ஒளிந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. சந்துருவின் ஊகத்தை உங்களால் விளக்க முடியுமா?

முடியுமே !

நடந்தது இதுதான்: குன்றின் அடிவாரத்தை அடைந்ததும் கருப்பண்ணன் மட்டுமே உச்சிக்கு ஏறிப் போனான். அவன் கையில் காளியின் கால் பூட்ஸ்கள் இருந் தன. குன்றின் உச்சியை அடைந்ததும் கருப்பண்ணன் காளியின் பூட்ஸை மாட்டிக் கொண்டு தன் பூட்ஸைக் கையில் ஏந்தியபடி பின்பக்கமாகவே நடந்து அடிவாரத்துக்கு வந்து விட்டான். அடிவாரத்தில் பாதச் சுவடுகள் பதியத் தக்க மண் இல்லை. சிறிய பாதம் குதிகால் அழுந்தியும், பெரிய பாதம் விரல் பக்கம் அழுந்தியும் பதிவாகி யிருப்பதற்கான காரணம் என்ன? ஒரு மனிதன் முன் நோக்கிச் செல்லும்போது அவன் தனது குதிகாலை அழுத்தியே முன்னேறுவான். பின்புறமாக நடக்கும்போது முன் விரல்களை அழுத்திப் பதித்தே நடக்க முடியும். பெரிய காலடிகள் சில இடங்களில் சின்னக் காலடிகளோடு கலந்திருக்கிறது. இதுவும் பின்னோக்கி நடந்திருப்பதையே ஊர்ஜிதப்படுத்துகிறது. காளி உயரமாக இருந் தும் கருப்பண்ணனின் தப்படிகளை விடக் குறுக லாக வைத்திருக்கிறான். ஏன்? ஒரு மனிதன் பின் னோக்கி நடக்கும்போது முன்னேறத் தப்படிகளை விடக் குறுகலாகவே வைப்பான். தாங்கள் தற் கொலை செய்து கொண்டதாகப் போலீஸை நம்ப வைத்துத் தாங்கள் தப்புவதே அவர்கள் நோக்கம்.

விளையாட்டு (வளையம் வீச்சு)


சைக்கிள் 'எக்ஸ்பர்ட்'களுக்கு ஒரு சுவாரசியமான விளையாட்டு. இந்த விளையாட்டை ஆட ஆரம்பிக்குமுன் கன்னிப் பலகையில் ஒரு பெரிய போர்டு தயார் செய்து கொள்ள வேண்டும். பார்ஸல் வந்த ஏதாவது பெட்டியின் மேல் மூடியைக் கூட இந்தப் போர்டாகப் பயன்படுத்தலாம். இதில் வரிசைக்கு நாலு விதம் ஆறு வரிசையாக நான்கு அங்குல ஆணிகளைக் கால் பாகம் உள்ளே போகும்படி அடியுங்கள். ஆணிகள் உள்ள இந்த போர்டை ஒரு இடத்தில், தரையிலிருந்து ஐந்தடி உயரத்தில் ஒரு மரத்திலோ அல்லது கம்பத்திலோ பொருத்தி வையுங்கள்.

இனி விளையாட ஆரம்பிக்கலாம். ஒவ்வொரு 'சைக்கிளிஸ்டி'டமும் ரப்பர் வளையங்கள் (ரிங் டென்னிஸ் போல) அல்லது அது போல ஏதாவது வளையங்கள் நான்கு இருக்க வேண்டும். போர்டு பொருத்தப்பட்ட இடத்திலிருந்து இருபதடி தள்ளி சைக்கிளை மிதிக்க ஆரம்பித்து போர்டின் அருகே வந்ததும் வளையங்களை அந்த ஆணிகளில் வீசி மாட்ட வேண்டும். சைக்கிளை நிறுத்தக் கூடாது. யார் அதிகமான வளையங்களைக் குறி தவறாமல் மாட்டுகிறார்களோ அவர்களுக்கு 'வளைய மாட்டல் எக்ஸ்பர்ட்' என்று பட்டம் சூட்டுவோம்!



எங்கே, எது - விடை :

1-G, 2-H, 3-D,
4-BF, 5-A, 6-EC.




டன்லபில்லோ வசதி மிக்கது

அதன் விலை நீங்கள் நினைப்பதைவிடக் குறைவு!

லட்சக்கணக்கான மக்கள் அதைப் பயன்படுத்துவதில் வியப்பொன்றுமில்லை

- டன்லபில்லோ இதர குஷன்களை விட நீடித்திருக்கிறது. அதன் அமைப்பும், இளக்கமும் மாறுவதில்லை.
- டன்லபில்லோ தனிநபர்களின் உபயோகத்திற்கேற்ப விதவிதமான சைஸ்களில் கிடைக்கிறது.
- டன்லபில்லோ ஆண்டு முழுவதும் குளிர்ச்சியாகவும் சௌகரியமாகவும் இருக்கிறது. உபயோகிக்கும்போது உள்ளூர ஊடுருவிச் செல்லும் லட்சக்கணக்கான 'செல்'கள் மூலம் அது சுவாசிக்கிறது.
- டன்லபில்லோ துண்டித்து எந்த சைஸிலும், அமைப்பிலும் உருவாக்கிக் கொள்ள முடியும்.
- டன்லபில்லோ சுகாதாரமானது. கிருமிகள் அண்டாதது. ஊறு விளைவிக்கும் பூச்சிப் பொட்டுக்களை வெளியேற்றி விடுகிறது.



டன்லப் இந்தியா லிமிடெட்

ஒரிஜினல் லேடக்ஸ் ஃபோம்

டன்லபில்லோ

குஷன்கள் • தலையணைகள் • மெத்தைகள்

103C/5 TAM R.

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி



நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

நட்புக்கு அழகா?

வந்தியத்தேவனுடைய முதல் எண்ணம், எப்படியாவது கந்தமாறனைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான். ஆனால் அவனைக் காப்பாற்றும் பிரயத்தனம் முதலில் செய்தால், அவனுடைய கதிதான் நமக்கும் ஏற்படும். ஆகையால் இந்தக் கொடூரக் காவலனை முதலில் சரிப்படுத்த வேண்டும். எனவே, பாய்ந்து சென்றவன் காவலனுடைய கழுத்தில் தன்னுடைய ஒரு கையைச் சுற்றி வளைத்துக் கொண்டான். இன்னொரு கையால் தீவர்த்தியைத் தட்டி விட்டான். தீவர்த்தி தரையில் விழுந்தது. அதன் ஒளிப் பிழம்பு சுருங்கிப் புகை அதிகமாயிற்று.

காவலனுடைய கழுத்தை ஓர் இறுக்கு இறுக்கி வந்தியத்தேவன் தன் பலத்தையெல்லாம் பிரயோகித்து அவனைக் கீழே தள்ளினான். காவலனுடைய தலை சுரங்கப் பாதையின்





சுவரில் மோதியது. அவன் கீழே விழுந்தான். வந்தியத்தேவன் தீவர்த்தியை எடுத்துக்கொண்டு அவன் அருகில் சென்று பார்த்தான். செத்தவனைப் போல் அவன் கிடந்தான். ஆயினும் முன் ஜாக்கிரதையுடன் அவன் அங்கவஸ்திரத்தை எடுத்து இரண்டு கையையும் சேர்த்து இறுக்கிக் கட்டினான். இவ்வளவையும் சில விநாடி நேரத்தில் செய்து விட்டுக் கந்தமாறனிடம் ஓடினான். அவன் முதுகில் குத்திய கத்தியுடன் பாதி உடம்பு சுரங்கப் பாதையிலும் பாதி உடல் வெளியிலுமாகக் கிடப்பதைக் கண்டான். அவனுடைய வேலும் பக்கத்தில் விழுந்து கிடந்தது. வந்தியத்தேவன் வெளியில் சென்று கந்தமாறனைப் பிடித்து இழுத்து வெளியேற்றினான். வேலையும் எடுத்துக் கொண்டான். உடனே கதவு தானாகவே மூடிக் கொண்டது. சுவர் அந்தப் பெரும் இரகசியத்தை மறைத்துக் கொண்டு இருள் வடிவமாக ஓங்கி நின்றது. ஓங்கி அடித்த காற்றிலிருந்து கோட்டைக்கு வெளியே வந்தாகிவிட்டது என்பதை வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். அடர்ந்த மரங்களும் கோட்டைச் சுவர் கொத்தளங்களும் சந்திரனை மறைத்துக் கொண்டிருந்தபடியால் நிலா வெளிச்சம் மிகமிக மங்கலாகத் தெரிந்தது. கந்தமாறனைத் தூக்கி வந்தியத்தேவன் தோளில் போட்டுக் கொண்டான். ஒரு கையில் கந்தமாறனின் வேலையும் எடுத்துக்கொண்டான். ஓர் அடி எடுத்து வைத்தான். சடசடவென்று மண் சரிந்து செங்குத்தாகக் கீழே விழும் உணர்ச்சி ஏற்பட்டது. சட்டென்று வேலை ஊன்றிக் கொண்டு பெரு முயற்சி செய்து நின்றான். கீழே பார்த்தான்: மரங்களும் கோட்டைச் சுவரும் அளித்த நிழலில் நீர்ப் பிரவாகம் தெரிந்தது. அதிவேகமாகப் பிரவாகம் சுழல்கள் சுழிகளுடன் சென்று கொண்டிருந்ததும் ஒருவாறு தெரிந்தது. நல்ல வேளை! கரணம் தப்பினால் மரணம் என்ற கதி நேரிட்டிருக்கலாம். கடவுள் காப்பாற்றினார்! அந்தக் கொடும் பாதகக் காவலன் — ஆனால் அவனை நொந்து என்ன பயன்? எஜமான் கட்டளையைத்தானே அவன் நிறைவேற்றியிருக்கவேண்டும்! — வாசற்படியில் முதுகில் குத்தி அப்படியே இந்தப் பள்ளப் புனல் வெள்ளத்தில் தள்ளிவிட உத்தேசித்திருக்க வேண்டும். நம்முடைய கால் இன்னும் சிறிது சறுக்கி விட்டிருந்தால் இரண்டு பேரும் இந்த ஆற்று மடுவில் விழுந்திருக்க நேர்ந்திருக்கும். நாம் ஒருவேளை தப்பிப் பிழைத்தாலும் கந்தமாறன் கதி அதோகதிதான்! தஞ்சைக் கோட்டைச் சுவரை ஓரிடத்தில் வடவாறு நெருங்கிச் செல்வதாக வந்தியத்தேவன் அறிந்திருந்தான். இது வடவாறாகத்தான் இருக்க வேண்டும். வடவாற்றில் அதிக வெள்ளம் அப்போது இல்லையென்றாலும் இந்தக் கோட்டை ஓரத்தில் ஆழமான மடுவாக இருக்கலாம். யார் கண்டது? வேலைத் தண்ணீரில் விட்டு ஆழம் பார்த்தான் வந்தியத்தேவன். வேல் முழுதும் தண்ணீருக்குள் சென்று முழுகியும் தரை தட்டுப்படவில்லை! ஆகா! என்ன கொடூரமான பாதகர்கள் இவர்கள்!.... அதைப் பற்றி யோசிக்க இது சமயமில்லை. நாமும் தப்பிக் கந்தமாறனையும் தப்புவிக்கும் வழியைத் தேட வேண்டும். வெள்ளப் பிரவாகத்தின் ஓரமாகவே கால்கள் சறுக்கி விடாமல் கெட்டியாக அழுத்திப் பாதங்களை வைத்து வந்தியத்தேவன் நடந்தான். தோளில் கந்தமாறனுடனும், கையில் அவனுடைய வேலுடனும் நடந்தான். கந்தமாறன் இரண்டு மூன்று தடவை முக்கி முனகியது அவனுடைய நண்பனுக்குத் தைரியத்தையும் மன உறுதியையும் அளித்தது. கொஞ்ச தூரம் இப்படியே சென்ற பிறகு கோட்டைச் சுவர் விலகி அப்பால் சென்றது. கரையோரத்தில் காடு தென்பட்டது. கீழே முட்கள் நிறையக் கிடந்தபடியால் கால் அடி வைப்பதும் கஷ்டமாயிருந்தது. ஆகா! இது என்ன? ஒரு மரம் ஆற்றில் விழுந்து கிடக்கிறதே! நல்ல உயரமான மரமாயிருந்திருக்கவேண்டும். வெள்ளம் அதனுடைய வேரைப் பறித்துவிட்டது போலும்! பாதி ஆறு வரையில் விழுந்து கிடக்கிறது. அதில் ஏறித் தட்டுத் தடுமாறி நடந்தான். வெள்ளத்தின் வேகத்தில் மரம் அசைந்து கொண்டிருந்தது. மரத்தின் கிளைகளும் இலைகளும் தண்ணீரில் அலைப்புண்டு தவித்தன. காற்றோ அசாத்தியமாக அடித்

துக்கொண்டிருந்தது. மரத்தின் நுனிக்கு வந்ததும் வேலை விட்டு ஆழம் பார்த்தான். நல்ல வேளை! முருகன் காப்பாற்றினார். இங்கே அவ்வளவு பள்ளமில்லை! வந்தியத்தேவன் மரத்திலிருந்து நதியில் இறங்கிக் கடந்து சென்றான். அங்கங்கே பள்ளம் மேடுகளைச் சமாளித்துக் கொண்டு சென்றான். வெள்ளத்தின் வேகத்தையும் காற்றின் தீவிரத்தையும் தன் மன உறுதியினால் எதிர்த்துப் போராடிக் கொண்டு சென்றான். அவன் உடம்பு வெடவெடவென்று சில சமயம் நடுங்கியது. தோளில் கிடந்த கந்தமாறன் சில சமயம் நழுவி விழுந்துவிடப் பார்த்தான். இந்த அபாயங்களையெல்லாம் தப்பி வந்தியத்தேவன் அக்கரையை அடைந்தான். கொஞ்ச தூரம் இடுப்பு வரை நனைந்த ஈரத் துணியுடன் ஆஜானுபாகுவான கந்தமாறனுடைய கனமான உடலைத் தூக்கிக் கொண்டு தள்ளாடிச் சென்ற பிறகு மர நிழலில் சிறிது இடைவெளி ஏற்பட்ட ஓரிடத்தில் கந்தமாறனைக் கீழே மெதுவாக வைத்தான். முதலில் சிறிது சிரம பரிகாரம் செய்து கொள்ள விரும்பினான். அத்துடன் கந்தமாறனுடைய உடம்பில் இன்னும் உயிர் இருக்கிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்பினான். உயிரற்ற உடலைச் சுமந்து சென்று என்ன உபயோகம்? அதைக் காட்டிலும் அக்காவலன் உத்தேசித்தது போல் வெள்ளத்திலேயே விட்டு விட்டுச் செல்லலாம். இல்லை! இல்லை! உயிர் இருக்கிறது. பெருமூச்சு வருகிறது. நாடி வேகமாக அடித்துக் கொள்ளுகிறது. நெஞ்சு விம்முகிறது. இப்போது என்ன செய்யலாம்? முதுகிலிருந்து கத்தியை எடுக்கலாமா? எடுத்தால் இரத்தம் பீறிட்டு அடிக்கும். அதனால் உயிர் போனாலும் போய் விடும். காயத்துக்கு உடனே சிகிச்சை செய்து கட்டுக் கட்ட வேண்டும். ஒருவனாகச் செய்யக்கூடிய காரியமல்லவே? வேறு யாரை உதவிக்குத் தேடுவது?... சேந்தன் அமுதனுடைய நினைவு வந்தது. அவனுடைய தோட்டமும் வீடும் வடவாற்றின் கரையிலேதான் இருக்கிறது. இங்கே சமீபத்திலேயே இருக்கக்கூடும். எப்படியாவது சேந்தன் அமுதனுடைய வீட்டுக்குத் தூக்கிக் கொண்டு போய்ச் சேர்த்தால் கந்தமாறன் பிழைக்க வழியுண்டு. ஒரு முயற்சி செய்து பார்க்கலாம்.

கந்தமாறனை மறுபடியும் தூக்க முயன்றபோது அவனுடைய கண்கள் திறந்திருப்பதைக் கண்டு வந்தியத்தேவன் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டான்.

''கந்தமாறா! நான் யார் தெரிகிறதா?'' என்று கேட்டான்.

''தெரிகிறது, நன்றாய்த் தெரிகிறது. வல்லவரையன் நீ! உன்னைப் போல் அருமையான நண்பனைத் தெரியாமல் இருக்குமா? மறக்கத்தான் முடியுமா? பின்னால் நின்று முதுகிலே குத்தும் ஆப்த சிநேகிதன் அல்லவா நீ?'' என்றான் கந்தமாறன்.

வல்லவரையனை இந்தக் கடைசி வார்த்தைகள் சவுக்கினால் அடிப்பது போலிருந்தது.

''ஐயோ! நானா உன்னைப் பின்னாலிருந்து குத்தினேன்?....'' என்று ஆரம்பித்தவன் ஏதோ ஞாபகம் வந்து சட்டென்று நிறுத்தினான்.

''நீ குத்தவில்லை! உன் கத்தி என் முதுகைத் தடவிக் கொடுத்தது...அடபாவி! உனக்காகவல்லவா இந்தச் சுரங்க வழியில் அவசரமாகக் கிளம்பினேன். பழுவேட்டரையருடைய ஆட்கள் உன்னைப் பிடிப்பதற்குள் நான் பிடிப்பதற்காக விரைந்தேன். உன்னை யாரும் எந்தவித உபத்திரவமும் செய்யாமல் தடுப்பதற்காக ஓடி வந்தேன். உன்னைத் தேடிப் பிடித்து வந்து சின்னப் பழுவேட்டரையரின் கோட்டைக் காவல் படையில் சேர்த்து விடுவதாகச் சபதம் கூறி விட்டு வந்தேன். இப்படி உனக்கு நன்மை செய்ய நினைத்த நண்பனுக்கு நீ இவ்வாறு துரோகம் செய்து விட்டாய்! இதுதானா நட்புக்கு அழகு? நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டுமென்று எத்தனை தடவை கையடித்துச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறோம்! அவ்வளவையும் காற்றில் பறக்கும்படி விட்டுவிட்டாயே! இந்தச் சோழ நாட்டு இராஜாங்கத்தில் நடக்கப் போகும் ஒரு பெரிய மாறுதலைப் பற்றியும் உனக்குச் சொல்லி எச்சரிக்க எண்ணியிருந்தேனே! அடாடா! இனி இந்த உலகத்தில் யாரைத்தான் நம்புவது?'' என்று சொல்லிக் கந்தமாறன் மறுபடியும் கண்களை மூடினான். இவ்வளவு அதிகமாகவும் ஆத்திரமாகவும் பேசியது அவனை மீண்டும் மூர்ச்சையடையும்படி செய்திருக்க வேண்டும்.

''நம்புவதற்கு மனிதர்களா இல்லை? பழுவேட்டரையர்களை நம்புவது?'' என்று வந்தியத்தேவன் முணு முணுத்தான். ஆயினும் அவனுடைய கண்களில் கண்ணீர் துளித்தது. தான் சொல்ல எண்ணியதைச் சொல்லாமல்

விட்டதே நல்லது என்று எண்ணிக் கொண்டான். கந்தமாறனுடைய சடலத்தை மறுபடியும் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு நடக்கலுற்றான்.

இரவில் மலரும் பூக்களின் நறுமணம் குபீரென்று வந்தது. சேந்தன் அமுதனுடைய வீடு சமீபத்தில்தான் இருக்க வேண்டும் என்று அவன் எண்ணியது வீண் போகவில்லை. விரைவில் தோட்டம் வந்தது. ஆனால் அந்தத் தோட்டம்! முதல் நாள் பார்த்ததற்கும் இன்று பார்ப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்? அனுமார் அழித்த அசோக வனத்தையும் வானரங்கள் அழித்த மதுவனத்தையும் அத்தோட்டம் அப்போது ஒத்திருந்தது. ஆகா! தன்னைத் தேடிக் கொண்டு பழுவேட்டரையரின் ஆட்கள் இங்கே வந்திருந்தார்கள் போலிருக்கிறது. வந்தவர்கள் இத்தகைய அக்கிரமங்களைச் செய்து விட்டுப் போயிருக்கிறார்கள்! அடடா! சேந்தன் அமுதனும் அவனுடைய அருமை அன்னையும் எவ்வளவு அரும்பாடுபட்டு இந்த நந்தவனத்தை வளர்த்திருக்க வேண்டும்? அவ்வளவும் பாழாய்ப் போய் விட்டதே!

நந்தவனம் அழிந்ததில் அநுதாபம் சட்டென்று விலகியது. தன்னுடைய அபாயகரமான நிலைமை நினைவு வந்தது. ஒற்றர்களும் கோட்டைக் காவல் வீரர்களும் இங்கே சமீபத்தில் எங்கேயாவது காத்திருந்தால் என்ன செய்வது?.... அவர்களை ஒரு கை பார்த்துச் சமாளிக்க வேண்டியதுதான். நல்ல வேளையாக, அதோ நமது குதிரை, கட்டிய மரத்திலேயே இன்னும் இருக்கிறது!.... ஒரு வேளை தன்னைப் பிடிப்பதற்காகவே அதை விட்டு வைத்திருக்கிறார்களோ? எப்படியிருந்தாலும் என்ன செய்ய முடியும்? இவனை இக்குடிசையில் உள்ள நல்ல மனிதர்களிடம் ஒப்புவித்துவிட்டுக் குதிரையில் ஏறித் தட்டிவிட வேண்டியதுதான். இங்கே புறப்படும் குதிரை பழையாறை போய்த்தான் நிற்க வேண்டும்.

மெள்ள மெள்ள அடிமேல் அடி வைத்து நடந்து குடிசை வாசலை அடைந்தான். வாசல் திண்ணையில் படுத்திருந்த சேந்தன் அமுதனைத் தட்டி எழுப்பினான். தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்த அமுதனுடைய வாயைப் பொத்தினான். பிறகு மெல்லிய குரலில் சொன்னான்:—

''தம்பி! நீதான் எனக்கு உதவி செய்ய வேண்டும். பெரிய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இவன் என் அருமை சிநேகிதன். கடம்பூர் சம்புவரையர் மகன் கந்தமாறன். நான் வரும் வழியில் யாரோ இவனை முதுகிலே குத்திப் போட்டிருந்தார்கள். எடுத்து வந்தேன்'' என்றான்.

''படுபாவிகள்! முதுகிலே குத்தியிருக்கிறார்களே! எப்பேர்ப்பட்ட சுத்த வீரர்கள்!'' என்றான் அமுதன்.

பிறகு, ''இவனை என்னால் முடிந்த வரை பார்த்துக் கொள்கிறேன். இன்று மாலையிலிருந்து கும்பல் கும்பலாகப் பல வீரர்கள் வந்து உன்னைத் தேடி விட்டுப் போனார்கள். அவர்களால் நந்தவனமே அழிந்து போய் விட்டது. போனாலும் போகட்டும். நீ தப்பிப் பிழைத்தால் சரி. நல்ல வேளையாக உன் குதிரையை அவர்கள் விட்டுப் போய் விட்டார்கள். குதிரையில் ஏறி உடனே புறப்படு!'' என்றான்.

''அப்படித்தான் என் உத்தேசமும். ஆனால் இவன் உயிரைக் காப்பாற்ற ஏதேனும் செய்ய வேண்டும்!''

''அதைப் பற்றி உனக்குக் கவலை வேண்டாம். என் தாயார் இம்மாதிரி விஷயங்களில் கைதேர்ந்தவள். காயங்களுக்குச் சிகிச்சை செய்ய அவளுக்கு நன்றாய்த் தெரியும்!'' என்று சொல்லி, சேந்தன் அமுதன் குடிசையின் கதவை இலேசாக இரண்டு தட்டுத் தட்டினான். உடனே கதவு திறந்தது. சேந்தன் அமுதனுடைய அன்னை வாசற்படியில் நின்றாள்.

கந்தமாறனை இருவருமாகத் தூக்கிக் கொண்டு போய் உள்ளே கூடத்தில் போட்டார்கள். கை விளக்கின் வெளிச்சத்தில் சேந்தன் அமுதன் தன் அன்னையுடன் சமிக்ஞையினால் பேசினான். அதை அவள் நன்கு அறிந்து கொண்டதாகத் தோன்றியது. கந்தமாறனை உற்றுப் பார்த்தாள். முதுகில் செருகியிருந்த கத்தியைப் பார்த்து, பிறகு உள்ளே போய்ச் சில பச்சிலைத் தழைகளையும் பழந் துணியையும் எடுத்துக் கொண்டு வந்தாள். இருவரையும் நிமிர்ந்து பார்த்தாள்.

கந்தமாறனைச் சேந்தன் அமுதன் இறுக்கிப் பிடித்துக் கொண்டான். முதுகில் இத்தனை நேரமாய் நீட்டிக் கொண்டிருந்த கத்தியை வல்லவரையன் பலங்கொண்டு இழுத்து வெளியேற்றினான்.

இரத்தம் குபீரென்று வெளியிட்டுப் பாய்ந்தது.

உணர்ச்சியற்ற நிலையில் கந்தமாறன் 'ஓ'வென்று கத்தினான்.

வந்தியத்தேவன் அவனது வாயைப் பொத்தினான்.

காயத்தைச் சேந்தன் அமுதன் அமுக்கிப் பிடித்துக் கொண்டான்.

அமுதனுடைய அன்னை பச்சிலைத்தழைகளைக் காயத்தில் வைத்துக் கட்டினாள்.

கந்தமாறன் மறுபடியும் முக்கி முனகினான்.

தூரத்தில் நிடு நிடு வென்று மனிதர்கள் ஓடி வரும் சத்தம் கேட்டது.

''போ ! போ ! சீக்கிரம் !'' என்றான் அமுதன்.

இரத்தக் கறை படிந்த கத்தியையும் வேலையும் கையில் எடுத்துக்கொண்டான் வந்தியத்தேவன். புறப்பட்டவன் தயங்கி நின்றான்.



''தம்பி ! நீ என்னை நம்புகிறாயா?'' என்று கேட்டான்.

''நான் கடவுளை நம்புகிறேன். உன்னிடம் பிரியம் வைத்திருக்கிறேன். எதற்காகக் கேட்டாய் ?''

''எனக்கு ஓர் உதவி செய்ய வேணும். இந்தப் பக்கத்தில் எனக்கு அவ்வளவாக வழி தெரியாது. அவசரமாகப் பழையாறைக்குப் போக வேண்டும். குந்தவைப் பிராட்டிக்கு முக்கியமான செய்தி ஒன்று கொண்டு போக வேண்டும். கொஞ்ச தூரம் வழி காட்டுவதற்கு வருகிறாயா ?''

உடனே சேந்தன் அமுதன் தன் அன்னையிடம் இன்னும் ஏதோ ஜாடையாகச் சொன்னான். இதிலெல்லாம் அவள் அதிக வியப்பு அடைந்ததாகத் தோன்றவில்லை. போய் வரும்படி சமிக்ஞையினால் தெரிவித்தாள். காயம் பட்டவனைத் தான் கவனித்துக் கொள்வதாகவும் ஜாடை காட்டினாள்.

சேந்தனும் தேவனும் புறப்பட்டுச் சென்றார்கள். முதலில் தேவனும் பின்னால் சேந்தனும் குதிரை மேல் ஏறிக் கொண்டார்கள்.



குதிரையின் சத்தம் கேளாதபடி மெதுவாகவே செலுத்தினான் வந்தியத்தேவன். சற்றுத் தூரம் போன பிறகு தட்டி விட்டான். குதிரை பாய்ச்சலில் பிய்த்துக் கொண்டு சென்றது.

குதிரை புறப்பட்ட அதே நேரத்தில் ஐந்தாறு வீரர்கள் குடிசைக்கு வந்து சேர்ந்தார்கள். கதவைத் தடதட வென்று தட்டினார்கள்.

அமுதனின் தாய் கதவைத் திறந்தாள். வாசற்படியில் நின்றாள்.

''இங்கே என்னவோ கூச்சல் கேட்டதே? அது என்ன?'' என்று இரைந்தான் ஒருவீரன்.



அமுதனின் அன்னை ஏதோ உளறிக் குளறினாள்.

"இந்தச் செவிட்டு ஊமையிடம் பேசி என்ன பயன்? உள்ளே போய்ப் பார்க்கலாம்!" என்றான் ஒருவன்.

"இவள் வழி மறித்துக் கொண்டு நிற்கிறாளே?"

"அந்தப் பூக்குடலைப் பையன் எங்கே போனான்?"

"ஊமையைத் தள்ளிவிட்டு உள்ளே நுழையுங்களடா!"

சேந்தன் அமுதனுடைய தாயார் மேலும் ஊமைப் பாஷையில் ஏதேதோ கத்தினாள்.

தன்னைத் தள்ள முயன்ற வீரனை அவள் தள்ளிவிட்டுக் கதவைத் தாளிடப் பார்த்தாள். நாலைந்து பேராகக் கதவைப் பிடித்துத் தள்ளிச் சாத்த முடியாதபடி செய்தார்கள்.

அமுதனுடைய தாய் இன்னும் உரத்த கூச்சல் புலம்பலுடன் திடீரென்று கதவை விட்டாள்.

இரண்டு மூன்று பேர் கீழே உருட்டியடித்துக் கொண்டு விழுந்தார்கள்.

மற்றவர்கள் அவர்களை மிதித்துக் கொண்டு உள்ளே புகுந்தார்கள்.

"ஆள் இங்கே இருக்கிறான்!" என்று ஒருவன் கத்தினான்.

"அகப்பட்டுக் கொண்டானா?" என்றான் இன்னொருவன்.

"ஓடப் போகிறான்! பிடித்துக் கட்டிப் போடுங்கள்!" என்றான் இன்னொருவன்.

ஊமை மேலும் புலம்பினாள்.

"ஒரே இரத்த விளாறாக இருக்கிறதே!" என்று ஒருவன் கூவினான்.

ஊமை கை விளக்கைத் தூக்கிப் பிடித்துக் கீழே கிடந்தவனைச் சுட்டிக் காட்டி, "பே! பே!" என்றாள்.

"அடே! இவன் வேறு ஆள் போலத் தோன்றுகிறதே!"

"பே! பே!"

"நேற்று இங்கு வந்திருந்தவன் தானா இவன்?"

"பே! பே!"

"உன் மகன் எங்கே?"

"பே! பே!"

"ஊமைப் பிணமே! சற்றுச் சும்மா இரு! அடே! இவனை நன்றாய்ப் பாருங்கள்! அடையாளம் யாருக்காவது தெரியுமா?"

"அவன் இல்லை!"

"அவன்தான்!"

"இல்லவே இல்லை!"

"பே! பே!"

"எப்படி இருந்தாலும் இவன் வேற்று ஆள்! தூக்குங்கள் இவனை! கொண்டு போகலாம்!"

"பே! பே! பே! பே!"

"சனியனே! சும்மா இரு!"

நாலு பேர் சேர்ந்து கந்தமாறனைத் தூக்கினார்கள்.

"பே! பே! பே! பே! பே! பே!" என்று அமுதனுடைய அன்னை இடைவிடாமல் அலறினாள்.

"அடே! குதிரைச் சத்தம் கேட்கிறதடா!"

"பாதிப் பேர் இவனைத் தூக்குங்கள்! பாதிப்பேர் ஓடிப் போய்ப் பாருங்கள்!"

"எல்லாரும் ஓடுங்கள்! இவன் எங்கும் போய்விட மாட்டான்."

தூக்கிய கந்தமாறனைக் கீழேயே போட்டுவிட்டு எல்லாரும் ஓடினார்கள்.

"பேப்பே! பேப்பே! பேப்பே!" என்ற அமுதன் அன்னையின் ஓலம் அவர்களைத் தொடர்ந்து வந்தது.

நாற்பத்திமூன்றும் அத்தியாயம்

பழையாறை

வந்தியத்தேவன் வழியில் பல கஷ்டங்களுக்கு உள்ளாகி, பல அபாயங்களுக்குத் தப்பிப் பழையாறை நகருக்கு வந்து சேர்வதற்கு முன்னால், நம்முடன் பழையாறைப் பதிக்கு விஜயம் செய்யும்படி நேயர்களை அழைக்கிறோம்.

அரிசிலாற்றுக்குத் தென் கரையில் நின்று அந்த நகரைப் பார்ப்போம். அடடா! வெறும் நகரமா இது? தமிழ்த் தாயின் அழகிய நெற்றியில் தொங்கும் ஆபரணத்தைப் போல அல்லவா விளங்குகிறது? பச்சை மரகதங்களும், சிவந்த இரத்தினங்களும், நீலக் கற்களும் பதித்த நெற்றிச்சுட்டியைப் போல அல்லவா திகழ்கிறது!

நதிகளும் ஓடைகளும் தடாகங்களும் கழனிகளும் புதுநீர் நிறைந்து ததும்புகின்றன. அவற்றில் பல வர்ண மலர்கள் பூத்துத் திகழ்கின்றன. தென்னை மரங்களும் புன்னை மரங்களும் குளிர்ச்சியான பசுமையைப் பரப்புகின்றன. கொன்னை மரங்களில் பொன் வர்ணப் பூங்கொத்துக்கள் சரம் சரமாகத் தொங்குகின்றன. இவ்வளவுக்கும் இடையிடையே விண் முட்டும் மணி மாடமாளிகைகளும், பொற் கலசங்களும், கோயில் கோபுரங்களின் உச்சியில் உள்ள தங்க ஸ்தூபிகளும் ஒளி வீசுகின்றன.

அப்பப்பா! பழையாறை என்னும் இந்த ஒரு பெரும் நகரத்துக்குள்ளே எத்தனை சிறிய ஊர்கள்? நந்திபுர விண்ணகரம், திருச்சத்திமுற்றம், பட்டீச்சுரம், அரிச்சந்திரபுரம் முதலிய ஊர்களும், அந்த ஊர்களின் ஆலயங்களும் இந்தப் பழையாறை என்னும் சோழர் தலைநகரில் அடங்கியுள்ளன. பழையாறையின் நாலு திசைகளிலும் வடதளி, கீழ்த்தளி, மேற்றளி, தென்தளி என்னும் நாலு சிவனார் கோயில்கள் இருக்கின்றன. போர்வீரர்கள் குடியிருக்கும் ஆரியப் படைவீடு, புதுப் படைவீடு, மணப்படை வீடு, பம்பைப்படை வீடு ஆகிய நாலு வீரபுரிகள் காணப்படுகின்றன. இவ்வளவுக்கும் நடுநாயகமாகச் சோழ மாளிகை வானளாவும் மணிமாடகூடங்களுடன் விளங்குகிறது. சோழ மாளிகை என்றால், ஒரே மாளிகையா? விஜயாலய சோழருக்கு முன்னால் இது ஒரு தனி மாளிகையாக இருந்தது. பிறகு ஒவ்வொரு அரச குமாரனுக்கும் ஒவ்வொரு மகாராணிக்கும் ஒவ்வொரு இளவரசிக்குமாகப் பழைய சோழ மாளிகையை ஒட்டிப் புதிய புதிய மாளிகைகள் எழுந்து நிற்கும் காட்சியைக் காண்பதற்கு ஆயிரம் கண்கள் வேண்டும். வர்ணிப்பதற்கோ பதினாயிரம் கவிஞர்களின் கற்பனா சக்தி போதாது.

இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வந்த சேக்கிழார் பெருமான்,

"தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமைசேர் பதி பழையாறை"

என்று வர்ணித்தார் என்றால், சுந்தர சோழரின் காலத்தில் இந்த நகர் எவ்வளவு கோலாகலமாக இருந்திருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

எனினும், நாம் முதன் முதலில் இந்தப் பழம் பெரும் பதிக்குச் செல்லும் சமயத்தில் அதைப் பூரண கோலாகலத் தோற்றத்துடன் பார்த்து மகிழ முடியவில்லை.

சுந்தர சோழச் சக்கரவர்த்தி இந்நகரின் சோழ மாளிகையில் வீற்றிருந்து அரசு செலுத்திய காலத்தில் இங்கு வந்து பார்க்க நமக்குக் கொடுத்து வைத்திருக்கவில்லை.

சக்கரவர்த்தி நோய்ப்பட்டுத் தஞ்சை மாநகர் சென்ற பிறகு வெளி நாடுகளிலிருந்து சிற்றரசர்களும், இராஜ தூதர்களும் சேனாதிபதிகளும் இங்கு வருவது நின்று போயிற்று. அவர்களுடன் வழக்கமாக வரும் பரிவாரங்களின் கூட்டமும் குறைந்து விட்டது.

நாலு படை வீடுகளிலும் வசித்த போர் வீரர்களில் பாதிப் பேர் இப்போது ஈழ நாட்டுப் போர்க்களங்

களில் தமிழர் வீரத்தை நிலைநாட்டிக் கொண்டிருந்தார்கள்.

மற்றவர்களில் ஒரு பகுதியார் வட திசை எல்லையிலும் இன்னொரு பகுதியினர் மதுரையிலும் இருந்தார்கள்.

எனவே, படை வீட்டுப் பகுதிகளில் இப்போது பெரும்பாலும் வயோதிகர்களும் பெண்மணிகளும், சிறுவர் சிறுமிகளுமே காணப்பட்டார்கள்.

மழவர்பாடியில் வாழ்ந்து வந்த வேளைக்காரப் படையினர் தத்தம் குடும்பங்களோடு தஞ்சைக்குச் சென்றுவிட்டபடியால் நகரின் அப்பகுதியானது பூட்டப்பட்ட வீடுகளுடன் வெறிச்சென்றிருந்தது.

இராஜாங்கக் காரியங்களை நடத்தி வந்த அமைச்சர்கள், சாமந்தகர்கள், அதிகாரிகள் அனைவரும் தத்தம் குடும்பத்தோடு தஞ்சைபுரிக்குச் சென்றுவிட்டார்கள்.

இப்படி யெல்லா மிருந்தபோதிலும் பழையாறை வீதிகளில் கூட்டத்துக்கும் கலகலப்புக்கும் குறைவில்லை. இப்போது அவ்வீதிகளில் பெரும்பாலும் ஆலய ஸ்தபதிகள், சிற்பக் கலைஞர்கள், சிவனடியார்கள், தேவார ஓதுவார்கள், அரண்மனை ஊழியர்கள், ஆலயப் பணியாளர்கள், கோயில்களில் சுவாமி தரிசனம் செய்யவும், திருவிழாக் காட்சிகளைப் பார்க்கவும் வெளியூர்களிலிருந்து வரும் ஜனங்கள்—ஆகியோர் அதிகமாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

இன்றைக்கு ஏதோ திருவிழாப் போலக் காண்கிறது. வீதிகளில் அழகிய ஆடை ஆபரணங்கள் அணிந்து ஆட வரும் பெண்டிரும் சிறுவர் சிறுமிகளும் உலாவி வருகின்றனர். தெரு முனைகளில் ஆங்காங்கு ஜனங்கள் கும்பல் கூடி நிற்கின்றனர். அக்கும்பல்களுக்கு மத்தியில் ஏதேதோ வேடம் புனைந்தவர்கள் நின்று ஆடிப் பாடுகிறார்களே! சற்றுக் கவனித்துப் பார்க்கலாம். ஆம்; இவர்கள் கிருஷ்ணனைப் போலவும், கோபாலர்களைப் போலவும் அல்லவா வேடம் புனைந்திருக்கிறார்கள்! இந்தக் கூட்டத்துக்கு நடுவில் ஒரு கிருஷ்ணர் ஒரு மலையைத் தூக்கிக் கொண்டு நிற்கிறாரே? அவரைத் தேவராஜனை இந்திரன் வந்து வணங்குகிறானே? இன்னொரு கூட்டத்தின் நடுவில் கிருஷ்ணனை நாலு முகங்கள் உள்ள பிரம்மதேவர் வந்து தோத்தரித்து வணங்குகிறாரே! ஆகா! இப்போது தெரிகிறது. இன்று ஸ்ரீஜயந்தி; கண்ணன் பிறந்த நாள். அந்த விழாவைத்தான் ஜனங்கள் இவ்வளவு குதூகலமாகக் கொண்டாடுகின்றனர். அங்கங்கே உறியடித் திருநாள் நடைபெறுகிறது. மஞ்சள் நீரை வாரி இறைக்கிறார்கள்.

நந்திபுர விண்ணகரத்துப் பெருமாள் கோயிலைச் சுற்றி இந்தத் திருவிழாக் கொண்டாட்டங்கள் அதிகமாக நடைபெறுகின்றன.

இது என்ன?

"கண்டேன் கண்டேன் கண்டேன்
கண்ணுக்கினியன கண்டேன்!"

என்று பாடுவது யார்? தெரிந்த குரலாயிருக்கிறதே! இதோ நமது பழைய நேகிதர் ஆழ்வார்க்கடியார் நம்பி சாக்ஷாத்காரமாக நிற்கிறார்! நின்று பாடுகிறார். அவரைச் சுற்றிலும் ஒரு கும்பல் கூடுகிறது. சிலர் பக்தி சிரத்தையுடன் கேட்கிறார்கள். வேறு சிலர் எகத்தாளம் பண்ணத் தொடங்குகிறார்கள். ஆழ்வார்க்கடியாரின் கைத்தடியினால் யாருடைய தலைக்குச் சேதம் நேருமோ என்று நாம் அஞ்சுகிறோம்.

விண்ணகரக் கோயிலின் வாசலில் ஒரு சலசலப்பு. வீதிப்புறத்தில் நிறுத்தியிருந்த ரதங்களும் பல்லக்குகளும் கோயில் வாசலுக்கு வருகின்றன. கோயிலுக்குள்ளே யிருந்து மாதரசிகள் சிலர் வருகிறார்கள். இப்பெண்மணிகள் பெரிய குலத்துப் பெண்டிராகவே இருக்க வேண்டும்.

ஆம்; ஆம்! பழையாறை அரண்மனைகளில் வாழும் மகாராணிகளும் இளவரசிகளும்தான் இவர்கள்.

எல்லோருக்கும் முதலில் 'பெரிய பிராட்டி' என்று நாடு நகரம் எல்லாம் போற்றும் செம்பியன் மாதேவி வருகிறார். இவர் மழவரையர் குலப் புதல்வி சிவஞானச் செல்வரான கண்டராதித்தரின் பட்டமகிஷி. வயது முதிர்ந்த விதவைக் கோலத்திலும் இவருடைய முகத்தில் எத்தகைய தேஜஸ் ஜொலிக்கிறது! அவருக்குப் பின்னால் அரிஞ்சய சோழரின் பத்தினியான வைதும்பராயர் குலப் புதல்வி ராணி கல்யாணி வருகிறார். ஆகா! இவருடைய அழகை என்னவென்று சொல்ல! இந்த முதிய பிராயத்திலும் இவர் முகத்தில் இப்படிக் களை வீசுகிறதே! யௌவனப் பிராயத்தில் எப்படி இருந்திருப்பாரோ? இவருடைய புதல்வராகிய சுந்தர சோழர் வனப்புமிக்கவர் என்று பிரசித்தி பெற்றிருப்பதில் வியப்பு என்ன?

இவரைத் தொடர்ந்து சுந்தர சோழரின் மற்றொரு பத்தினியான சேரமான் மகள் பராந்தகன் தேவி வருகிறார்.

இன்னும் பின்னால் வானுலகிலிருந்து நேரே இறங்கி வந்த தேவ கன்னியரையொத்துக் குந்தவைப் பிராட்டி,

வானதி, இன்னும் நாம் அரிசலாற்றங் கரையில் பார்த்த அரசகுலப் பெண்கள் வருகிறார்கள்.

விஜயாலயன் காலத்திலிருந்து சோழ வம்சத்தினர் சிவனையும் துர்க்கையையும் குலதெய்வமாகக் கொண்டு வழிபடுகிறவர்கள். ஆனால் திருமாலிடமும் மற்றச் சமயங்களிடமும் இவர்களுக்கு துவேஷம் என்பது கிடையாது. இன்று கண்ணன் பிறந்த நாள் என்பதை முன்னிட்டுப் பெருமாள் கோயிலுக்கு வந்தார்கள் போலும்.

பெரிய பிராட்டி செம்பியன்மாதேவி பல்லக்கில் ஏறும் சமயத்தில் ஆழ்வார்க்கடியாருடைய பாடல் அவருடைய காதில் விழுந்தது. அதற்காகவென்றே ஆழ்வார்க்கடியார் உரத்த சத்தம்போட்டுப் பாடினார் போலும். செம்பியன் மாதேவி அவரைத் தம் அருகில் அழைத்து வரச் செய்தார்.

ஆழ்வார்க்கடியார் அடக்க ஒடுக்கத்துடன் வந்து நின்றார்.

''திருமலை! சில நாளாக உன்னைக் காணோமே? ஸ்தல யாத்திரை சென்றிருந்தாயோ?'' என்று கேட்டார்.

''ஆம், தாயே! ஸ்தல யாத்திரை சென்றிருந்தேன். திருப்பதி, காஞ்சி, வீரநாராயணபுரம் முதலிய பல க்ஷேத்திரங்களைத் தரிசித்தேன். சென்ற இடங்களிலெல்லாம் பல விந்தைகளைக் கண்டும் கேட்டும் வந்தேன்!''

''அரண்மனைக்கு நாளைக்கு வந்து, யாத்திரையில் கண்டு கேட்ட விந்தைகளைச் சொல்லு!''

''இல்லை, அம்மா! இன்றிரவு மறுபடியும் நான் புறப்பட வேண்டும்.''

''அப்படியானால் இன்று மாலையே வந்துவிட்டுப் போ!''

''வருகிறேன் தாயே! தங்கள் சித்தம் என் பாக்கியம்!''

பல்லக்குகள், ரதங்கள் எல்லாம் அரண்மனைக்கு விரைந்து சென்றன.

குந்தவைப் பிராட்டி ஆழ்வார்க்கடியாரைச் சுட்டிக்காட்டி ஏதோ கூற, மற்ற அரசிளங்குமரிகள் 'கலீர்' என்று சிரித்தார்கள்.

சிரிப்புக்குக் காரணம் கண்டறிய ஆழ்வார்க்கடியார் அந்தப் பக்கத்தை நோக்கினார்.

குந்தவைப் பிராட்டியின் கண்கள் ஆழ்வார்க்கடியாருடன் ஏதோ சங்கேத பாஷையில் பேசின.

ஆழ்வார்க்கடியார் அச் செய்தியை அறிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலைவணங்கினார்.

சோழ மாளிகைகளிலே செம்பியன் மாதேவி வசித்த மாளிகை நடுநாயகமாக இருந்தது. அதன் சபா மண்டபத்தில், பொன்னால் செய்து நவரத்தினங்கள் இழைத்த சிம்மாசனத்தில் அந்தப் பெருமூதாட்டி அமர்ந்திருந்தார். காரைக்காலம்மையார், திலகவதியார் முதலான பரம சிவபக்தைகளின் வழித் தோன்றிய அப்பெண்மணி வெண் பட்டாடை உடுத்தி, விபூதியும் ருத்திராட்ச மாலையும் தரித்து, வேறு எவ்வித ஆபரணங்களும் பூணாமல், அளவற்ற செல்வங்களுக்கு இடையில்—அஷ்டைசுவரியங்களுக்கு மத்தியில்,—வைராக்கியசீலையாக வாழ முடியும் என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தார். தலையில் மணி மகுடமும் வேறு ஆபரணங்களும் அணியாதிருந்த போதிலும் அவருடைய கம்பீரத் தோற்றமும், சுயம் பிரகாசமான முகமும் அரச குலத்தில் பிறந்து அரச குலத்தில் புகுந்த அரசர்க்கரசி என்பதைப் புலப்படுத்தின. சோழ அரச குடும்பத்



தைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேருமே விதிவிலக்கின்றி இந்தப் பெருமூதாட்டியைத் தெய்வமாக மதித்துப் பாராட்டிக் கொண்டாடி அவருடைய விருப்பத்துக்கு மாறாக எதுவும் சொல்லாமல் நடந்து வந்ததில் யாதொரு வியப்பும் இல்லையென்றே நினைக்கத் தோன்றும்.

ஆயினும் அத்தகைய பயபக்தி மரியாதைக்கு இப்போது ஒரு களங்கம் ஏற்பட்டிருந்தது. அந்தப் பெண்ணரசியின் புதல்வர் மதுராந்தகத் தேவர் அன்னையின் கருத்துக்கு மாறாக, அவருடைய கட்டளையை மீறி, பழுவேட்டரையர் குலத்தில் மணம் புரிந்து கொண்டார். அதுமட்டுமின்றிச் சோழ சிம்மாசனத்துக்கு அவர் ஆசைப்படுகிறார் என்ற செய்தியும் பராபரியாக வந்து செம்பியன்மாதேவியின் காதில் விழுந்து அவருக்குச் சிறிது மனக் கவலையை ஏற்படுத்தியிருந்தது.

செம்பியன் மாதேவியின் அரண்மனை முற்றத்திலும் சபா மண்டபத்திலும்

சிற்பிகளின் கூட்டமும் தேவாரப் பாடகர்களின் கோஷ்டியும் ஜே ஜே என்று எப்போதும் கூடியிருப்பது வழக்கம். தூர தூர தேசங்களிலிருந்து சிவனடியார்களும் தமிழ்ப் புலவர்களும் அடிக்கடி வந்து பரிசில்கள் பெற்றுப் போவது வழக்கம். சிவபூஜைப் பிரசாதம் கொண்டு வரும் அர்ச்சகர்களின் கூட்டமும் அதிகமாகவே இருக்கும்.

அன்றைக்குத் திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), தென்குரங்காடுதுறை, திருமழபாடி முதலிய ஊர்களிலிருந்து சிற்பிகளும் சிவபக்தர்களும் வந்து தத்தம் ஊர்களில் கோயில்களில் கருங்கல் திருப்பணி செய்வதற்கு மகாராணியின் உதவியைக் கோரினார்கள். கோயில்களை எந்தெந்த ஊர்களில் என்ன முறையில் கட்ட உத்தேசம் என்பதற்குச் சித்திரங்களும், பொம்மைக் கோயில்களும் கொண்டு வந்திருந்தார்கள்.

முதல் இரண்டு கோயில்களின் திருப்பணியைச் செய்ய உதவி அளிப்பதாகச் சொல்லிவிட்டு, ''மழபாடியா? எந்த மழபாடி?'' என்று பெரிய பிராட்டி கேட்டார்.

''சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குரல் கொடுத்து அழைத்துப் பாடல் பெற்றூரே, அந்தப் பெருமான் வீற்றிருக்கும் மழபாடிதான்!'' என்று அந்த ஊர்க்காரர் சொன்னார்.

''அது என்ன சம்பவம்?'' என்று மழவரையரின் செல்வி கேட்க, மழபாடிக்காரர் கூறினார்:

''சுந்தரமூர்த்தி சுவாமிகள் சோழ நாட்டு ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்து கொண்டிருந்தபோது ஒரு நதியைக் கடக்க வேண்டியதா யிருந்தது.

நதியைத் தாண்டி அப்பால் செல்லத் தொடங்கினார். அப்போது 'சுந்தரம்! என்னை மறந்தாயோ!' என்ற ஒரு குரல் கேட்டது.

சுந்தரமூர்த்தி திடுக்கிட்டார். அது தம்மை ஆட்கொண்ட இறைவனுடைய குரல் என்பதை உணர்ந்தார்.

பக்கத்தில் இருந்த சீடர்களைப் பார்த்து, 'இங்க சமீபத்தில் எங்கே யாவது சிவன் கோயில் இருக்கிறதா?' என்று கேட்டார்.

'ஆம், சுவாமி! அந்தக் கொன்னை மரங்களின் மறைவில் மழபாடி கிராமத்துச் சிவன் கோயில் இருக்கிறது!' என்று சீடர்கள் சொன்னார்கள்.

உடனே சுந்தரமூர்த்தி அங்கே சென்றார். பூத்துக் குலுங்கிய கொன்னை மரங்களின் மறைவில் ஒரு சிறிய கோயில் இருந்தது. சுந்தரமூர்த்தி அங்கே சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு மனமுருகிப் பாடினார். அன்றொரு நாள் தன்னைத் தடுத்தாட்கொண்டது போல் இன்றைக்குத் தன்னைக் கூப்பிட்டு அருள் புரிந்த கருணைத் திறனை வியந்தார். 'சுவாமி! தங்களை நான் மறந்துவிடுவேனா? என்ன கேள்வி கேட்டீர்கள்? தங்களை மறந்து விட்டு வேறு யாரை நினைப்பேன்?' என்னும் கருத்து அமைத்து,

பொன்னார் மேனியனே
புலித் தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே உன்னையல்லால்
இனி யாரை நினைக்கேனே?

என்று பாடினார். தாயே! இன்னும் அந்தக் கோயில் சிறிய கோயிலாகக் கொன்னை மரங்களின் மறைவிலேயே இருக்கின்றது. அதற்குத்தான் உடனே திருப்பணி ஆரம்பிக்க வேண்டும் என்று கோருகிறோம்.''

''அப்படியே ஆகட்டும்!'' என்றார் செம்பியன் மாதேவி.

ஆழ்வார்க்கடியாரும் அவருடன் இன்னொருவரும் சற்று முன்னால் வந்து நடந்ததையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். **(தொடரும்)**



என்ன விளம்பரப் பலகை இது? சமையல் அறையில் தபால்காரருக்கு என்ன வேலை?

(50 ஆம் பக்கம் பார்க்கவும்)

மகாபாரதம்

ராஜாஜி

74. பீஷ்மர் வீழ்ந்தார்

பத்தாவது நாள் யுத்தம். சிகண்டியை முன்னால் வைத்துக் கொண்டு அருச்சுனன் பிதாமகரைத் தாக்கினான். கொழுந்து விட்டு எரியும் நெருப்பைப் போல் பீஷ்மர் ஜொலித்தார்.

சிகண்டியின் அம்புகள் கிழவருடைய மார்பைப் பிளந்தன. அப்போது பீஷ்மருடைய கண்களிலிருந்து தீப்பொறிகள் பறந்தன. அந்தத் திருஷ்டியானது அப்படியே சிகண்டியை எரித்து விடும்போல் இருந்தது. அடுத்த நிமிஷம் அவர் கோபம் தணிந்து தம் காலம் வந்து விட்டது என்று எண்ணி ஸ்திரீ ஜன்மமாகிய சிகண்டியை எதிர்க்காமலே நின்றார். பார்த்தவர்களுக்கெல்லாம் இது ஓர் அற்புதமாக இருந்தது. தேவர்களும் வியந்தார்கள்.

சிகண்டி பீஷ்மருடைய மன நிலையைக் கவனிக்காமல் அம்பு மேல் அம்பு எய்து கொண்டே போனான். பீஷ்மர் சும்மா இருந்த இச்சமயத்தில் அருச்சுனனும் மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பிதாமகருடைய மர்மஸ்தானங்களை நன்றாகக் குறி வைத்துப் பார்த்து அடித்தான்.

உடல் முழுதும் இவ்வாறு பிளக்கப்பட்ட பீஷ்மர் புன்சிரிப்புச் செய்து துச்சாதனனைப் பார்த்து ''இவை அருச்சுனனுடைய அம்புகள். இவை சிகண்டியின் அம்புகள் அல்ல. தாய் நண்டின் உடலை அதன் சிசுக்கள் கிழிப்பதுபோல் இந்த அம்புகள் என் உயிரைத் துன்புறுத்துகின்றன'' என்றார். தன்னுடைய அருமைச் சீடன் எய்த அம்புகளை அவ்வாறு பிதாமகர் கருதினார்.

இவ்வாறு சொல்லி ஒரு சக்தியாயுதத்தை எடுத்துப் பார்த்தன் மேல் வீசினார். அதை அவன் மூன்று பாணங்களால் வெட்டினான். அதன் மேல் இது கடைசிப் போர் என்று கத்தியும் கேடயமுமாக ரதத்தினின்று பிதாமகர் கீழே இறங்கப் பார்த்தார். அவர் அவ்வாறு இறங்கு முன் அருச்சுனன் அவருடைய கேடயத்தை அம்புகளால் வெட்டித் துண்டு துண்டாக்கினான். பிதாமகரின் உடல் முழுவதும் இரண்டு விரற்கடை இடம் கூட இல்லாமல் அருச்சுனனுடைய அம்புகள் பாய்ந்தன. ரதத்தினின்று பீஷ்மர் தலை கீழாகத் தரையில் வீழ்ந்தார். அவர் விழும்போது தேவர்கள் வானத்தில் கை கூப்பி நின்று நமஸ்கரித்தார்கள். நல்ல மணமும், குளிர்ந்த நீர்த் துளிகளும் கலந்த காற்று வீசிற்று.

ஆகாயத்திலிருந்து பூமிக்கு இறங்கி உடலுக்கு உணவும், ஆன்மாவுக்கு மங்கலமும் தந்து மக்களுக்கெல்லாம் தாயாக நிற்கும் கங்கையின் அவுரச புத்திரன்; தகப்பனான சந்தனு ராஜனுக்குச் சுகம் தருவதற்காகத் தனக்குச் சந்ததியும் வேண்டாம்; விவாகமும் வேண்டாம் என்று அனைத்தும் துறந்து விரதம் காத்த வீரன்; பரசுராமனை வென்ற நிகரற்ற சூரன்; தன்னைச் சந்தேகித்த துரியோதனனுக்குத் தன் சத்தியத்தை நிரூபிக்க உடல் முழுவதும் நெருப்பாக எரிக்கும் அம்புகள் பாய்ந்து உடல் விழும் வரையில் அவனுக்காகத் தன் கடமையைச் செய்து விட்டுப் பாரதப் போரின் பத்தாவது நாளில் பிதாமகர் தேரினின்று கீழே விழுந்தார்.

பீஷ்மர் விழும்போது கௌரவர்களுடைய இருதயங்களும் கூட விழுந்தன என்கிறார் வியாசர்.

பீஷ்மருடைய உடல் தரையைத் தீண்டவில்லை. தேகத்தில் எல்லாப் பாகங்களிலும் குத்திக் கோத்து நின்ற கொடிய அம்புகள் பிதாமகருடைய உடலை அப்படியே மேலாகத் தாங்கி நின்றன. அவ்வாறு நிலத்தைத் தீண்டாமல் அம்பு சயனத்தில் கிடந்த உடல் புது தேஜசுடன் ஜொலித்தது. இரு புறத்துச் சேனைகளும் யுத்தத்தை நிறுத்தி விட்டு, திரள் திரளாக, யுத்த களத்தில் விழுந்துகிடந்த பிதாமகரைப் பார்க்க ஓடி வந்தார்கள். பிரஜாபதியான பிரம்மனைத் தேவர்கள் நமஸ்கரிப்பது போல் பாரத தேசத்து

அரசர்கள் பீஷ்மரை வணங்கி நின்றார்கள்.

ஃ ஃ ஃ

''என் தலையில் அம்பு குத்தவில்லை. அது தொங்குகிறது. உயரத் தூக்கித் தாங்கும்படியாக ஏதேனும் வைத்து உதவுங்கள்'' என்றார் பீஷ்மர். அருகிலிருந்த அரசர்கள் உடனே ஓடிப்போய்த் தலையணைகளைக் கொண்டு வந்தார்கள். பட்டும் பஞ்சுமாக இருந்த அந்தத் தலையணைகளைப் பிதாமகர் வேண்டாம் என்று சொல்லி விட்டு அவ்விடமிருந்த அருச்சுனனை நோக்கி, ''அப்பனே! பார்த்தா! என் தலைக்கு ஆதாரமில்லை. கீழே தொங்குகிறது. சரியான தலையணையைப் பார்த்துக் கொண்டு வந்து வைப்பாயாக!'' என்றார்.


தன் உயிரைக் குடிக்கும் அம்புகளை எய்த அருச்சுனனைப் பார்த்துப் புன்சிரிப்புடன் இந்த வார்த்தைகளைச் சொன்னார். அதைக் கேட்டதும் அருச்சுனன் தன் தூளியிலிருந்து மூன்று அம்புகளை எடுத்துப் பிதாமகர் தலையை அவற்றின் கூரிய முனைகளின் மேல் வைத்து அமைத்தான்.

''அரசர்களே! அருச்சுனன் அமைத்திருக்கும் தலையணையே எனக்கு மகிழ்ச்சியளித்தது. தேகத்தை விட்டுப் பிரிய இந்தக் காலம் தகுந்ததல்ல. உத்தராயணம் வரையில் நான் இந்த இடத்திலேயே இப்படியே கிடப்பேன். அது வரையில் என் ஆத்மா தேகத்தில் நிற்கும்; உங்களில் அப்போது யார் உயிருடன் இருப்பீர்களோ அவர்கள் வந்து என்னைப் பார்க்கலாம்!'' என்றார்.

பிறகு பிதாமகர் அருச்சுனனைப் பார்த்து, ''அப்பனே! உடலெல்லாம் எரிகிறது. கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் தருவாய்!'' என்றார்.

உடனே அருச்சுனன் தன் வில்லை நன்றாக வளைத்துப் பீஷ்மருக்கு வலது பக்கத்தில் அம்பை நிலத்துக்குள் செல்லும்படியாக விட்டான். அது பாதாளத்தில் புகுந்து மறைந்தது. உடனே அந்த இடத்தில் ஓர் ஊற்றுக் கிளம்பி உயரக் குதித்துப் பாய்ந்தது. தாயாகிய கங்கை தன் அருமை மகனுடைய தாகத்தைத் தீர்க்க வந்தது என்கிறார் கவி. அமிருதம் போன்ற அந்த ஜலத்தைக் குடித்து பீஷ்மர் தாகத்தைத் தீர்த்துக் கொண்டு மகிழ்ச்சி அடைந்தார்.

''துரியோதனா! நல்ல அறிவு அடைவாயாக! அருச்சுனன் என் தாகத்துக்குத் தண்ணீர் எப்படி உண்டாக்கினான் பார்த்தாயா? இதை உலகத்தில் வேறு எவன் செய்வான்? இனி தாமதிக்க வேண்டாம்! அவனிடம் சமாதானமாகப் போ! இந்த யுத்தம் என்னோடு முடிவு பெறலாம்.



அப்பனே! நான் சொல்வதைக் கேள். பாண்டவர்களுடன் சமாதானம் செய்து கொள்'' என்றார். நோயாளிக்கு இறக்கும் தறுவாயில் மருந்து பிடிக்காது. கசக்கிறது என்பான். அவ்வாறே துரியோதனனுக்கும் பிதாமகரின் பொன் மொழிகள் பிடிக்கவில்லை.

அரசர்கள் எல்லோரும் தத்தமது பாசறைக்குச் சென்றார்கள்.

75. பிதாமகரும் கர்ணனும்

பீஷ்மருடைய தலைமையை இழந்த கௌரவ சேனை இடையனை இழந்த ஆட்டுக் கூட்டத்தின் நிலைமையில் இருந்தது. சத்தியசந்தரான பீஷ்மர் வீழ்ந்தபோதே கௌரவர்கள் அனைவரும் யுத்தகளத்தில், ''கர்ணா! கர்ணா! நீதான் காப்பாற்ற வேண்டும்'' என்று கத்தினார்கள்.

கர்ணன் போரில் கலந்து கொண்டால் வெற்றி நிச்சயம் என்று கௌரவ வீரர்கள் அனைவரும் எண்ணினார்கள். பீஷ்மர் தலைமை வகித்த பத்து நாட்களுக்கும் சூரிய குமாரன் இன்றியே யுத்தம் நடந்தது. பீஷ்மரால் கர்வபங்கம் செய்யப்பட்ட கர்ணன் கோபங் கொண்டு, ''நீர் ஜீவித்திருக்கும் வரையில் நான் போர் புரியமாட்டேன். நீர் பாண்டவர்களைக் கொன்று துரியோதனனுக்கு வெற்றி தந்தீராகில் நான் அரசனிடம் அனுமதி பெற்றுக் கானகம் செல்வேன். நீர் தோல்வியுற்று வீழ்த்தப்பட்டு மேலுலகம் சென்றீரானால் உம்மால் அிரதன் என்று மதிக்கப்படாத நான் ரதத்தின் மேல் ஏறி உம்மால் அதிரதர்களாக மதிக்கப்பட்ட அனைவரையும் வீழ்த்தித் துரியோதனனுக்கு வெற்றியைச் சம்பாதித்துத் தருவேன்'' என்று பிரதிக்ஞை செய்திருந்தான். துரியோதனனுடைய சம்மதத்தின் பேரில் யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் விலகியிருந்த கர்ணன்



இப்போது பாதசாரியாகப் பீஷ்மரிடம் சென்று அவரை வணங்கினான்.

''குலத் தலைவரே! ஒரு குற்றமும் செய்யாமல் இருந்தாலும் உம்மால் மிகவும் வெறுக்கப்பட்டவனாகிய ராதையின் மகன் உம்மை வணங்குகிறேன்'' என்றான்.

வணங்கிவிட்டு நிற்கும்போது சூரிய குமாரன் முகத்தில் ஓரளவு பயக்குறி தோன்றியதைப் பிதாமகர் பார்த்தார். மிக்க கருணையுடன் அவன் மேல் கையை வைத்து மகனைத் தந்தை ஆசீர்வதிப்பதைப் போல் ஆசீர்வதித்தார். கண்களின் திருஷ்டியைத் தடுத்து நின்ற அம்புகளின் வழியாக அவனை மெதுவாகப் பார்த்து, ''நீ ராதையின் மகன் அல்ல. குந்திதேவியின் மகன் ஆவாய். உலக ரகசியமெல்லாம் அறிந்த நாரதர் இதை எனக்குச் சொல்லியிருக்கிறார். சூரிய குமாரா! உன் மேல் எனக்கும் உண்மையில் துவேஷம் ஒன்றும் இல்லை. நீ பாண்டவர்களைக் காரணமின்றித் துவேஷிக்கிறாய் என்பதே என் வருத்தத்துக்குக் காரணமாக இருந்தது. உன்னுடைய சௌரியத்தையும் கொடையையும் நான் அறிவேன். சூரத்தனத்தில் நீ பல்குனனுக்கும் கிருஷ்ணனுக்கும் ஒப்பிடக் கூடியவன் என்பதில் சந்தேகமில்லை. பாண்டவர்களுடைய சகோதரனை நீ அவர்களைச் சிநேகிப்பதே தருமம். யுத்தத்தில் என் பங்கு முடிந்ததோடு அவர்கள்பேரில் உனக்குள்ள பகையும் முடிவடைய வேண்டும் என்பது என் விருப்பம்'' என்றார்.

இதைக் கேட்ட கர்ணன் மிகவும் வணக்கத்தோடு, ''பிதாமகரே! நான் குந்தி புத்திரன் என்பதை அறிவேன். தேரோட்டியின் மகன் அல்ல என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் துரியோதனனுடைய பொருளைப் பெற்றுக் கொண்டு அவனுக்குக் கட்டுப்பட்டு விட்டேன். அவனை விட்டு விட்டு அவன் விரோதிகளின் பக்கம் சேருவது என்னால் முடியாத காரியம். துரியோதனனுக்காக நான் போர் புரிந்தே தீர வேண்டும். அதற்கு நீர் அனுமதி தருவீராக! நான் சொன்னதிலும், செய்ததிலும் பல குற்றங்கள் உண்டு. அவற்றை க்ஷமித்து என்னைக் காப்பாற்றுவீராக!'' என்று வேண்டிக் கொண்டான்.

தருமங்களனைத்தையும் அறிந்த பிதாமகர் கர்ணன் சொன்னதை ஆலோசித்து, ''உன் இஷ்டப்படியே செய். தருமமே செய். தருமமே வெற்றி பெறும்'' என்றார்.


பீஷ்மர் விழுந்த பின்னும் பாரத யுத்தம் முடிவடையவில்லை. பிதாமகருடைய பத்தியமான வார்த்தையை அலட்சியம் செய்து கௌரவ வீரர்கள் மறுபடியும் யுத்தத்தைத் தொடங்கவே நிச்சயித்தார்கள்.

''பரசுராமனை வென்ற வீரரே! சிகண்டியினால் அடிக்கப்பட்டு யுத்த பூமியில் படுத்திருக்கிறீர்! தருமத்தின் சிகரமும் உத்தமருமான நீரே இந்தக் கதியை அடைந்து விட்டீர் என்றால் இந்த உலகத்தில் ஒருவனும் புண்ணியத்தின் பலனை அடைய மாட்டான் என்பது நிச்சயம். கௌரவர்களுக்கு வெள்ளத்தைத் தாண்டும் தெப்பமாக இருந்தீர். இனிமேல் பாண்டவர்களால் தாக்கப்பட்டு அவர்கள் மிகவும் கஷ்டநிலை அடையப் போகிறார்கள். அருச்சுனனும் கிருஷ்ணனும் நெருப்பும் காற்றும் சேர்ந்து காட்டை அழிப்பதுபோல் நாசம் செய்வார்கள்; சந்தேகமில்லை. உம்முடைய புண்ணியப் பார்வையை என் மேல் செலுத்தக் கோருகிறேன்'' என்றான் கர்ணன் பீஷ்மரிடம்.

பீஷ்மர் கர்ணனை ஆசீர்வதித்தார். ''நதிகளுக்குச் சமுத்திரம் போலவும், விதைகளுக்கு மண்ணைப் போலவும், பிராணிகளுக்கு மேகம் போலவும் உன்னை நண்பனாகக் கொண்டவர்களுக்கு உறுதியான ஆதாரமாக இருக்கிறாய். துரியோதனனைக் காப்பாற்றுவாயாக! அவனுக்காக நீ காம்போஜகர்களை ஜெயித்தாய். இமயமலையின் துர்க்கங்களிலுள்ள கிராதர்களையெல்லாம் அவனுக்காக அடக்கினாய். கிரிவிரஜ ராஜாக்களுடன் துரியோதனனுக்காகப் போர் செய்து வெற்றி பெற்றாய். இன்னும் அநேக காரியங்கள் செய்திருக்கிறாய். துரியோதனனுடைய சேனைக்கு நீ இனி ரக்ஷகனாக இருப்பாயாக! உனக்கு மங்களம். சத்துருக்களோடு யுத்தம் செய், போ. கௌரவப் படையை உன்னுடைய சொந்த சொத்தாகப் பாவித்துப் பாதுகாப்பாயாக!'' என்று கர்ணனைப் பிதாமகர் ஆசீர்வதித்தார்.

கர்ணன் பிதாமகருடைய ஆசி பெற்று மகிழ்ச்சியடைந்தவனாக ரதம் ஏறி யுத்தகளத்துக்கு வந்தான். அவனைப் பார்த்ததும் துரியோதனனுக்கு அடங்கா மகிழ்ச்சி பொங்கிற்று. பீஷ்மருடைய பிரிவையும் ஒருவாறு மறந்தான்.


(தொடரும்)


இதோ உங்கள்
வனப்புக்குப் புதிய பூவிதழ்-மென்மை
தருவது புதிய
ஹிமாலயா
புக்கே ஸ்நோ
HIMALAYA
BOUQUET
SNOW
ரோஜா மணமுடனும்
வருகிறது இன்று



007 பாலு
கதை: குமரன்
படம்: விஜயா
௧
சந்திரன் ஏறி இருந்த டாக்சி மீனம்பாக்கத்துக்கு விரைந்து கொண்டிருந்தது! பாலுவும் சந்திராவும் விடாமல் பின் தொடர்ந்து கொண்டிருந்தனர்.
பாலு! இது என்ன, டாக்சியிலேயே இவன் வெளியூர் போகிறானா?
இல்லே, சந்திரா! அப்படி இராது. விமான நிலையத்துக்குப் போகிறது டாக்சி என்று நினைக்கிறேன்.
விமான நிலையத்தில்
நான் சொன்னது சரியாகி விட்டதா? வா, உள்ளே போய்ப் பார்ப்போம்!
எந்த ஊருக்கு டிக்கெட் வாங்கி இருக்கிறானோ!
பாலுவின் சட்டைப் பையில் எப்போதும் இருக்கும் பத்து ரூபாய் நோட்டு கை கொடுத்து உதவியது. அனுமதிச் சீட்டு வாங்கிக் கொண்டு கட்டிடத்துக் குள் சென்றனர்.
பம்பாய் செல்லும் பயணிகளைக் கவனிக்கும் உத்தியோகஸ்தர்கள் உள்ள 'கவுண்டர்' அருகே சந்திரன் நிற்பதைக் கவனித்தான் பாலு.
பாலு! இப்படி மறைவாக நில். அவன் கண்ணில் பட்டுத் தொலைய வேண்டாம்.
சந்திரா! இவன் பம்பாய் போகிறான் என்று தெரிகிறது. இவனைத் தொடர்ந்து நான் சென்றே ஆக வேண்டும்!
அது எப்படி சாத்தியம்? உன்னிடம் பணமும் கிடையாது; பணம் இருந்தாலும் டிக்கெட் கிடைக்குமா என்று சந்தேகம். வீட்டுக்குப் போய் உன் அப்பாவிடம் விவரம் சொல்லி வாங்கி வரவும் நேரமில்லே...


ஏதாவது ஒரு உபாயம் கண்டு பிடித்துத்தான் ஆக வேண்டும். நீ இங்கேயே ஒதுக்குப் புறமாய் இரு. இதோ வருகிறேன்.
போகிற போக்கில், சந்திரன் பேசுவது பார்வதியின் காதில் விழுந்தது......
ஏன் சார்? இவ்வளவு லேட்டாகவா வருவீங்க? விமானம் கிளம்ப இன்னும் பத்தே நிமிஷம்தானே இருக்கு?
விமானப் பயணம்னா இது தான் தொந்தரவு. முக்கால் மணி நேரம் முன்னாடியே வந்து காத்துக்கிடக்கணும்னு எதிர்பார்க்கிறீங்க. எங்களுக்கு வேறே வேலை கிடையாதா?
விமானம் கிளம்ப இன்னும் பத்து நிமிஷம்தான் இருக்கு என்று தெரிகிறது. இதுதான் சமயம். கடைசி நேரத் தகிடுதத்தத்தில் இறங்கினால் மோசடி அம்பலமாவதற்கு முன் பறந்து விடலாம் விமானத்தில்!
பாலு "ஆண்கள்" என்று எழுதப் பட்டிருந்த பாத்ரூம் கதவைத் திறந்தான். உள்ளே யாரும் இல்லை என்பதைப் பார்த்துக் கொண்டான். பிறகு.....
ஆண்கள்
இந்தாப்பா, ஒரு நிமிஷம் பெட்டியை வைச்சுட்டு இப்படி வரயா?
எந்த விதமான சந்தேகமுமின்றி விமான நிலையப் போர்ட்டர் அருகே நெருங்கியதும்......
ஜூடோ பிடியை அழுத்தி அவனை உள்ளே இழுத்துக் கதவைச் சாத்தினான் பாலு. அவன் சீருடையை நீக்கி விட்டு அணிந்துகொண்டான்....
இப்போ போடுகிற இந்தப் போடில் முக்கால் மணி நேரம் அமைதியாகத் தூங்கணும் நீ!
தொடரும்.....




Amul

அத்தியாயம் ஒன்பது

வர்ணம் கரைகிறது!

'அவனுக்கு என்னைப் பார்க்கவோ என்னிடம் பேசவோ பிடிக்கவில்லை போலும்! அதனால்தான் நேற்று சென்ட்ரல் ஸ்டேஷனில் நடந்து கொண்டது போலவே இன்று தன் வீட்டிலும் என்னை அலட்சியப்படுத்தியிருக்கிறான்.'

இப்படி ஓர் எண்ணத்தால் கிளர்ந்த கோபத்துடன் கருணாவின் வீட்டை விட்டு வெளியேறித் தன் வீடு வந்து சேர்ந்த முத்துசிவனுக்கு வெகு நேரம் வரையில் மனம் அமைதியில்லாமல் படபடத்துக் கொண்டிருந்தது.

'என்னிடம் அவன் ஏதும் பேசாமல் மாடிக்குப் போய்விட்டது அவனுடைய அம்மாவுக்கே சரியாகப் படாததால்தான் நான் புறப்பட்ட சமயம் அவனைக் கூப்பிட்டிருக்கிறாள். அதற்கும் அவன்



செவிசாய்த்து மாடியிலிருந்து இறங்கி வரவில்லையே, ஏன் இந்த வீம்பும் வீறாப்பும்?'

அவனுடைய கோபம் இப்போது சிரிப்பாக மாறியது.

'வீட்டில் நுழையும்போதே எதிரில் நின்றிருந்த அவனை நான் தரிசிக்கவில்லை என்ற கோபமாக்கும்! பதினைந்து வருடங்களுக்கு முன்னால் அவனிடமிருந்த விளையாட்டுப் புத்தி, குறும்புத்தனம், சிறு விஷயங்களுக்கெல்லாம் சிணுங்குவது, முறுக்கிக் கொள்வது, ஏட்டிக்குப் போட்டியாக நடப்பது ஆகிய குணங்கள் இன்னமும் மாறாமல் அப்படியே இருப்பது ஆச்சரியமே! அவனும்தான் நேற்று தன் சிநேகிதிகள் கூட இருந்ததால் என்னைப் பார்க்காத மாதிரி போனான்; இன்று அவனுடைய தந்தை என் பக்கத்தில் இருந்ததால் நானும் அவனைப் பார்க்கவில்லை. அவனுக்கு ஒரு நியாயம், எனக்கு ஒரு நியாயமா? அவனுடைய வீடு தேடி நான் வந்தேன் என்றால் எதற்காக? அவனைப் பார்க்கத்தானே! இதைக் கூடவா அவனால் புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது?'

முத்துசிவனின் முகத்தில் நிலவிய குறுநகை மாறி, இப்போது கவலை சூழ்ந்தது.

'ஒருகால் அவனது மனத்தில் ஏதேனும் புதிய மாறுதல் நிகழ்ந்துவிட்டிருக்குமோ? நான் அவனை நேரில் பார்த்துப் பேசிப் பல மாதங்கள் ஆகின்றனவே! இந்த இடைக்காலத்தில் அவன் வேறு ஏதாவது புதிய தீர்மானத்துக்கு வந்து விட்டிருப்பாளோ? அதனால்தான் என்னைப் பார்க்கவும் பேசவும் விரும்பாமல் ஒதுங்கிப் போகிறாளோ?'

கசப்பு மாத்திரையை விழுங்க முயன்று அது தொண்டையில் சிக்கிக் கொண்ட மாதிரி முகத்தைச் சுளித்துத் திருதிருவென விழித்த அவன் வேகமாகத் தலையை ஆட்டியபடியே எழுந்து அறையில் உலாவலானான்.

'என்ன இது, பைத்தியக்காரத்தனமான எண்ணம்! என் அன்புச் கருணாவாவது, மனம் மாறுவதாவது! அப்படி மாறுகிறவளாயிருந்தால் எப்போதோ அவன் மாறியிருக்க வேண்டுமே! இத்தனை வருட காலம் எனக்காகக் காத்திருந்து என்னையே தியானித்துக்



காதல் நோன்பு நோற்றுக் கொண்டிருந்தவன் இந்தக் கடைசி சமயத்தில்தானா தன் மனத்தை மாற்றிக் கொள்ளத் துணிவான்? அப்படி ஏதேனும் நடந்திருந்தால் அவனுடைய தந்தைக்கு அது தெரியாமல் போகுமா? தெரிந்திருந்தால் என்னிடம் இன்று அவர் அத்தனை அன்பும் பரிவுமாகப் பேசுவாரா? என் கடைக்குட்டித் தங்கை மைதிலி கல்யாணம் பண்ணிக் கொண்டு போய் விட்டதால் இனி என் அம்மா வீட்டிலே பேச்சுத் துணைக்குக்கூட ஆளின்றி இருப்பாளே என்று அநுதாபப்பட்டாரே, அதற்கு என்ன அர்த்தம்? — உனக்காக இல்லாவிட்டாலும் உன் அருமைத் தாயாருக்காகவாவது என் மகளைச் சீக்கிரம் கல்யாணம் பண்ணிக் கொள் — என்பதுதானே?'

தன் மனத்துக்கு இதமாக இப்படி ஒரு சமாதானத்தை அவன் தேடிக் கொண்ட மறுகணமே மற்றோர் எண்ணம் குறுக்கே வந்து புகுந்து அதை வெட்டியது.

'ஆமாம்; கனகசபையின் அந்தக் கரிசனப் பேச்சுக்கு இது மட்டுமா அர்த்தம்? — உன் தம்பி, தங்கைகளுக்கெல்லாம் கல்யாணம் பண்ணி வைக்கிற வரையில் பிரம்மச்சாரியாக இருப்பதென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த நீ அதில் வெற்றியும் கண்டு விட்டாய்; ஆனால் அதோடு உன் காலமும் ஓடிப் போய் இப்போது ஒண்டிக் கட்டையாக நிற்கிறாயே, தெரிகிறதா? இப்படி நிற்பதிலுள்ள கஷ்டத்தை இனிமேல்தான் உணரப் போகிறாய். ஏனென்றால், இதுகாறும் உனக்காகக் காத்திருந்த என் மகளின் மனம் இப்போது வேறு முடிவுக்குத் திரும்பி விட்டது. என்ன செய்வது? பாவம், அது உன் தலைவிதி! ஆனாலும் கவலைப் படாதே! நாளாவட்டத்தில் இந்தத் தனிமைத் துன்பம் உனக்குப் பழக்கப் பட்டுப் போய் விடும்—என்ற நேர் எதிர் அர்த்தத்திலும் அவ்வாறு சொல்லியிருக்கலாம் அல்லவா?'

தனக்குத் தானே செய்து கொண்ட இவ்வூசத்தால் திடீரென்று எரிச்சல் அடைந்த முத்துசிவன், 'சே, என்ன அவமானம்! நான் அவளைப் பார்க்க அவளுடைய வீட்டுக்குப் போனதே முட்டாள்தனம்! அவளாக வரட்டும் என்று பிகுவோடு இருந்திருக்கலாம்; அவசரப்பட்டு ஓடி விட்டேன்!' என்று தன்னையே கடிந்து கொள்வது போல் முகத்தைச் சுளித்து முணுமுணுத்தபடி, பேப்பர்ப் பையன் அப்போதுதான் கொண்டு வந்து போட்டு விட்டுப் போன பத்திரிகையைப் பிரித்தான்.

முதல் பக்கத்தைப் புரட்டியதுமே நேற்றைய பத்திரிகையில் கண்ட கிழிசல் விஷமம் அவனுடைய நினைவில் முட்டியது. அதனால் செய்தித் தலைப்புக்களையும் பார்க்காமல் பரபரவெனப் பக்கங்களைப் புரட்டினான். இன்றைய அந்தப் பத்திரிகையின் எந்தப் பக்கத்திலும் எவ்வித கிழிசலோ, கத்திரிப்போ காணப்படவில்லை.

தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்ட முத்துசிவன், 'சரிதான்; அது வலம்புரி செய்த விஷமமாகத்தான் இருக்கும். அவன் புரூஃப் ரீடர் வேலை பார்ப்பவன் இல்லையா? தான் படித்த செய்தியில் ஏதேனும் அச்சுப் பிழைகள் கண்ணிலே பட்டிருக்கும்; அவற்றைப் பார்க்கப் பொறுக்



காமல் வேலை மெனக்கிட்டுத் திருத்தியிருப்பான். பிறகு அந்த அசட்டுத்தனத்தை மறைக்க அச்செய்திப் பகுதியை அப்படியே கிழித்துப் போட்டு விட்டிருப்பான்' என்று எண்ணி மீண்டும் சிரித்துக் கொண்டான். அதே பக்கத்தில் பெட்டி கட்டிப் போட்டிருந்த 'சென்சேஷனல் செய்தி'யொன்றைப் படிக்க முற்பட்ட சமயம், வராந்தாவில் யாரோ விம்மிப் பொருமியழும் ஒலி கேட்டுத் திடுக்குற்றவனாய்ச் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தான்.

அங்கே, வலம்புரியின் மனைவி சுந்தரி சுவர் ஓரமாக நின்று முகத்தை ஒரு கையால் மறைத்தவாறு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். அவளுடைய நான்கு வயதுத் தலைச்சன் பிள்ளையான ரவி என்ற சிறுவன் வராந்தாக் கட்டைச் சுவரின் மேல் ஏறிக் குத்துக்காலிட்டு உட்கார்ந்தபடி — தன் அப்

பனைப் போலவே பெரிய வேதாந்தி மாதிரி சிந்தனையில் ஆழ்ந்து — எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டாவது பிள்ளையான சந்திரா என்ற பெண் குழந்தை தன் தாயின் முன்றானையைப் பிடித்தபடி சிணுங்கி அழுது கொண்டிருந்தது. அன்னபூரணி யம்மாள் அந்தக் குழந்தையை இழுத்து அணைத்தவாறு, மருமகளிடம் தணிந்த குரலில் ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தாள்.

இவ்வளவையும் பார்த்த முத்துசிவனின் மனம் மிகவும் சங்கடப்பட்டுப் போயிற்று. ஆனாலும் அவன் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து வராந்தாவுக்குச் செல்லவில்லை. கையிலிருந்த பத்திரிகையை மடித்துப் போட்டு விட்டுத் தலையை ஒரு கையால் தாங்கிப் பிடித்துக் கொண்டு அண்ணாந்த வாக்கிலே சோபாவில் சாய்ந்தான்.

அவனுக்கு இது புதுக் காட்சியல்ல. ஏற்கெனவே இம்மாதிரி பல முறை பார்த்து விட்டிருக்கிறான். அத்துடன் தன் மைத்துனி எதற்காக இங்கே இப்படி அழுது கொண்டு வந்து நிற்கிறாள் என்பதற்கான காரணமும் அவனுக்குத் தெரியும். அதனால்தான் 'என்ன, ஏது' என்று ஒன்றுமே விசாரிக்கப் போகாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

மாமியாருக்கும் மருமகளுக்குமிடையில் ஏதோ இரகசியப் பேச்சு வார்த்தைகள் நடந்தன. சற்றைக்கெல்லாம் சுந்தரியின் விம்மல் ஒலியும் ஓய்ந்தது.

குழந்தைப் பெண் சந்திராவை இடுப்பில் எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள் அன்னபூரணி. அவளைப் பின் தொடர்ந்து சிறுவன் ரவியும் வந்தான். முக ஜாடையில் மட்டுமின்றி உடம்பின் அமைப்பிலும் தன் அப்பனை அப்படியே உரித்து வைத்துக் கொண்டிருந்தான் அவன்.

''டேய் ரவி, இங்கே வாடா!'' என்று சற்றே அதட்டிக் கூப்பிட்டான் முத்துசிவன்.

சிறுவன் தயங்கி நின்று திரும்பிப் பார்த்தான்.

''எங்கேடா உன் அப்பா? அவன் வீட்டிலே என்ன செய்கிறான்?''

''யாது பெதியப்பா? எங்க அப்பாவைக் கேக்கதீங்களா?'' என்று கேட்டுக்கொண்டே கண்களை மேலுயர்த்தி ஒரு கணம் யோசித்தான் சிறுவன். பிறகு தன் சின்னக் கையை நீட்டி விரல்களைக் குவித்து, ''அவது...அவது...'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்துப் பிறகு எதுவும் சொல்லாமல் வெட்கத்துடன் சிரித்து உடம்பைக் கோணி முறுக்கியபடி தன் பாட்டியிடம் ஓடி விட்டான்.

துயரம் கவிந்திருந்த முத்துசிவனின் முகத்தில் இளநகை படர்ந்தது. ''எல்லாம் அப்படியே அந்தக் கிராக்குப் பயலின் மறு பதிப்பு!'' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

பிள்ளைகளின் கை நிறைய பிஸ்கட்டை அள்ளிக் கொடுத்து அழைத்து வந்த அன்னபூரணி யம்மாள் அவற்றின் தாயார்க்காரியிடம் கொண்டு போய்விட்டாள்.

''நான் போயிட்டு வரேன், அத்தான்!'' என்ற குரல் கேட்டுச் சன்னல் பக்கம் திரும்பினான் முத்துசிவன். அங்கே தலை குனிந்தபடியே நின்றிருந்த சுந்தரி மெல்லப் பின்னால் நகர்ந்து தன் பிள்ளைகளுடன் புறப்பட்டுப் போனாள்.

ஒரு போலியான புன்னகையுடன் கூடத்து அறைக்கு வந்தாள் அன்னபூரணியம்மாள். அவளுக்காக இந்நேரம் காத்திருந்தவன் போல் சட்டென்று நிமிர்ந்து, ''என்னம்மா அது, என்ன விஷயம்?'' என்று கரகரத்த குரலில் கேட்டான் முத்துசிவன்.

''எல்லாம் வழக்கமா நடக்கிற கூத்துதான் தம்பி!'' என்றாள் அன்னபூரணியம்மாள்.

''அந்த முரட்டுப் பயல் இவளை அடிச்சுட்டானா?''

''இல்லே. அடிக்க வந்தானாம். இவள் பயந்துக்கிட்டு இங்கே ஓடி வந்துவிட்டாளாம்.''

''ஏன் அவன் அடிக்க வந்தானாம்? கேட்டீங்களா?''

''கேட்டேன். என்னமோ சொல்றாள். எனக்கு ஒண்ணும் புரியலே.''

''உங்களுக்குப் புரியாமப் போனால் போகிறது; அவள் சொன்னதைச் சொல்லுங்க, நான் புரிஞ்சுக்கிறேன்!''

மகனுக்குக் கோபம் வந்துவிட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட அன்னபூரணியம்மாள் தானும் அவனோடு சேர்ந்து கோபப்படுகிற மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு, ''ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்தப்ப இவள் எங்கோ வெளியே போயிருந்தாளாம்'' என்றாள் இழுத்தாற்போல்.

''எங்கோ என்றால் எங்கேயாம்?''

''அவளோட சிநேகிதியைப்பார்க்க.''

''யார் அந்தச் சிநேகிதி?''

''உனக்குக் கூடத் தெரியும், தம்பி! உன் சிநேகிதன் ஒருத்தன் இருக்கானே, நாடகம் கீடகம்னு போட்டுக்கிட்டு...''

''ஓ!.....ரட்சகனா?... அவன் சிநேகிதன் இல்லேம்மா, தெரிஞ்சவன்! சரி, விஷயத்தைச் சொல்லுங்கள்.''


கால்கேட் மூலம், வாய்நாற்றத்தைத் தடுத்து நாள்முழுதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள் !



ஏனெனில்: ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் க்ரீம் வாய் நாற்றத்தையும் பற்சிதைவை விளைவிக்கும் கிருமிகளையும் 85 சத விகிதம் வரை அகற்றுகிறது.

கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறதென்றும் உணவு உட்கொண்டஉடனேயே கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால் இது வரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. கால்கேட் மட்டுமே இந்த நிரூபணம் பெற்றது !

'அதன் விந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையே தனி. கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள்தவறாது பல் துலக்க விரும்புவதில் வியப்பென்ன!



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இப்பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பா பல மாதங்களுக்கு வரும்.

இன்றே! வாங்குங்கள் ஜம்போ சைஸ்...அதி சிக்கனமானது!

தூய்மையான இன் மூச்சோடு வெண்மையான பற்களும் பெறவே... மற்றெந்தப் பற்பசையையும் விட உலகிலே அதிக மக்கள் கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்.

DC.G.38 TAM

''அந்தப் பிள்ளையாண்டானோட பெண்டாட்டி இவளுக்குத் தெரிஞ்சவளாம். அவளைத்தான் பார்க்கப் போயிருந்தாளாம். பேரு என்னவோ சொன்னானே...'' என்றவாறு ஒரு கணம் யோசித்த அன்னபூரணி, ''சுகந்தியா? ...ம்....? இல்லை... வசந்தி!'' என்றாள் சிரித்துக் கொண்டே.

இந்தப் பெயரை இன்று எங்கோ கேள்விப்பட்ட ஞாபகம் வந்தது முத்துசிவனுக்கு. சிறிது நேர யோசனைக்குப் பின் அதை நினைவுபடுத்திக் கொண்டும் விட்டான். ஆமாம்; கனகசபையின் வீட்டில் அவன் உட்கார்ந்திருந்தபோது சுகுணா போனில் 'வசந்தியா?' என்று கேட்டு ஏதோ பேசினாள் அல்லவா?—

''பேர் இருக்கட்டுமம்மா! யாரோ பழைய சிநேகிதி. அவளைப் பார்த்துப் பேசிவிட்டு வர இவள் போனாள்; இது ஒரு தப்பா? இதற்காக ஏன் அவன் அடிக்க வந்தானாம்?''

''அதுதான் எனக்கும் புரியலை.''

முத்துசிவனாலும் இப்போது இந்த விஷயத்தில் யார் பக்கம் நியாயம் இருக்கிறது என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. சற்று நேரம் மௌனமாயிருந்துவிட்டு, ''என்ன இருந்தாலும் அவன் இப்படி நாகரிகமில்லாமல் நடந்து கொள்கிறது கொஞ்சம்கூட நல்லா இல்லேம்மா! தாலி கட்டின பெண்டாட்டியிடம் தினத்துக்கு ஒரு வல்லடி வழக்குன்னு நடத்திக்கிட்டு இருந்தால் குடும்பம் எப்படி உருப்படும்? தாய் தகப்பன் இல்லாத பெண்ணாச்சே, அவள் எங்கே போய் நின்னு யார்கிட்டே ஆறுதல் பெறுவாள்?'' என்றான் எரிச்சலும் சலிப்புமாக.

''நீதான் போய் நல்லபடியா ரெண்டு வார்த்தை சொல்லி அவனைக் கண்டிச்சுட்டு வா, தம்பி!'' என்று அன்னபூரணியம்மாள் கூறி வாய் மூடுமுன் கோபமாகக் குறுக்கிட்டான் முத்துசிவன். ''அழகாயிருக்கும்மா நீங்க பேசறது! கண்டிக்கிறதிலேயும் நல்ல வார்த்தையாகச் சொல்லிக் கண்டிக்கணுமா? இனிமேல் அந்த மாதிரி கண்டிக்கிறது, கண்காணிக்கிறது எதையும் நான் செய்ய மாட்டேன்! என்னைக் கொஞ்ச நாளைக்கு நிம்மதியா யிருக்க விடுங்க!''

அன்னபூரணி யம்மாளுக்குத் திடுமென்று தன் கண்ணெதிரில் ஒரு கருந்திரை விழுந்து மீண்டும் அது மேலே சுருண்டு மறைந்தாற் போன்ற திக்பிரமை ஏற்பட்டது. ஏனென்றால் இதற்கு முன் தன் மைந்தன் இம்மாதிரி விஷயங்களை இப்படித் தட்டிக் கழித்துப் பேசி அவள் கேட்டதே கிடையாது. அதிலும் குறிப்பாக வலம்புரியின் விஷயத்தில் அவனுக்குக் கோபமே வந்ததில்லை. இன்று போல் சுந்தரி தன் கணவனிடம் சண்டை போட்டுக் கொண்டு எத்தனையோ முறை இங்கே ஓடி வந்திருக்கிறாள். அப்போதெல்லாம் அவனே அவளிடம் நடந்த விஷயங்களை விசாரித்து மிக மிகப் பொறுமையுடன் அவளுக்குப் புத்திமதிகளும் ஆறுதலும் சொல்லிச் சமாதானப்படுத்தி அனுப்பி வைப்பான். சில சமயம் அவளை அழைத்துக் கொண்டு போய் வீட்டில் விட்டு விட்டும் வருவான். ஆனால் இன்றோ, அவள் அழுது கொண்டு வந்து நின்றதைப் பார்த்தும் பாராதவன் மாதிரி இருந்து விட்டதோடன்றி அவளிடம், 'ஏன், என்ன?' என்று ஒரு வார்த்தையும் வாய் திறந்து கேட்கவில்லை.

அவனது இவ்விந்தையான போக்கை முன்பே கவனித்து உள்ளூறக் குழம்பிக் கொண்டிருந்த அன்னபூரணியம்மாளுக்கு இப்போது அவன் இப்படிக் கோபமாகவும் சலிப்பாகவும் பேசியதைக் கேட்டு ஒருவிதத் திகிலே ஏற்பட்டுப் போயிற்று. 'பிள்ளைக்கு இன்று ஆபீஸில் வேலைகள் அதிகமாயிருக்குமோ? அல்லது மைதிலியின் கல்யாணத்துக்காக வாங்கின கடன்களைக் கணக்குப் போட்டுப் பார்த்து அவற்றை அடைப்பது பற்றிய கவலையில் ஆழ்ந்திருந்த சமயம் இவ்விஷயனை



சச்சரவு சமாசாரத்தைக் கேள்விப் பட்டதும் அவனுக்கு எரிச்சல் மூண்டு விட்டிருக்குமோ?' என்றெல்லாம் பல சமாதானங்களைத் தேடித் தன்னைத் தானே தேற்றிக்கொள்ள முயன்றாள். ஆயினும் அவளது உள் மனத்தில் இவ் விஷயமாய் அத்தனை ஆழ்ந்த துயரமோ அதிர்ச்சியோ ஏற்பட்டுவிட வில்லை என்றே தோன்றியது.

'ஆமாம்; அவன் இப்படி வெறுத் தும் சலித்தும் பேசியது கொஞ்சங்கூடத் தவறே அல்ல! காலமெல்லாம் தன் தம்பி, தங்கைகளுக்காகவே தனது வாழ்க்கையைப் பணயம் வைத்துத் தன்னை அடக்கியும் ஒடுக்கியும் கட்டிப் போட்டும் வாழ்ந்து வந்த அவனுக்கு நேற்றுத்தான் அந்த இலட்சியக் கட்டி லிருந்து விடுதலை கிடைத்திருக்கிறது. இந்த நிலையில் இன்னமும் அவனை விடா மல் காலைச் சுற்றிச் சுற்றி வந்து தொல்லை கொடுப்பது நியாயமாகுமா? அதை அவனால் இனி பொறுக்கத்தான் முடியுமா? அவனும் மனிதன்தானே?'

இவ்வாறு எண்ணித் தன் மைந்தனை அன்பு கனியப் பார்த்த அன்னபூரணி யம்மாள், ''வருத்தப்படாதே, முத்து! அந்தச் சின்னப் பயல் இங்கே வரட் டும்; நானே கண்டிச்சு அனுப்ப றேன்! எழுந்திருச்சு வா, சாப்பிட!'' என்று பரிவுடன் சொல்லிக் கொண்டே உள்ளே சென்றாள்.

கோடை காலத்தில் திடீரென்று வானம் இருண்டு மின்னல் வெட்டி இடிஇடிப்பது போல் முத்துசிவனுக் கும் சமயா சமயங்களில் கோபம் வருவது உண்டுதான். தன் தம்பி, தங்கைகளில் யாரேனும் 'பரவா யில்லை, போகட்டும்' என்று விட்டுவிட முடியாத விஷமம் ஏதாவது செய்து விடும் போது அவனுக்கு அத்தகைய கோபம் வரும். மிகக் கடுமையான வார்த்தைகளால் கண்டிப்பதோடு சில சமயங்களில் இரண்டு அறையும் கொடுத்து விடுவான். ஆனால் அந்நிகழ்ச் சிக்குப்பின், அவனிடம் அடியும் திட்டும் வாங்கிய தம்பியே, அல்லது தங்கையே அவனைப் பார்த்துப் பரிதாபப்படும்படி யான நிலையில் அவன் ஆகிவிடுவான். அதாவது, இரண்டு மூன்று தினங்கள் வரை அவனுக்கு மனமே சரியில்லாம லாகிவிடும். அமைதியிழந்து தவிப் பான். நன்றாகச் சாப்பிட மாட்டான். ஏதோ பெரிய தவறு செய்துவிட்ட வன் போல் தன் அறையிலேயே அடைந்து கிடப்பான். எல்லாரிடமும் பயந்து குழைந்து பேசுவான். குறிப் பாகத் தன்னிடம் அடிபட்ட, அல் லது திட்டு வாங்கிய தம்பியிடமோ, தங்கையிடமோ வலியப் போய்ப் பேசிச் சிரிப்பான்; தமாஷ் பண்ணுவான்; அச்சமயம் அவர்கள் கேட்கும் பொருளை உடனே வாங்கிக் கொடுத்து விடுவான்.

இப்படிப்பட்ட குண நலன்களைக் கொண்டிருந்த அவனிடம் இன்று ஒரு பெரிய மாற்றம்! ஆமாம்; தன் தம்பி வலம்புரிக்கும் அவனுடைய மனைவிக்கும் இடையே நடந்த சண்டை சச்சரவைக் கேட்டு எரிச்சல் அடைந்து, அது பற்றி எதுவுமே விசாரிக்காமல் இருந்து விட்டதோடன்றி, 'இனி மேல் இம் மாதிரி விஷயங்களில் நான் தலையிட மாட்டேன்; அக்கறையும் காட்டமாட் டேன்! என்னை இதோடு விட்டு விடுங்கள்!' என்று ஒரு மூன்றாம் மனிதனைப் போல் தட்டிக் கழித்துப் பேசினான் அல்லவா? அப்படிப் பேசிய தைக் குறித்து அவன் அப்புறமும் சிந்திக்கவில்லை; அவ்விஷயத்தை மறு பரிசீலனை செய்யவும் இல்லை. 'இவ் வளவு காலம் இல்லாதவிதமாக இன்று இம்மாதிரிப் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டுவிட்டோமே!' என்று அவனுக் குச் சிறிதும் கவலையோ, வருத்தமோ, இரக்கமோ தோன்றவில்லை. இன்னும் சொல்லப் போனால் அப்படி ஒரு சம்ப வம் நடந்தது என்ற நினைவேகூட அவ னிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

வழக்கம்போல் மறுநாள் காலை உற்சாகமாக எழுந்தான். மைதிலி வீட்டில் இல்லை என்பதை மறந்து விடாமல் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு தனக்குத் தேவையான காரியங்களைத் தானே செய்து கொண் டான். அவற்றுக்கும் மேலே தேவைப் பட்டதற்குப் பிரக்ஞை பிறழாமல், 'அம்மா! அம்மா!' என்றே கூப்பிட் டான். ஒரு தடவைகூட 'மைதிலி' என்று அவன் வாய் அழைக்கவில்லை.

என்ன காரணத்தினாலோ காலை படுக்கையை விட்டு எழுந்தது முதல் அவனுக்குச் சுகுணாவின் நினைவு அடிக் கடி வந்து கொண்டேயிருந்தது. அத னால்தானோ என்னவோ நேற்று அவள் மீது ஏற்பட்ட கோபம், சந்தேகம் எல்லாம் மறைந்து, அவளை மீண்டும் சந்தித்துப் பேச வேண்டும் என்ற ஆவலும் அவனுள் கிளர்ந்தது.

'சரி; இன்று மாலை அவளுடைய பள்ளிக்கே போய் அவளை எப்படியும் பார்த்துப் பேசி விடுவது' என்று தீர் மானித்துக் கொண்டவனாய் ஆபீசுக்குப் புறப்பட்டான். (தொடரும்)

விட்டுக் கொடுத்தேன்

எஸ். பத்மாவதி



கமலாக்ஷி எனக்கு இரண்டு வருடம் பிந்திப் பிறந்து விட்டாள். அதனால் என்ன? பிறப்பில் நான் மூத்தவளாக இருந்தாலும், மற்ற எல்லா விஷயங்களிலும் அவளே மூத்தவளாக இருந்தாள்.

எங்கள் வீட்டில் கமலாக்ஷிதான் நல்ல 'வெளுப்பு'. எங்கள் குடும்பத்தில் அந்த நிறமே அபூர்வம் என்பதால்தானோ என்னவோ எல்லோரும் அவளிடம் அதிக அன்பு கொண்டிருந்தார்கள்.

என் அம்மாவைப் பெற்ற பாட்டி நல்ல சிவந்த நிறமாக இருப்பாளாம். கமலாக்ஷி நிறத்தில் தன் தாயாரைக் கொண்டதில் என் அம்மாவுக்கு மிகவும் பெருமை! அதுவும் அவள் புகுந்த வீட்டில் எல்லோரும் சிவந்த நிறத்தை உபாசிப்பவர்களாக இருந்து விடவே, அம்மாவின் பெருமை இன்னும் பிடிபடாமல் போயிற்று.

நான் என் அத்தையைக் கொண்டு பிறந்துவிட்டேனும். நல்ல கறுப்பு இல்லாவிட்டாலும் மாநிறம்தான்!

அம்மா என்னைக் குறிப்பிட்டுப் பேசும் போதெல்லாம், "நிறத்தில் உங்கள் குடும்பத்தைக் கொண்டு பிறந்துவிட்டாள்..." என்று அப்பாவிடம் குத்திக் காட்டுவாள்.

அப்பாவைப் பெற்ற பாட்டிக்கு இதைக் கேட்கும் போதெல்லாம் சிறிது ஆத்திரம் வரும். அதனால் பாட்டி விட்டுக் கொடுக்காமல், "நிறம் மட்டாக இருந்தால் என்ன? விசாலாக்ஷிக்கு என்ன குறை? மூக்கும், முழியுமா. கோவில் விக்கிரகம் மாதிரி இருக்கிறாள்" என்று சொல்லிக் கொண்டிருப்பாள்.

ஆனால் அவளுக்கும் கமலாக்ஷியிடம் தனிப் பிரீதிதான்!

எனக்கு ஞாபகம் தெரிந்ததிலிருந்து, "கமலாக்ஷி கமலாக்ஷி" என்று எதற்கெடுத்தாலும் எல்லோரும் அவளைப் பாராட்டிக் கொண்டிருப்பார்கள்.

அவள் கண்களைக் கசக்கி, அழுவதாகப் பாவனை செய்தால்கூட யாருக்கும் பொறுக்காது.

"ஐயோ! ஐயோ! மூஞ்சி மூக்கெல்லாம் மிளகாய்ப் பழம்போல் சிவந்துவிட்டதே! அழாதேம்மா. யார் கண்ணாவது படப் போறது" என்று ஒவ்வொருவராகச் சமாதானப்படுத்தக் கூடி விடுவார்கள்.

வீட்டில் எப்பொழுதும் அவளுக்குத் தனிச் சலுகைதான்! அப்பா எது வாங்கினாலும், இரண்டாகத்தான் வாங்குவார். ஆனால் இரண்டையும் கொண்டு வந்து "கமலாக்ஷி! கண்ணு! இந்தாம்மா!" என்று அவளிடம்தான் கொடுப்பார்.

கமலாக்ஷி இரண்டையும் தன் முன் வைத்து ஆராய்ந்து, தனக்குப்

பிடித்ததை எடுத்துக் கொண்டு, மற்றதை என்னிடம் நீட்டுவாள். அதுவரை நான் பொறுமையுடன் அருகில் நின்று கொண்டிருக்க வேண்டும்.

சில சமயம் நான் பொறுமை யிழந்து முதலில் எனக்குப் பிடித்ததைப் பொறுக்கிக்கொண்டு விட்டால் வந்தது அனர்த்தம் !

கமலாக்ஷி மற்றதை வீசி எறிந்து உடைத்து அமர்க்களப்படுத்தி விடுவாள்.

எல்லோரும் ஒன்ருகக் கூடி, ''நீ பெரியவளாச்சே.... விட்டுக் கொடுக்கக் கூடாதாமா....!'' என்று மூலைக்கு மூலை என்னைப் பிடித்துக் கொள்வார்கள். நான் அழுது பார்த்தாலும் முடிவில் ஜயிப்பது என்னவோ கமலாக்ஷிதான் !

நான் பொறுமை இழந்ததற்குத் தண்டனையாக என் கையிலிருக்கும் சாமானை அவள் பறித்துக் கொள்ள, அவள் ஆத்திரத்துடன் வீசி எறிந்து உடைத்ததை நான் எடுத்து வைத்துக் கொண்டு பொருமவேண்டி வரும்.

ரிப்பனிலிருந்து, பாவாடை, சட்டை, நகைநட்டு முதற்கொண்டு, எல்லாவற்றிலும் அவளுக்குத்தான் முதல் சலுகை !

அப்பா வெளியூர் போய் வரும் போது, துணிமணிகள் வாங்காமல் வரமாட்டார்.

''விசாலாக்ஷி நிறத்துக்கு இந்த வெளிர்ப்பச்சை நிறம்தான் பொருத்தமாக இருக்கும். கமலாக்ஷியின் சிவந்த கலருக்கு இந்தக் கருநீலம் பளிச்சென இருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே வருபவர், என் முகத்தைப் பார்த்துவிட்டுச் சிறிது நிறுத்திக் கொள்ளுவார்.

பாட்டிக்கு மட்டும் பொறுக்காது. ''ஏண்டாப்பா, இரண்டு பேருக்கும் ஒரே நிறத்தில் எடுத்து வரக் கூடாதா?'' என்று அங்கலாய்ப்பாள்.

இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருக்கும் கமலாக்ஷி, ''எனக்கு இந்த வெளிர்ப் பச்சை நிறம்தான் பிடிச்சிருக்கு'' என்று கூறி எனக்கு வாங்கி வந்ததை எடுத்து உடுத்திக்கொண்டு விடுவாள். நான் தயங்கியபடியே மற்றதை எடுத்துக் கொள்ளுவேன்.

''கமலாக்ஷிக் குட்டிக்கு எந்தக் கலர் கட்டினுலும் நன்ருக இருக்கே....!'' என்று அம்மா அவளைப் பார்த்துப் பெருமையாகச் சிரிக்கும்போது, 'ஓ! அப்படியென்ருல் எனக்கு இந்த நிறம் நன்ருக இருக்காது போலிருக்கிறது!' என்ற உணர்வு என் மனத்தைக் குடையும்.

இதுதான் சாக்கென்று அடுத்த நாள் கமலாக்ஷி என்னுடையதையும் எடுத்து உடுத்திக் கொண்டு விடுவாள்.

இப்படியாக நான் போற்றிப் போற்றி வைக்கும் சாமான்களெல்லாம் நான் உபயோகிக்காமலேயே பழசாகிப் போவதைப் பார்த்து நான் பெருமூச்செறிவேன்.

கமலாக்ஷி அனுபவித்து மிஞ்சியவை தாம் எனக்குக் கிடைத்து வந்தன.


எனக்கு எது இருக்கிறதோ இல்லையோ, சிறு வயதிலிருந்தே சகிப்புத் தன்மை மட்டும் கடவுள் நிறைய அளித்திருந்தார்.

'நீ பெரியவளாச்சே, விட்டுக் கொடுத்து விடு.... விட்டுக் கொடுத்து விடு....' என்ற வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு எனக்கு எதையும் தைரியமாக ஆசைப்படும் சுபாவமும் இல்லாமல் போய் விட்டது.

கடைக்குப் போனுல்கூடக் கமலாக்ஷி போல, 'எனக்கு அது வேண்டும், இது வேண்டும்' என்று கேட்கத் தெரியாது.

கமலாக்ஷி கைநிறையக் கண்ட கண்ட சாமான்களை வாங்கிக் கொண்டு வருவாள். நான்கு நாட்களுக்குப் பிறகு உருக்குலைந்த பொருள்களைக் குவியலாகக் கொண்டு வந்து என் அறையில் போட்டு, ''இந்தா ! எல்லாம் உனக்குத்தான்'' என்று சொல்லுவாள்.

அடுத்த நாள், ''எனக்கு ஒன்றுமே இல்லை. எல்லாம் விசாலக்காகிட்டே தான் இருக்கு....'' என்று அப்பாவிடம் சொல்லுவாள். அவர் நம்புகிருரோ இல்லையோ.... ஆனுல் மறுத்து



ஒரு வார்த்தை பேசாமல் திரும்பவும் அவளைக் கடைக்கு அழைத்துக் கொண்டு போவார்.

ஒரே ஒரு விஷயத்தில் கமலாக்ஷி என்னிடம் போட்டிக்கு வர முடியாமலிருந்தது. அதுதான் படிப்பு!

செல்லம் காரணமாகவோ என்னவோ, கமலாக்ஷிக்குப் படிப்பில் அக்கறை இல்லை. நான் ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகத் தேறிப் பள்ளிக்கூடப் பரிசுகளைத் தட்டிக் கொண்டு வந்த போது, அவள் குறைந்த மார்க்குகள் வாங்கித் தட்டுத் தடுமாறி, ஒவ்வொரு வகுப்பாகத் தேறிக் கொண்டு வந்தாள்.

பரிசுகள் வாங்கி வந்து என்ன பயன்! வீட்டுக்குள் நுழையும்வரைதான் அது என்னுடையதாக இருக்கும். பிறகு பெரியோர்கள் சொற்படி, நான் விட்டுக் கொடுத்து, அது கமலாக்ஷியின் பீரோவில் கொலுவிருப்பதைப் பார்த்துப் பெருமூச்செறிய வேண்டும்!


பதினேழாவது வயதில், அவள் மிகக் குறைந்த மார்க்குகளுடன் எஸ். எஸ். எல். ஸி.யில் தேறிய போது, நான் பி. ஏ. முதல் வகுப்பில் தேறியிருந்தேன்.

நான் எம். ஏ. படிக்க ஆசைப்பட்ட போது, கமலாக்ஷி காலேஜில் சேர மறுத்துவிட்டாள். சேர ஆசைப்பட்டிருந்தாலும் அவளுக்கு இடம் கிடைத்திருக்குமா என்பது சந்தேகம்.

அப்பாவுக்கு மட்டும் கமலாக்ஷி நன்றாகப் படிக்கவில்லையே என்று சிறிது வருத்தம். அம்மா அதைப் பற்றிச் சிறிதுகூடக் கவலைப்படவில்லை. பாட்டியோ, "கமலாக்ஷிக்குப் படிப்பெதற்கடி? படிப்பில்லாவிட்டாலும் அந்த ராஜாத்தியைக் கிளி போல யாராவது வந்து கொத்திக் கொண்டு போய்விடுவான்" என்று சொல்லிக்கொண்டிருப்பாள்.

அதைக் கேட்டு அம்மாவின் உச்சி குளிர்ந்து விடும். கமலாக்ஷியை உட்கார வைத்து அடிக்கடி 'திருஷ்டி' சுற்றிப் போடுவாள்.





பூப்போன்ற இட்டிலிகள்




PREETT ப்ரீத் ஸ்டீம்-இட் மட்டிலுமே

தயாராகக்கூடிய ஒரே சீராக வெந்துள்ள

மெத்தென்றிருக்கும் இட்டிலிகள்!


மதிப்புமிக்க உணவுப் பொருள்களை வீணாக்காதீர்கள். ப்ரீத் ஸ்டீம்-இட்டில் சிறந்த இட்டிலிகளைத் தயாரியுங்கள். ப்ரெஸ்டிஜ் ப்ரெஷ்ஷர் குக்கரும் இருந்துவிட்டால், ஏழே நிமிடங்களில் இட்லிகள் தயார்! சாதாரண பாத்திரங்களிலும் தயாரித்துக் கொள்ளலாம். நச்சு வேலையும் குழப்பமும் மிச்சம்!

மெருகிடப்பட்ட, நீடித்துழைக்கும் அலுமினியத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. பிரித்தெடுக்கக்கூடிய



தனித்தனி செட்டுகள் கொண்ட இதை ப்ரெஸ்டிஜ் ப்ரெஷ்ஷர் குக்கரின் எந்த மாடலிலும் பொருத்தமாக வைக்கலாம். மாடல் '77'ல் மற்றும் '777'ல் 12 இட்டிலிகளும், ஹை-டோம் மற்றும் சூப்பர் ஹை-டோமில் 16 இட்டிலிகளும், லீனியரில் 24 இட்டிலிகளும் தயாரித்துக் கொள்ளலாம். ப்ரீத்ஸ்டீம்-இட்டில் கேக்குகள், புட்டிங்குகள், இன்னும், உங்கள் இஷ்டப்படி எதையும் தயாரிக்கலாம்.

ப்ரீத் ஸ்டீம்-இட் வாங்கும்போது விதவிதமான ப்ரீத் ஸாஸ்பான்கள், ஸ்கில்லெட்டுகள் ஆகியவற்றையும் பாருங்கள்.



PREETT ப்ரீத் டீலரிடமிருந்து

Prestige ப்ரெஸ்டிஜ் ப்ரெஷ்ஷர் குக்கர் ஒன்று வாங்குங்கள்.

தயாரிப்பாளர்கள்: டிடி.(ப்ரைவேட்) லிமிடெட் பெங்களூர்-16

TTP 7874 TA.

என்மேல் யார் 'திருஷ்டி'யும் படாது என்றோ என்னவோ என்னைப் பற்றி யாரும் கவலைப்பட்டதே யில்லை.

பள்ளிப் படிப்பும் இல்லாமல், வீட்டில் கவலையற்றுத் திரிந்ததால் கமலாக்ஷி பதி னெட்டாவது வயதில் மதமத வென்று வளர்ந்து விட்டாள்.

நானும் அவளும் ஒரே உயரமாக இருந் தாலும், என் உடம்பு எப்பொழுதும் போல மெலிந்தே இருந்தது. அவள் தான் சிறிது அளவுக்கு மீறிப் பருத்து விட்டதாக எனக் குத் தோன்றியது. ஆனால் அதைப் பற்றி வீட்டில் மற்றவர்கள் ஒன்றும் பேசாததால், நானும் என் எண்ணத்தை என் மனத்தி லேயே வைத்துக் கொண்டேன்.

மேல் படிப்புக்காகக் 'காலேஜ்' சேர்ந்ததி லிருந்து, நான் அநேகமாக என் அறையை விட்டு வெளியே வரமாட்டேன். கமலாக்ஷி யின் குரல் வீடு, வாசல், தோட்டம் எங்கும் பரவி ஒலித்துக் கொண்டிருக்கும். 'படிப்பில் லாமல் அவளுக்கு எப்படிப் பொழுது போகிறது.....' என்று நானே சில சமயம் ஆச்சரியப்பட்டுக் கொள்ளுவேன்.

வீட்டில் சில நாட்களாக, எங்கள் கல் யாணப் பேச்சு வெகு மும்முரமாக நடந்து வந்தது.

'கமலாக்ஷியைப் பற்றிக் கவலையில்லை. யாரிடம் தாலியைக் கொடுத்துக் கட்டச் சொன்னாலும், கண்ணை மூடிக்கொண்டு அவ ளுக்குக் கட்டுவான். விசாலாக்ஷியைப் பற்றித் தான் கவலை....!'' என்று அம்மா வெளிப் படையாகவே பேச ஆரம்பித்தாள்.

கல்யாணப் பேச்சுக்களை ஒன்று விடாமல், கமலாக்ஷி கேட்டுக் கொண்டிருப்பாள். ஆனால் நானோ அந்தப் பேச்சு வந்ததுமே, நத்தை ஓட்டுக்குள் சுருங்குவது போல் என் அறையினுள் பதுங்கி விடுவேன்.

இருந்தாலும், பருவம் இருக்கிறதே, அது மகா பொல்லாதது ! புத்தகங்களுக்கும், எழுத்துக்களுக்கும் இடையிலேயே, மனத் திரையை விரித்து, கற்பனைக் காட்சிகளைச் சினிமாப் படமாகக் காட்ட ஆரம்பித்துவிடும்.

'என்னை மணப்பவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் நல்ல சிவந்த நிறமுடையவனாக மட்டும் கண்டிப் பாக இருக்க வேண்டும்......' என்று என்னையறியாமல் என் உள்ளம் ஜபம் செய்ய ஆரம்பித்தது.

ஒரு நாள் அப்பா, பாட்டியிடமும், அம்மாவிடமும் கூறிக் கொண்டிருந்ததைக் கேட்க நேர்ந்தது.

அப்பாவின் நெருங்கிய நண்பர் சிவசாமி மாமா இரண்டு நல்ல ஜாதகங்கள் கொடுத் திருக்கிறாராம். இருவரும் சிவசாமி மாமா வின் தங்கை பிள்ளைகளாம். மாமாவுக்கே இரண்டு பெண்கள் இருந்தும், உறவில் கல்யாணம் செய்து கொள்ளும் விருப்பம் அவர்கள் குடும்பத்தில் இல்லாததால், தங்கை பிள்ளைகளுக்கு வெளியில் வரன் பார்க்கும் பொறுப்பை, அவர் ஏற்றுக் கொண்டிருக்கிறாராம்.

கல்கத்தாவிலிருக்கும் பெரிய தங்கையின் மகன், ஐ. ஏ. எஸ். தேறியிருக்கிறானாம். பம்பாயிலிருக்கும் சிறிய தங்கையின் மகன் பி.ஏ.படித்துவிட்டுச் சொந்தத்தில் 'பிஸினஸ்' செய்கிறானாம். பெரிய சொத்துக்காரனாம் !

ஐ. ஏ. எஸ். வரன் நல்ல நிறமாக, ஆஜானு பாகுவாக ராஜா போல இருப்பானாம். மற்றவன் கறுப்பென்றாலும் ஆரோக்கியத்தில் மற்றவனுக்குக் குறைந்தவனல்லவாம்.

'' இருவருடைய போட்டோக்களையும் பார்த்தேன். எனக்கு மிகவும் பிடித்து விட்டது !'' என்று கூறிய அப்பா, அவர்கள் குடும்பத்தைப் பற்றியும் விவர மாகக் கூறிக் கொண்டிருந்தார்.

பிறகு ''விசாலாக்ஷி — கமலாக்ஷி இரு வருக்கும் இரண்டு ஜாதகங்களும் பொருந்தி இருக்கின்றன. இதில் யார் யாருக்கு எந்த மாப்பிள்ளை என்பதுதான் யோசிக்க வேண்டிய விஷயம்!'' என்று முடித்த அப்பா, சிறிது மௌனமாக இருந்தார்.

''இதில் யோசிப்பதற்கு என்ன இருக் கிறது...? கமலாக்ஷி நிறத்துக்கு ஐ. ஏ. எஸ். பையன்தான் பொருத்தம். விசாலாக்ஷி நிறம் மட்டு... அதனாலே... பிள்ளை நிறத்தைப் பற்றி யோசிக்க வேண்டியதில்லை. அதிலும் ஆண்களுக்குக் கறுப்பும் ஒரு தனி அழகு தான்!'' என்று கூறி அம்மா அந்தப் பிரச் னைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டாள்.

அப்பா சிறிது நேரம் பேசவே யில்லை.

பிறகு தயங்கிய குரலில், ''ஆனால் ஐ. ஏ. எஸ். வரன் சிறிது படிப்புள்ள பெண்ணை விரும்புவான் என்று தோன்றுகிறது'' என்று இழுக்கவும், அம்மா ஆட்சேபக் குரலில் ''அதெல்லாம் சும்மா. நம்ம கமலாக்ஷியைப் பார்த்ததும் சீர்கூட வேண்டாம் என்று அவன் சொல்லித் தாலியைக் கட்டி விடு வான். இதுபோலப் பல பையன்களைப் பார்த் தாயிற்று'' என்றாள்.

சிறு வயதிலிருந்தே எதற்கும் ஆசைப் படாத நான், இப்போது வருங்காலக் கண வனைப் பற்றிய எண்ணங்களை மனத்தில் உரு வாக்கி, தகாத ஆசைகளையும் வளர்த்துக் கொண்டதற்கு என்ன காரணம் என்று எனக்கே தெரியவில்லை.

கமலாக்ஷி சிவப்பு! அவளுக்கு அவள் நிறத்தை ஒத்த கணவனே கிடைக்கட்டும். ஆனால் ஏன் எனக்கும் நான் விரும்பிய படியே நல்ல நிறமுள்ள கணவன் கிடைக்கக் கூடாது? நான் சிறிது நிறம் மட்டு என்ப தால் அப்படி ஆசைப்படத் தகுதியற்றவ ளாகி விட்டேனா?

இந்தச் சமயத்தில் சிவசாமி மாமாவின் பெண் கல்யாணிக்குத் திடீரென்று திரு மணம் நிச்சயமாயிற்று. அதற்கு அவர் தங்கை பிள்ளைகள் தங்கள் குடும்பத்தின ருடன் வருவார்கள் என்றும், அந்தச் சமயத் தில் எங்கள் வீட்டில் பெண் பார்க்கும் நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்து விடலாம் என்றும் கூறினார்.

அவர் பெண் கல்யாணத்தன்று எங்கள் குடும்பம் முழுவதுமே அங்கு இருந்தது. அங்கேயே தங்கை குடும்பத்தினரையும், அவர்கள் பிள்ளைகளையும் அறிமுகப்படுத்துவ தாகச் சிவசாமி மாமா சொல்லி யிருந்த தால், அம்மா, கமலாக்ஷியையும் என்னையும்

பம்பாயில் (Cook With Postman) என்று எழுதப்பட்ட சில விளம்பரப் பலகைகள் தென்படுகின்றன. 'தபால்காரரைப் பயன்படுத்திச் சமைக்க வேண்டுமா?' என்று சிலர் ஆச்சரியப்படலாம். போஸ்ட் மேன் பிராண்ட் கடலை எண்ணெயைத்தான் குறிப்பிடுகிறது விளம்பரம். படமும் தகவலும்: ராஜா

நன்முக அலங்கரித்துக் கொண்டு கல்யாணத்துக்கு வரும்படி சொன்னுள்.

எனக்கு மனத்தில் துளியும் உற்சாகமில்லை. சிறிய ஜரிகை பார்டருடன் கூடிய ஆடம்பரமில்லாத பட்டுப் புடவை அணிந்து, ஒரு ஜதை முத்து வளையல், முத்து ஆரம் இவற்றுடன் என் அலங்காரத்தை முடித்துக் கொண்டு விட்டேன்.

கமலாக்ஷி, அம்மாவின் வைர அட்டிகையைப் பூண்டு, ஒரே ஜரிகை மயமான ஆடைகளை அணிந்து, ஜகஜ்ஜோதியாகக் காட்சியளித்தாள்.

அவள் அலங்காரத்தைப் பார்த்ததும், எனக்கு ஏதாவது சாக்குச் சொல்லி வீட்டில் தங்கி விடலாமா என்றுகூடத் தோன்றியது. மணப் பெண் கல்யாணி என்னுடன் கல்லூரியில் படிப்பவளாயிற்றே! எப்படிப் போகாமல் இருப்பது?

கல்யாணக் கும்பலில் எந்த வாலிபனைப் பார்த்தாலும், இது அந்த வரனில் ஒருவனுக இருந்து விட்டால் என்ன செய்வது என்ற எண்ணமே என்னை அலைக்கழித்ததால், கல்யாணத்தை ரசிக்கவே முடியவில்லை. கமலாக்ஷியோ, அலட்சியமாக உட்கார்ந்து, போவோர், வருவோரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

முகூர்த்த சமயத்தில் கல்லூரி சிநேகிதிகள் கும்பலாக உள்ளே நுழையவே, நான் நிம்மதிப் பெருமூச்சுடன் எழுந்து அவர்களுடன் கலந்துகொண்டு விட்டேன்.

மாங்கல்யதாரணம் முடிந்ததும் தோழிகள் அனைவரும் மணப் பெண் கல்யாணியைச் சூழ்ந்து கொண்டு, கை குலுக்கிக் கேலிப் பேச்சு மூட்டையை அவிழ்த்துக் கொட்ட ஆரம்பித்தனர். நானும் அவர்களுடன் சேர்ந்து பரிகாசம் செய்வதைப் பார்த்த கல்யாணி, என் கைகளைப் பிடித்துக்கொண்டு ''இரு.... இரு... உனக்கும் மாப்பிள்ளை வந்தாயிற்று. இந்தக் கும்பலில் இருக்கிறுன். இதே போலக் கேலி செய்யும் சந்தர்ப்பம் எனக்கும் விரைவில் வரும். அப்பொழுது வட்டியும் முதலுமாகத் திருப்பித் தந்து விடுகிறேன்'' என்று கூறவும், தோழிகள் கவனம் என்மேல் திரும்பியது. 'தோழிகளுக்குச் சாப்பாடு போட்டு, உபசரிக்க வேண்டிய பொறுப்பு உன்னைச் சேர்ந்தது' என்று கூறிவிட்டாள் கல்யாணி.

எப்படியாவது மணப் பந்தலை விட்டு நகர்ந்தால் போதுமென்று துடித்துக்கொண்டிருந்த நான் கல்லூரிச் சிநேகிதிகளைச் சாப்பாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் சென்றேன்.

அங்கு ஏற்கனவே பாதி இடங்கள் நிறைந்து விட்டிருந்தன. நான் என் தோழிகளை நல்ல இடமாகப் பார்த்து அமர்த்தி விட்டுத் திரும்பியபோது, ஆண்கள் பந்தியை விசாரித்துக் கொண்டிருந்த வாலிபர் ஒருவர் வேகமாக என்னிடம் வந்து... ''ஏன், நீங்களும் அவர்களுடன் அமர்ந்து கொள்ளலாமே! நான் பார்த்துப் பரிமாறச் சொல்லுகிறேன்'' என்முர். நான் ஒரு நிமிடம் தடுமாறிப் பிறகு சமாளித்துக் கொண்டேன். ''....இல்லை, எனக்குப் பசியில்லை! அடுத்த பந்தியில் உட்காருகிறேன்'' என்று சொன்ன போது, அவரை என் கண்கள் திருட்டுத்தனமாக ஆராய்ந்தன!

நல்ல சிவந்த நிறம்! நெடிதுயர்ந்த மேனி! கண்களைப் பறிக்கும் தூய வெள்ளை வேஷ்டியும், ஷர்ட்டும். முகத்தில் யாரையும் நொடியில் கவர்ந்துவிடும் புன்னகை! — ஒரே நிமிடத்தில் என் கண்கள் அவர் உருவத்தை ஈர்த்து மனத்தில் பதித்துக் கொண்டன.

திடீரென்று, 'இவர்தான் அந்த ஐ.ஏ.எஸ். மாப்பிள்ளையாக இருக்குமோ?' என்ற எண்ணம் மனத்தில் எழவே, எனக்கு உடல் 'குப்' பென்று வியர்த்தது.

ஆனுல் உடனே, 'சேச்சே! இருக்காது! ஐ.ஏ.எஸ். படித்தவர் வேஷ்டியைத் தூக்கிக் கட்டிக் கொண்டு பந்தி விசாரித்துக்கொண்டிருப்பாரா? பேண்ட், டையுடன் மணப் பந்தலில் நின்று, பெரிய மனிதர்களுடன் கைகுலுக்கி, வரவேற்றுப் பேசிக் கொண்டிருப்பார்' என்ற எண்ணம் தோன்றவே, சிறிது தெளிந்த மனத்துடன் தைரியமாகத் திரும்பிப் பார்த்தேன்.

இந்தச் சமயத்தில் என் தோழி ஒருத்தி 'அப்பளம்' என்று குரல் கொடுக்கவே, சுற்றுமுற்றும் பார்த்த அவர், ஆட்கள் யாரும் பக்கத்தில் இல்லாத காரணத்தினுல் தாமே ஓடிச் சென்று அப்பளக் கூடையைத் தூக்கிக் கொண்டு பரிமாற வந்து விட்டார்.

என் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. ஒரே நிமிடம்தான். எனக்கு யோசிக்கவே நேரமில்லை. புடவையை இழுத்துச் செருகிக் கொண்டேன். வேகமாகச் சென்று, ''இப்படிக் கொடுங்கள்... நான் போடுகிறேன்...'' என்று கூறிக்கொண்டே கூடையை அவர் கையிலிருந்து வாங்க முயன்ற போது, ''அடடா! வேண்டாம்! உங்கள் புதுப் புடவையில் எண்ணெய் பட்டுவிடும்!'' என்று கூறிக் கொண்டே அவர் என்னைப் பார்த்து முறுவலித்தார்.

என் உடலில் குப்பென்று உஷ்ணம் பரவியது. சமாளித்துக் கொண்டு, ''பரவாயில்லை. என்னிடம் கொடுங்கள்....'' என்று கூடையைப் பெற்றுக்கொண்டு அப்பளம் பரிமாற ஆரம்பித்தேன்.

அந்த வரிசையில் இருந்தவர்களுக்குப் பரிமாறிவிட்டு நிமிர்ந்தபோதுதான் அவர் இடுப்பில் கைவைத்து, கம்பீரமாக நின்று இவ்வளவு நேரம் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறுர் என்று தெரிந்தது.

அதற்கு மேல் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாமல் கால்கள் பின்னிக்கொள்ளவே அவர் புன்சிரிப்புடன் என் அருகில் வந்து கூடையைப் பெற்றுக் கொண்டார்.

''என்னடா ஹரி! அங்கே பந்தலில் உன்னை எங்கெல்லாம் தேடுவது?...; சாப்பாட்டுக்கு

ஒரு வேண்டுகோள்

ஸ்ரீநிவாஸராவ் உயர்நிலைப்பள்ளி நீண்டகாலமாகத் திருவையாற்றில் கல்விப் பணி புரிந்து வருகிறது. பள்ளியின் பகுதிகள் சில இவ்வளவு காலமாக கூரைக் கட்டிடத்திலேயே இருப்பதினால் காலப் போக்கில் கூரை மட்கி, வகுப்புக்கள் நடத்துவதற்கு இயலாத நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. எனவே, சுமார் 50,000 ரூபாய் செலவில் பள்ளியைப் புதுப்பித்து முழுவதும் கல் கட்டிடமாகவே எழுப்ப உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. இந்த நல்ல கைங்கரியத்தில் அன்பர்கள் அனைவரின் உதவியும் கோரப்படுகிறது. முக்கியமாகத் திருவையாறு ஸ்ரீநிவாஸராவ் உயர்நிலைப் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் இப்பணியில் ஈடுபாடு காட்டி இந்த நற்பணி சிறக்கப் பேருதவி செய்தால் வருங்கால மாணவர்களின் நன்றிக்கு என்றென்றும் பாத்திரர்களாவார்கள்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: **தலைமை ஆசிரியர் & காரியதரிசி ஸ்ரீநிவாஸராவ் உயர்நிலைப்பள்ளி, புனர் நிர்மாணக்குழு திருவையாறு**, தஞ்சை மாவட்டம்.

மூந்திக் கொண்டு விட்டாயா?'' என்ற குரலைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தோம்.

எங்களருகில் வந்ததும், ''பேஷ்!...பேஷ்! விசாலாக்ஷியா? ஏண்டா ஹரி! பந்தலில் உன்னை இவள் அப்பாவுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று எண்ணித் தேடினேன். நீ என்னடாவென்றால் இங்கே பெண்ணுடன் அறிமுகம் செய்து கொண்டிருக்கிறாய்!'' என்றவர், திகைத்து நின்ற என்னிடம் ''இவன்தானம்மா என் பெரிய தங்கையின் பிள்ளை ஹரிஹரன், ஐ.ஏ.எஸ்.! நாளை மறுநாள் உங்கள் வீட்டில் பெண் பார்க்க வரப் போகிறான்!'' என்றவர், ''ஹரி! நான் எழுதியிருந்தேனே இவள்தான்!...சங்கரனின் மூத்த மகள் விசாலாக்ஷி!...'' என்று சொல்லவும் மருண்டு நின்ற நான் மறு கணம், ஒரே ஓட்டமாக ஓடி மணப் பந்தலுக்கு வந்து விட்டேன்.

''ஏனடி இப்படி இரைக்க இரைக்க ஓடி வருகிறாய்?'' என்று அம்மா கடிந்துகொண்டதையும் பொருட்படுத்தாது நான் அவள் அருகில் ஒண்டி அமர்ந்து கொண்டேன்.

அப்பா அவசரமாக எங்களருகில் வந்து, அம்மாவின் காதருகில் குனிந்து, ''சிவசாமி தன் தங்கை பிள்ளைகள் இருவரையும் அழைத்துக் கொண்டு வருவதாகக் கூறிப் போயிருக்கிறான்...'' என்றார். நான் படபடக்கும் இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டேன்.

அங்கிருந்து எழுந்து வேறு எங்காவது போய்விடலாமா என்று நான் எண்ணிக் கொண்டிருக்கும்போதே சிவசாமி மாமா கும்பலை விலக்கிக் கொண்டு எங்களிடம் வரவும் நான் நிமிர்ந்து பார்க்கச் சக்தியற்றுத் தலையைக் குனிந்து கொண்டேன்.

என் அருகில் அமர்ந்திருந்த கமலாக்ஷி உடனே புடவையையும், நகைகளையும் சரி செய்து கொண்டு, தன்னம்பிக்கையுடன், நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''இந்தாப்பா, சங்கரா! நன்றாகப் பார்த்துக்கொள்! இவன்தான் கல்கத்தாவில் இருக்கும் என் பெரிய தங்கை பிள்ளை ஹரிஹரன், ஐ. ஏ. எஸ். மற்றவன் என் சிறிய தங்கை பிள்ளை ஸ்ரீதரன், பி.ஏ. பம்பாயில் பிஸினஸ் செய்கிறான்'' என்று சிவசாமி மாமா கூறிக் கொண்டே போனபோது, எனக்கு நிமிர்ந்து ஸ்ரீதரனைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் துளியும் இல்லை. என் மனத்தில்தான் ஹரிஹரனே முழுதும் நிறைந்திருந்தாரே!

கமலாக்ஷி என்னைக் கிள்ளி, ரகசியமான குரலில் ''நிமிர்ந்து பாரேன் அக்கா'' என்று கூறியபோது சட்டென்று ஒரு கணம் தலையைத் தூக்கி எதிரே பார்த்தவள் இரு ஜோடிக் கண்கள் என்னையே உற்று நோக்குவது போலத் தோன்றவே, உடனே முகத்தைத் தாழ்த்திக் கொண்டேன்.



'' நேற்று என் கச்சேரிக்கு வந்த உங்களுக்கு நான் நிறைய்த் தொந்தரவு கொடுத்துட்டேன். என்னை மன்னிக்கணும்.''

'' நீங்க எனக்கு ஒரு தொந்தரவும் தரலியே ?''

''என்ன அப்படிச் சொல்லிட்டேள் ? நீங்க மத்தவாளோடே பேசிண்டிருக்கிறப்ப அதுக்கு இடைஞ்சலா நான் பாட்டுக்குப் பாடிண்டு இருந்தேனே !''

அதில் ஒரு ஜோடிக் கண்கள் ஏற்கனவே அறிமுகமானவை.

''இவள்தான் விசாலாக்ஷி—பெரிய பெண்—எம். ஏ. படிக்கிறாள். இவள் இளையவள் கமலாக்ஷி...'' என்று கூறிக் கொண்டே போன சிவசாமி மாமா, ''வா சங்கரா! தங்கைகளின் கணவன்மார்களை உனக்கு அறிமுகப்படுத்துகிறேன். நாளைக்குச் சம்பிரதாயப்படி நேரில் வந்து பெண் பார்க்க அழைத்துவிட்டுப் போ. பிறகு நான் பார்த்துக்கொள்ளுகிறேன்'' என்று கூறிக் கொண்டே நகர்ந்தார்.

வீட்டுக்கு வந்ததும் என் பெற்றோர் ஹரிஹரனையும் கமலாக்ஷியையும் என்னையும் ஸ்ரீதரனையும் இணைத்துப் பேசுவதைக் கண்டு என் உள்ளம் குமுறிற்று.

அப்பா சம்பிரதாயப்படி மறு நாள் பார்க்க வரும்படி அவர்களை அழைக்கச் சென்றவர், மாலையில் பரபரப்புடன் திரும்பி வந்தார்.

அவருடைய பரபரப்புக்கு என்ன காரணம் என்று நாங்கள் திகைத்தபோது அவர் அம்மாவிடம், ''கேட்டாயா சங்கதியை! இரண்டு பிள்ளைகளும் விசாலாக்ஷியைத்தான் மணந்து கொள்ள விரும்புகிறார்களாம்!....'' என்று கூறவே, ''என்ன!.... என்ன!'' என்ற ஆச்சரியக் குரல்கள் அறையெங்கும் எதிரொலித்தன.

எனக்கு என் காதுகளையே நம்ப முடியவில்லை. கனவு காண்கிறோமா என்று சந்தேகமாக இருந்தது. உணர்ச்சிப் பெருக்கில் உடல் சிலிர்த்தது. மறுகணம் பெயர் மாறாட்டமாகக் காதில் விழுந்திருக்குமோ என்ற எண்ணம் என் உற்சாக அலைக்கு அணை போட்டது.

பாட்டியும் சந்தேகக் குரலில், ''ஏண்டா நன்றாகக் கேட்டாயா, எந்தப் பெண் என்று? பெயர் மாற்றிச் சொல்லுகிறார்களோ என்னமோ!'' என்று கேட்டாள்.

அப்பா குறுக்கிட்டு ''என்ன அம்மா! நான் அவ்வளவு தூரம் விசாரிக்காமல் சொல்லுவேனா? 'இரண்டுபிள்ளைகளும்தான் விசாலாக்ஷி அன்று உடுத்தியிருந்த புடவை, நகையிலிருந்து, அவள் உயரம், பருமன் முதற்கொண்டு அப்படியே விவரிக்கிறார்கள்' என்று சிவசாமியே வந்து சொன்னானே!'' என்றார்.

எல்லோரையும் இச்செய்தி திகைக்க வைத்தது.

அப்பா சிறிது மௌனத்துக்குப் பிறகு ''நான் என்னத்தைச் சொல்லுகிறது? சிவசாமி எவ்வளவோ சொன்னான். இரண்டு பேரும் ஒரே பிடிவாதமாக விசாலாக்ஷியை வேண்டுமானால் பண்ணிக் கொள்வதாகச் சொல்லுகிறார்கள். இல்லாவிட்டால் இப்பொழுது கல்யாணம் வேண்டாமாம். பிறகு அவர்களுக்குள் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். நாளைக்கு இரண்டு பிள்ளைகளும் இங்கு வருவார்களாம். விசாலாக்ஷியே தனக்

குப் பிடித்தவனைத் தேர்ந்தெடுக்கட்டும்—என்ற முடிவுதான் அது.''

''அதிசயமாக இருக்கே!'' என்று வியந்த பாட்டி திரும்பவும் என் கன்னத்தை வழித்துத் தன் நெற்றியில் சொடுக்கிக் கொண்டு திருஷ்டி கழித்தாள்.

குதூகலத்தால் என் மனம் குதி போட்டாலும் நான் அசையாமல் சிலைபோல் உட்கார்ந்திருந்தேன்.

''விசாலாக்ஷிக்குப் பிடிச்சவனைப் பண்ணிக்கட்டும். அப்புறம் மற்றவன் கமலாக்ஷியைப் பண்ணிப்பானோல்லியோ? அதைக் கேட்டாயா?'' என்று பாட்டி சந்தேகக் குரலில் வினவினாள்.

''கேட்காமல் இருப்பேனா? 'முதலில் விசாலாக்ஷி யாரைத் தேர்ந்தெடுக்கிறாள் என்று பார்ப்போம். பிறகு மற்ற விஷயத்தைப் பற்றி யோசிப்போம்' என்று இரண்டு பிள்ளைகளும் பிடி கொடுக்காமல் பேசுகிறார்கள் என்று சிவசாமி சொன்னான்'' என்று கூறியபோதே அப்பாவின் குரல் ஏனோ தழுதழுத்துவிட்டது.

இதுவரை ஒரு பிரமிப்புடன் அமர்ந்திருந்த கமலாக்ஷி ஒரு கேவலுடன் எழுந்து உள்ளே ஓடிவிட்டாள்.

அம்மா இருந்த இடத்தை விட்டு அசையவுமில்லை; வாய் திறந்து பேசவுமில்லை.

நேரம் செல்லச் செல்ல என் மனத்தில் மோதிய சந்தோஷ அலைகள் மெதுவாக அடங்க ஆரம்பித்தன. என்னை அறியாமல் என் உள்ளத்தில் மூண்ட வேதனை கண்களில் நீரை நிரப்பியது.

நான் அடையத் தகுதி இல்லாத ஒன்றை அடையப் போவதை எண்ணி என் வீட்டவர்கள் துக்கம் கொண்டாடுவதாக எனக்குத் தோன்றியது.

கமலாக்ஷி பிறந்ததிலிருந்து எல்லா விஷயங்களிலும் எனக்குப் போட்டியாக நின்று வெற்றி பெற்றிருக்கிறாள். ஆனால் வாழ்க்கையின் முக்கியமான கட்டத்தில் என் முன் அவள் தோற்றுவிட்டாள்!

அது போதும்! இவ்வளவு நாட்கள் நான் வளர்த்து வந்த தாழ்வு மனப்பான்மை இன்று நீங்கி விட்டது. இனிமேல் நான் எதையும் சகித்துக் கொள்ளுவேன்!

பாவம் கமலாக்ஷி! அவளுக்குச் சிறு எதிர்ப்பைக்கூடத் தாங்கிப் பழக்கமில்லை. அப்படிப் பழகவும் பெரியவர்கள் அவளுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. இப்பொழுது இந்தப் பெரும் அதிர்ச்சியை எப்படித் தாங்கிக் கொள்வாள்!

துக்கத்தினால் விம்மித் தணியும் அவள் முதுகையே வெறித்துப் பார்த்தவாறு நான் என் கட்டிலில் அமர்ந்திருந்தேன்.

இதுவரை அவளுடைய ஒவ்வொரு செய்கைக்கும் ஆத்திரப்பட்ட எனக்கு இப்பொழுது முதல் தடவையாக அவள் மீது அநுதாபம் ஏற்பட்டது. பெற்றோர்கள் போக்கையும், கமலாக்ஷியின் நிலையையும் எண்ணிப் பார்க்கப் பார்க்க என் உற்சாக ஊற்று அடியோடு வற்றிவிட்டது. மெதுவாக எழுந்து என் மேஜைமுன் போய் அமர்ந்தேன். பேனாவைத் திறந்து மடமடவென்று எழுத ஆரம்பித்தேன்.

''அன்புள்ள கமலாக்ஷி!

தயவுசெய்து அழாதே! நானே நான் திடமனத்துடன் ஸ்ரீதரனைத்தான் விரும்புவதாகச் சொல்லப் போகிறேன். பிறகு சிவசாமி மாமா எப்படியாவது உனக்கும் மற்றவருக்கும் மணம் முடித்து விடுவார்.''

ஏனோ இதை நேரில் சொல்ல எனக்குத் தைரியமில்லாததால் கடிதத்தில் எழுதுகிறேன். இதுநாள்வரை கண் கலங்காத நீ, இனி எந்நாளும் அப்படியே இருக்கவேண்டும்.

இப்படிக்கு, உன் விசாலாக்ஷி''

கடிதத்தைப் பரபரவென்று மடித்தேன். நொடியில் கமலாக்ஷியின் அருகில் சென்று குலுங்கும் அவளுடைய தோள்களை ஆதரவுடன் பற்றித் தூக்கினேன்.

திடுக்கிட்டு நிமிர்ந்த அவளுடைய கையில் கடிதத்தைத் திணித்து விட்டு மௌனமாக நடந்து வந்து என் கட்டிலில் படுத்துக் கொண்டேன்.

கமலாக்ஷி ஒன்றும் புரியாமல் என்னையும் கடிதத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். பிறகு மெதுவாக அதைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள்.

சில்லென்று கன்னத்தில் கைகளின் ஸ்பரிசம் பட்டது. திடுக்கிட்டுக் கண் விழித்தபோது கமலாக்ஷி என்னருகில் அமர்ந்திருந்தாள்.

கமலாக்ஷி மெதுவாகக் குனிந்து என் காதருகில் ''எப்பொழுதும் விட்டுக் கொடுத்தே உனக்குப் பழக்கம் அக்கா! ஆனால் இந்தத் தடவை தேர்ந்தெடுக்கும் உரிமை எனக்கிருந்தாலல்லவா நீ விட்டுக் கொடுக்க முடியும்! என் கர்வத்துக்குச் சரியான அடி! என்னைச் சந்தோஷப்படுத்துவதற்காக நீ விரும்புபவரை எனக்கு விட்டுக் கொடுத்தும் பிரயோசனமில்லை!'' என்றபோது, நான் பதறி எழுந்து, ''நான் விரும்புபவரா?'' என்று வியப்புடன் கேட்டேன்.

கண்களைத் துடைத்துக் கொண்டு விரக்தியாகச் சிரித்த கமலாக்ஷி ''ஆமாம்! உன் கடிதத்தின் வாசகங்களே நீ யாரை விரும்புகிறாய் என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டனவே!'' என்றாள்.

அடுத்த நாள் நான் என் மனத்தில் வரித்தவர் மட்டும் சம்பிரதாயப்படி என்னைப் பெண் பார்க்க வந்தார்.

அவரது குறுகுறுத்த விழிகள் ஆர்வத்துடன் ஆயிரம் விஷயங்கள் பேசத் துடிக்கவே, அவற்றைச் சந்திக்கச் சக்தியற்றுப் போய் நான் நாணித் தலை குனிந்தேன்.

இந்த நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்த கமலாக்ஷி கேலியாக, ''நிமிர்ந்துதான் பாரேன், அக்கா! அவர் உன்னையே பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறார்!'' என்று சொன்னபோது அவள் முகம் கல்மஷமின்றி மலர்ந்திருந்தது போலவே என் பெற்றோர்கள் முகங்களும் பூரிப்புடன் காணப்பட்டன.

என் கல்யாணம் நடந்து, ஆறு மாதங்கள் கழிந்து கமலாக்ஷிக்கு வேறு இடத்தில் கல்யாணம் நிச்சயமாயிற்று. அவள் மனம் உவந்து ஏற்றுக் கொண்ட அந்த மாப்பிள்ளை நல்ல கறுப்பு!

இதற்குப் பிறகு எங்கள் குடும்பத்தில் யாரும் நிறத்தைப் பற்றிய பேச்சையே எடுப்பதில்லை!



பிரவுன் & போல்ஸன்

ஃப்ளேவர்டு கார்ன் ஃப்ளவர் உபயோகித்து

கராச்சி அல்வா செய்து பார்த்திருக்கிறீர்களா?

பிரபல சமையல் கலைஞர் திருமதி பிரமீளா லால் தமது விசேஷப் பக்குவ முறை ஒன்றை உங்களுக்கு உதவுகிறார்.

நாவில் நீர் ஊறும் இனிமை—தயாரிப்பதோ எளிது!



பிரவுன் & போல்ஸன் ஃப்ளேவர்டு கார்ன் ஃப்ளவர் பலவித அல்வாக்களையும், இதர எளிதான புட்டிங்குகள் மற்றும் பழ வகைத் தின்பண்டங்களையும் தயாரிக்க உதவுகிறது. குழந்தைகளுக்கும், நோயாளிகளுக்கும் உகந்தது, செழுமையான சத்துடையது. அருமையான பொருட்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்படும் பிரவுன் & போல்ஸன் கிடைக்கும் ஃப்ளேவர்டு கார்ன் ஃப்ளவருக்குள் சாலச் சிறந்தது. தேர்ந்தெடுக்க 5 இனிய சுவைகள்.



பக்குவ முறை:
500 கிராம் சர்க்கரை
8 டேபிள் ஸ்பூன் பிரவுன் & போல்ஸன் ஃப்ளேவர்டு கார்ன் ஃப்ளவர்
½ எலுமிச்சையின் ரசம்
120 கிராம் நெய்
1 டீ ஸ்பூன் பொடி செய்த ஏல விதை
30 கிராம் பிஸ்தா பருப்பு
75 கிராம் வாதுமைக் கொட்டை

1. சர்க்கரையை ½ லிட்டர் நீரில் கரைத்து, 5 நிமிடங்களுக்குக் கொதிக்க வைத்து பாகு செய்து கொள்ளவும். 2. பிரவுன் & போல்ஸன் ஃப்ளேவர்டு கார்ன் ஃப்ளவரை ½ லிட்டர் நீரில் கலந்து, பாகுடன் சேர்க்கவும். 3. தொடர்ந்து கிளறியவண்ணம், கலவை இறுகும்வரை வேக வைக்கவும். 4. எலுமிச்சை ரசத்தைச் சேர்த்து தொடர்ந்து வேகவைக்கவும். கலவை பாத்திரத்தில் ஒட்டாது விலகும் வரை, சிறிது சிறிதாக நெய்யைச் சேர்க்கவும். 5. ஏலத்தூளும், துண்டாக்கிய பருப்புகளையும் சேர்க்கவும். 6. நெய் தடவிய தட்டிலே கொட்டிச் சீராகப் பரப்பவும். 7. பக்குவம் சதுரத்துண்டங்களாக வெட்டவும்.

தயவு செய்து எனக்கு ஒரு பக்குவ முறை செட்டை ஆங்கிலம்/இந்தி/வங்காளம்/தமிழ்/தெலுங்கு/மலையாளம்/ குஜராத்தி/ மராத்தி கன்னடத்தில் இலவசமாக அனுப்பி வைக்கவும்.

பெயர் ....

முகவரி ....

இக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புக:
கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு பம்பாய்-1. (பி.ஆர்) K-J

உங்கள் சமையல் உன்னதமாக இருக்க உயர்ந்த சாமான்களையே உபயோகியுங்கள்!

இது போல் இன்னும் பலவகையான தின்பண்டங்களைத் தயார் செய்து உங்கள் குடும்பத்தினரை மகிழ்விக்கலாம், பின் வரும் இதழ்களைக் கவனித்துப் பாருங்கள்.

கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1. (பி.ஆர்)

ஏகபோக விற்பனை ஏஜண்டுகள்
பாரி & கம்பெனி, டேர் ஹவுஸ், மதராஸ்—1
மற்றும் அவர்களது கிளைகள்


Benson/1395



CRISP NEWS...
SATHE
PICNIC
BISCUITS
YOUR FAVOURITE SATHE
PICNIC
BISCUITS
Now available
in fancy
air-tight carton
SATHE BISCUIT & CHOCOLATE CO. LTD., POONA-2.

சீருடையைக் கல்லூரி மாணவ மாணவிகளிலிருந்து எழுத்தாளர், அரசியல்வாதிகள் வரையில் அணியத் தொடங்கினால் எப்படி யிருக்கும் என்று நம் கற்பனைக் குதிரை யைத் தட்டி விட்டு, சீருடை சகாப்தத்துக்குள் நுழைவோமா ?

ஓ, சீருடையே!

முகுந்தன்








பள்ளிக்கூட மாணவ-மாணவிகளைப் போல் கல்லூரியில்பயில்பவர்களும் சீருடை அணிந்து செல்ல வேண்டுமென ஒரு கட்டுப்பாடு கொண்டு வரப்படலாம் என்று கல்வித் துறையைச் சேர்ந்த அதிகாரியொருவர் கூறி யிருப்பதைப் படித்ததும் என் மனம் அடைந்த வேதனைக்கு அளவே கிடையாது. ஏன் என்கிறீர்களா? ''சினிமாப் படங்களில் வருகிற கதாநாயகிகள் ஆபாசமாக உடையணிகின்றனர்'' என்று எல்லோரும் கூக்குரல் எழுப்பிய போது, ''கல்லூரி மாணவிகளைப் பார்த்துத்தான் எங்கள் கதாநாயகிகள் அப்படி உடை அணிகிறார்கள்!'' என்றல்லவா படத் தயாரிப்பாளர்களும் டைரக்டர்களும் ஒரே போடாகப் போட்டார்கள்? இனிமேல் இம்மாதிரி பழி சுமத்துவதற்கு அவர்களுக்கு வேறு யார் கிடைப்பார்கள்?

அது போகட்டும். அந்தக் கவலை அவர்களுடையது. இனி என் கவலைகளைச் சொல்கிறேன்.

கவலையற்றுத் திரியும் பட்டுப் பூச்சிகளைப்போல் கண்ணைக் கவரும் வண்ண உடைகளில் இப்போது பவனி வந்து கொண்டிருக்கும் மாணவிகள் சீருடையை அணிந்துகொள்ள முன்வந்து விட்டார்களானால், அப்புறம் மற்றப் பெண்களின் உடையைப் பற்றி வம்பளக்கவும் கேலி செய்யவும் இடமில்லாமல் போய்விடுமே? அதுமட்டுமா? பணக்காரவீட்டுப் பெண்கள் தாங்கள் புடவைகளையும் 'ரவிக்'களையும் பிளவுஸ்களையும் தேர்ந்தெடுத்தது பற்றிப் பெருமை அடித்துக்கொள்ள முடியாமலும்போய்விடும். ''எங்க அப்பா சிங்கப்பூரிலிருந்து இதை எனக்கு ஸ்பெஷலாகத் தருவித்தார்!'' என்றோ, ''மீட்டர் நாற்பத்தைந்து ரூபாய் விலையாக்கும் இது!'' என்றோ சீருடையைப்பற்றிஜம்பம் அடித்துக் கொள்ள முடியாதே! பெண்களின் பேச்சுரிமையையும் கருத்துச் சுதந்திரத்தையும் பறிக்கிற காரியமல்லவா இது!

இது மட்டுமா? கல்லூரி மாணவிகள் சீருடை அணிவார்களேயானால் எழுத்தாளர்களின் பாடு திண்டாட்டமாகப் போய் விடும். கதாநாயகி சீதா அல்லது கீதா எந்த வண்ணப் புடவையை உடுத்தியிருந்தாள்; அதற்கேற்றபடி என்ன நிறத்தில் பிளவுஸ் அணிந்திருந்தாள்; அவளுடைய சந்தன அல்லது தந்த அல்லது பளிங்கு அல்லது பாலேடு நிற மேனிக்கு அவை எப்படிப் பொருந்தி யிருந்தன என்று வர்ணிக்க வழி யில்லாமல் போய் விடுமல்லவா?

சீருடையினால் பெண்களுக்கு மட்டும்தான் சங்கடம் என்பதில்லை. கல்லூரி மாணவர்களின் கதி இன்னும் பரிதாபமானது. கல்லூரிக்குப் போட்டுக்கொண்டு போகலாமென்று



தைத்து வைத்திருக்கிற 'டைட்ஸ்'களையும் 'டீ ஷர்ட்'களையும் அப்புறம் என்ன பண்ணு வதாம்?

இன்னொன்று: பெண்கள் வண்ணச் சீருடை அணிந்து வந்தால் கவர்ச்சியாக இருக்காதே தவிர, கண்ணராவியாக இருக்காது. ஆனால் ஆண் பிள்ளைகள் ஒரே மாதிரி பாண்டும், சட்டையும் இரு வண்ணங்களில் அணிந்து கொண்டு வந்தார்களானால் பார்க்கிறவர்கள் 'ஏதோ பாண்டு கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் போலிருக்கிறது!' என்று தவறாக மதிப்பிடும்படியும் நேரிடலாம் அல்லவா?

சீருடை கட்டாயம் அணிந்துதானாக வேண்டும் என்கிற விதிமுறை தாராளமாக வரட்டும். ஆனால் எனக்குத் தோன்றிய ஓரிரு யோசனைகளையும் இங்கே தெரிவித்து வைக்கிறேன்.

ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரே வண்ண உடை என்பதை மாற்றி வகுப்புவாரியாக வண்ணங்களைப் பிரித்தார்களானால் நல்லது. அதாவது பி. யு. சி.யில் படிக்கும் பெண்கள் பச்சையும் வெள்ளையும் அணிந்தார்களென்றால் பி. ஏ. வகுப்பு மாணவிகள் வெளிர் சிவப்பும் மஞ்சளும் அணியட்டும். இத்துடன் ஒவ்வொரு கல்லூரிக்கும் தனித்தனியே நான்கு வர்ணக் கலவைகளை ஒதுக்கட்டும்.

மாணவிகள் விஷயத்தில் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டு நான் சொல்வதற்குக் காரணம் மாணவர்களின் நலனை உத்தேசித்துத்தான். பொதுவாகக் கல்லூரி மாணவர்களை இருகூறாகப் பிரிக்கலாம். (1) துணிச்சல்காரர்கள்; அதாவது கதைகளிலும் சினிமாக்களிலும் வருகிற 'ஹீரோக்கள்' என்று தங்களைப் பாவித்துக் கொள்பவர்கள்; (2) துணிச்சலில்லாத — ஆனால் 'ஹீரோ'வாக வேண்டும் என்கிற துடிப்பு நிறைந்த — சாதுக்கள். துணிச்சலான மாணவர்கள் மாணவிகளைத் துரத்திக் கொண்டு அவர்கள் படிக்கும் கல்லூரி வரையில் போய்விட்டு வருவதுண்டு. இன்னும் கொஞ்சம் துணிந்த கட்டைகள் பஸ் ஸ்டாண்டில் நிற்கும் மாணவியிடம் மெள்ளப் பேச்சுக் கொடுத்து அவள் எந்த வகுப்பில் படிக்கிறாள் என்று தெரிந்துகொள்வது உண்டு. இரண்டாவது வகை மாணவர்கள்—பாவம்—என்ன செய்வார்கள்? நான் சொன்ன முறைப்படி மாணவிகள் சீருடை அணிந்தார்களானால், ஒரு பெண்ணைப் பார்த்த மாத்திரத்தில், ''ஓ! இவள் ஸ்டெல்லா மேரியில் பி. ஏ. படிக்கிறாள்!'' என்றோ, அல்லது, ''இவள் எத்திராஜில் பி. யு. சி. வாசிக்கிறவள்!'' என்றோ இந்தச் சாதுக்கள் இனம் கண்டுகொள்ள வசதியாக இருக்கும்!

இதே மாதிரி மாணவர்கள் விஷயத்திலும் ஒன்று செய்தார்களேயானால் நல்லது. பள்ளிக்கூடம் வரையில் சும்மா இருந்து விட்டுக் கல்லூரியில் காலெடுத்து வைத்தவுடனே மீசை வைத்துக் கொள்ளும் மாணவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். உடை விஷயத்தில் சீராக இருப்பதைப் போல் இந்த விஷயத்திலும் இருக்கக் கூடாதா, என்ன?.... அதாவது பி. யு. சி. மாணவர்கள் மீசை, கிசை எதுவுமே வைத்துக் கொள்ளக் கூடாது; பி. ஏ. முதல் வருட மாணவர்கள் அரும்பு மீசை வைத்துக் கொள்ள வேண்டும்; இரண்டாவது வருடம் முறுக்கு மீசை; மூன்றாவது வருடம் குறுந்தாடி. எம். ஏ. மாணவர்கள் தலையை மொட்டையடித்துக் கொள்ள வேண்டும்; (எம். ஏ. பாஸ் பண்ணி முடிப்பதற்குள் சில மாணவர்களுக்கு இயற்கையிலேயே தலை மொட்டையாகி விடுவதும் 'உண்டு!)—இப்படி ஒரு விதி போட்டால் என்ன?....

இந்தச் சீருடை விஷயத்தை இன்னும் பல துறைகளுக்கும் அமுல் நடத்தலாம் போலிருக்கிறது. அதாவது:

அரசாங்க ஊழியர்கள் அவரவர்கள் பதவிக்கேற்றபடி சீருடை அணிந்து கொண்டுதான் வரவேண்டும் என்று சட்டம் போடலாம். சில அலுவல்களில் ஒண்டிக் கட்டையாக இருக்கிற கடைநிலைக் குமாஸ்தா பெரிய அதிகாரிபோல் 'டிப்டாப்'பாக உடையணிந்து கொண்டு வருவார்; பெரிய குடும்பஸ்தரான அவருடைய மேலதிகாரியோ எளிமையாக 'டிரஸ்' செய்து கொண்டிருப்பார். சில சமயங்களில், புதிதாக அந்த அலுவலகங்களில் நுழைகிறவர்களுக்கு, யார் அதிகாரி, யார் கீழ்ப்படிந்தவர் என்று தெரியாமலே போய் விடுவதும் உண்டு! இந்தச் சங்கடத்தைத் தவிர்க்கச் சீருடை ஒத்தாசை பண்ணுமல்லவா?...

இதே போல் எழுத்தாளர் விஷயத்திலும் கவனம் செலுத்தலாம். தொடர்கதை நிரர்களுக்கு ஒரு சீருடை, மர்மக் கதை மன்னர்களுக்கு இன்னொரு சீருடை என்று இப்படிப் பலதரப்பட்டவர்களும் தங்களுக்கென்று ஒவ்வொரு வகைச் சீருடையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டால் என்ன?....

இன்னும் வேறு பல துறையினருக்கும் சீருடைத் திட்டத்தை விஸ்தரிக்கலாம். ஆயினும், யாருக்குச் சீருடை இருந்தாலும் இல்லாவிட்டாலும் இன்றைக்கு முக்கியமாகச் சீருடை தேவைப்படுகிற ஆசாமிகள் அரசியல்வாதிகள்தாம். ஒருவர் தேர்தலுக்கு நிற்கிறாரென்றால் அவருடைய உடையைப் பார்த்துவிட்டு, ''ஆகா! இவர் சட்ட மன்றத்தில் நிறையப் பேசியிருப்பவர்!'', இவர் தேர்தலுக்குப் பிறகு தம்முடைய தொகுதிப் பக்கம் தலையே காட்டாதவர்', 'இவர் பதவி ஆசை பிடித்துக் கட்சி மாறியவர்', 'இவர் சுயநலத்துக்காக ஒரே கட்சியில் ஒட்டிக் கொண்டிருப்பவர்', 'இவர் தமக்கு வேண்டியவர்களுக்கு நிறையச் 'சகாயம்' பண்ணி வைத்திருப்பவர்', 'இவர் தேர்தல் வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டவர்!' என்று கண்டுகொள்ளும்படியாக அவர்களுடைய வண்ணச் சீருடைகள் அமையுமானால் — ஆகா! பொதுஜனங்களுக்கு எத்தனை வசதியாக இருக்கும்!

ஆகவே—அரசாங்க அதிகாரிகளே! அதைச் செய்யுங்கள் முதலில்!



முற்பகல் செய்யின்...

ரோஹிணி

கண்களை மூடிச் சிந்தனை வயப்பட்டுப் போயிருந்த மனோகரன் சிலிர்த்து விழித்துக் கொண்டான். ரயிலின் வேகம் நாற்பது மைலுக்குக் குறைந்திராது என்றே தோன்றியது. ஜன்னல் வழியே புகுந்த காற்றின் வேகம் காது மடலையே பிய்த்துவிடும் போலிருந்தது.

ஐப்பசி மாதத்தில்கூடவா இப்படி வெய்யில் காயும்? இத்தனைக்கும் மணி நாலரை ஆகப் போகிறது. ஹூம்....

இதயம் கனக்க ஒருமுறை வெய்துயிர்த்தான். சட்டைப் பைக்குள்ளிருந்த ரோஸ் காகிதமும் எழும்பி அமிழ்ந்தது. விரக்தியோடு அதிலிருந்த வாசகத்தை மீளவும் ஒரு முறை நினைவுபடுத்திக் கொண்டான்.

''மல்லிகா உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறாள் — மருத்துவர்கள் கை விரித்து விட்டனர் — உடனே வரவும்.....''



மைத்துனன் அதிகாலையில் இந்தத் தந்தியை அடித்திருக்கிறான். பத்து மணிக்குத்தான் அது அவன் கைக்குக் கிடைத்தது. உடனே ஆபீசுக்கு லீவு எழுதிப் போட்டுவிட்டு இதோ, எக்ஸ்பிரஸில் திருச்சிக்கு விரைகிறான்!

நேரத்துக்குப் போனால் ரயில் இரவு ஏழரை மணிக்குத் திருச்சியை அடைந்து விடும். ஆனால் இப்போதே முக்கால் மணி தாமதமாகி விட்டது. எப்படிப் போய்ச் சேருமோ? மனோகரன் மனம் புழுங்கினான்.

சுற்றி வரப் பார்த்தான். பக்கத்தில் ஒரு நடுத்தர வயதுக்காரர் ஜேம்ஸ் பாண்டின் 'டாக்டர் நோ' என்ற கதையில் சுவாரசியமாக மூழ்கியிருந்தார்!

மனோகரன் தயக்கத்தோடு அவரைப் பார்த்தான். ''ஏன் ஸார்! இப்போதே முக்கால் மணி தாமதமாகப் போகிறதே, திருச்சி போவதற்குள் எப்படியாவது 'மேக்கப்' பண்ணி விடுவானா ?'' என்றான் ஆவலோடு.

அவர் இளித்தார்.

''மேக்கப்பா ? எப்படிப் பண்ணுவான் ? என்ஜின் அறைக்குள் ஸ்னோ, பவுடர்கூட இருக்குமா என்ன?''

மனோகரன் பொருமினான். இது என்ன ஹாஸ்யமோ ? அவன் மன நிலையை உணராமல்.....

சகப் பிரயாணிக்கே என்னவோபோல் உறுத்தியிருக்க வேண்டும், மனோகரனின் முக பாவம். நகைச்சுவையை விட்டு விட்டுத் தொடர்ந்தார்.

''அவன் ஏன் ஸார் 'மேக்கப்' பண்ணுகிறான் ? நமக்குத்தான் ஊருக்குப் போகிற அவசரம்; அவனுக்கு என்ன வந்தது? பார்க்கப் போனால் ரயில் எவ்வளவுக்கெவ்வளவு தாமதித்துப் போகிறதோ, அந்த அளவுக்கு அவனுக்கு 'ஓவர்டைம்' கிடைக்கும்; தெரியுமா ?....''

''நிஜமாகவா ?''

''ஆமாம் ஸார். ஆமாம்!.... ஹூம், என்ன இருந்தாலும் ஜப்பான் ஜப்பான்தான். ரயில்கள் அங்கே அரை செகண்டு தாமதித்து வந்தால்கூடச் சுட்டுத் தள்ளிவிடுவான், தெரியுமா ?''

மனோகரனுக்கு அதெல்லாம் ரசிக்கவில்லை. மறுபுறம் திரும்பிக் கொண்டான்; கண்கள் பனித்தன.

மல்லிகாவை அவன் உயிரோடு பார்ப்பானா? இந் நேரம் அவள் கதி என்ன ஆகியிருக்குமோ? மைத்துனன் அதிகாலையில் ஆபத்து என்று தந்தி அடித்திருக்கிறான். அதற்குப் பிறகு இப்போது சுமார் பத்து மணி நேரம் கடந்துவிட்டது. இடைப்பட்ட நேரத்தில் என்னவாகி யிருக்குமோ ?

'பெண்களுக்குப் பிரசவம் என்பது புனர் ஜென்மம்தான். அந்த வேதனையும் வலியும் ஆண்களுக்கு எங்கே தெரியப் போகிறது ? ஒவ்வொரு பேறுகாலத்தின் போதும் பெண் யமலோகத்தின் வாசற்படி வரையல்லவா மிதித்துவிட்டு மீள்கிறாள் ?....'

மல்லிகாவுக்கு ஏற்கனவே மெலிந்த உடல்தான். எந்தப் போஷாக்கான ஆகாரமும் ஒட்டாத உடற்கூறு. முந்தின மூன்று குறைப் பிரசவங்களுக்கும் அதுவே காரணம் என்று வைத்தியரே சொன்னார். சொல்லி விட்டு இனியும் அவள் தாயானால் அவள் பிழைப்பதே துர்லபம் என்றும் அவனிடம் தனியாக எச்சரித்தார். அவன் அந்த எச்சரிக்கையைச் சட்டை செய்தானா?....

மனோகரன் வெறி பிடித்தவன்போல் தலைமயிரை இறுகப் பிடித்துக் கொண்டான். இசிவு எடுக்கும்வரை. உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

வைத்தியரின் எச்சரிக்கையை அவன் இதுவரை மல்லிகாவிடம் சொல்லவேயில்லை. ஏன் சொல்லவில்லை ? கோழைத்தனம்தான்; தார்மிகத் தைரியம் அவனுக்கு என்றைக்குத்தான் இருந்தது? எந்த விஷயத்தில்தான் இருந்தது? மனோகரன் இப்போது காலம் கடந்து வெட்கினான்.

மல்லிகாவுக்கு டாக்டரின் எச்சரிக்கை மட்டும் தெரிந்திருந்தால் என்ன செய்திருப்பாள்? இந்தக் கண்டத்தைத் தவிர்க்க முயன்றிருப்பாளோ?.... சொல்ல முடியாது. அவளும் பட்டதாரிப் பெண்ணென்றாலும் 'பதியே தெய்வம்' என்ற பான்மை கொண்டவள் ; சுபாவமாகவே சாது.

உருக்கத்தில் மனோகரனின் கண்ணிமைகள் இடுங்கித் துடித்தன. அகத்துக்குள் கேவினான். மல்லிகா பிழைப்பாளா ?

அவள் மாத்திரம் இந்நேரம் இறந்திருந்தால்?.... இறக்கும் தறுவாய் என்று தெரிந்தாலே சில ஆஸ்பத்திரிகளில் உறவினர்களைக் கூப்பிட்டு நோயாளியை வீட்டுக்கு எடுத்துப் போகச் சொல்லி விடுவார்கள். ஏனெனில், ஆஸ்பத்திரிக்குள் இறந்து வைத்தால் ஏகப்பட்ட விசாரணைகள், காலதாமதம் எல்லாம் உண்டு. அதற்கு அஞ்சி நோயாளியின் உறவினர்களும் குற்றுயிராக இருக்கும்போதே மெல்ல அழைத்துப் போய்விடவே முயலுவர்.

அப்படித்தான் மல்லிகாவின் அப்பாவும் செய்திருப்பாரோ ? அவர் இருப்பதே திருச்சியில் ஒரு ஸ்டோரில். அதற்குள் எலி வளை போல் ஒரு குடித்தனம். நெருக்கமான அவ்விடத்தில் சவத்தை வெகுநேரம் வைத்திருக்கக்கூட அக்கம்பக்கத்தார் ஆட்சேபிப்பர். அப்படியானால் மல்லிகா இந்நேரம் பஸ்மீகரம்கூட ஆகியிருக்கலாம்..... பயங்கரமான ஊகங்களோடு அவன் மனம் விளையாடியது.

...எதிர்ப் பெஞ்சில் ஜபமாலையை அரைத் தூக்கத்தில் உருட்டும் ஒரு பாட்டி அவலட்சணமாகக் கொட்டாவி விட்டாள். கண்களில் துளித்த நீரை நார்மடிப் புடவைத் தலைப்பால் துடைத்தவாறே, ''குருவாயூரப்பா! கிருஷ்ணா!'' என்று முனகினாள்.

மனோகரன் துணுக்குற்றான். குருவாயூரப்பன்...! மல்லிகாவுக்குத்தான் அந்தத் தெய்வத்திடம் எவ்வளவு அத்தியந்த பக்தி ? முதல் பிரசவம் குறைப் பிரசவம் ஆனதுமே அவளுக்கு மிகுந்த துக்கம். ஒரு முறை அங்கு போய்க் கிருஷ்ண பரமாத்மாவைச் சேவித்து வர வேண்டும் என்று பெரிதும் விரும்பினாள். அந்தக் கோயிலில் அதிகாலை மூன்று மணிக்கே சுவாமி தரிசனம் தொடங்கிவிடுமாம். அப்போது சுவாமியின் முந்தின நாள் அலங்காரங்களையெல்லாம் நீக்குவார்களாம். அதைப் பார்ப்பது மிக விசேஷமாம்.

பக்தர்களுக்குத் தலா ஒரு ஸ்பூன் எண்ணெய்ப் பிரசாதம் தருவார்களாம்; அதைப் பருகினால் தீராத நோயெல்லாம் தீருமாம். கோயில் நுழை வாயிலில் ஓர் அண்டாவில் சிவப்புக் குந்துமணிகளைக் கொட்டி வைத்திருப்பார்களாம்; அதை உள்ளன்போடு கையால் ஒரு முறை அளைந்தால் சந்தான பாக்கியம் கிட்டுமாம்... இப்படி யெல்லாம் மல்லிகா பரவசமாக விவரிப்பாள்.

இந்தப் பிரசவத்தின்போது பிறந்தகம் போகையில் மல்லிகா தம்பதி சமேதராக அங்கே ஒரு முறை போய் வரவேண்டும் என்று கோரினாள். மனோகரன் சம்மதித்தால்தானே?



"சார், இந்த சங்கீத சீசன்லே எனக்கும் ஒரு சான்ஸ்...!"
காரியதரிசி: "என்னது...?"
"சார், சார்! கச்சேரி சான்ஸ் கேக்கலே! சபாவிலே 'மைட்-மைக்' ஏற்பாடு பண்ணத்தான்!"

உல்லாசமாகச் சிகரெட் புகையை நாசித் துவாரங்களின் வழியே வெளிச் செலுத்தியவாறே, "இதோ பார், மல்லிகா! நீ தினசரி பேப்பர் படிக்கிறாயல்லவா? கேரளத்தில் இப்போது ஒரே உணவுப் பற்றாக்குறையாம். தலைக்குத் தினம் மூன்று அவுன்ஸ் அரிசிதானாம். இந்தச் சமயத்தில் நீயும் அங்கே போய் ஹோட்டல் சாப்பாட்டுக்குப் போட்டி போட்டால், அந்த அளவுக்கு அந்த ஹோட்டல் வாடிக்கையாளர்களில் ஒருவருக்குச் சாப்பாடு இல்லாமல் போய் விடும் இல்லையா? அதனால் உன் குருவாயூரப்பனுக்கேகூட உன்மேல் கோபம் வந்து விடும்!" என்று ஹாஸ்யமாக மிரட்டினான்.

"அதனாலென்ன? நாம் ஒரு நாள்தானே அங்கு தங்கப் போகிறோம்? வெறும் வாழைப் பழமும் வேர்க்கடலையும் சாப்பிட்டுப் பசியாறுவோம். மீண்டும் தமிழக எல்லைக்கே வந்து பொள்ளாச்சியில் உங்களுக்குப் பிடித்த 'காலரா பவனி'ல் இஷ்டப்படி சாப்பிடுவோம்.....!"

மனோகரன் மீண்டும் ஒரு சிகரெட்டைக் கொளுத்திக் கொண்டான்.

"சரிதான்! நீ என்ன வானரப் பிறவியா, பழமும் கடலையும் சாப்பிட்டுப் பசியைத் தீர்த்துக் கொள்ள? என்னால் சம்பிரமமாக ஒரு கறி, கூட்டு, சாம்பார், ரஸம், அப்பளம், தயிர், அனைத்துக்கும் மேலாக அசல் தஞ்சாவூர்க் குறுவைச் சம்பா அரிசிச் சாதம் இல்லாமல் ஒரு நாள்கூட ஜீவிக்க முடியாது.... தெரிந்ததா? உனக்குப் பதியின் பிராணன் வேண்டுமா, குருவாயூர்ப் பிரயாணம் வேண்டுமா? இரண்டில் நீ எதை முக்கியமாகக் கருதுகிறாய்? சீக்கிரம் சொல்" என்று மடக்கினான். மல்லிகா 'சிவ சிவா' என்று தன் காதுகளைப் பொத்தியவாறு அப்பால் சென்று விட்டாள்.

மனோகரனின் சந்தன நிற டெரிலின் சட்டை வேர்த்து விட்டது. முதுகில் பயக் குளிர் நடுக்கியது. தெய்வத்தை இகழ்ந்த அபசாரம்தானோ, இப்போது அவனது அருமை மல்லிகா மரணப் படுக்கையில் தவிக்கிறாள்?

மனோகரன் அலமந்து போனான். 'கிருஷ்ணா! இந்த ஒரு முறை என்னை மன்னித்து விடு, அப்பா! பக்த பராதீனன் அல்லவா நீ? விஷ சர்ப்பமான காளியனுக்கே அபயம் தந்தாயே; உன் பக்தை — உன் மல்லிகாவுக்கு உயிர்ப் பிச்சை தாராயா? அவள் மட்டும் இம் முறை நல்லபடியாகப் பிழைத்தெழட்டும்; நீ கீதையில் கூறியிருக்கிறபடி உனக்குப் பிடித்த மார்கழி மாதத்தில் அங்கு வந்து, அத்தனை நாட்களும், குளித்துவிட்டு, ஈரத் துணியோடு உன் நிர்மால்ய தரிசனத்தைக் காணக் காத்துக் கிடப்பேன்; இது சத்தியம்...' மனோகரன் மானசீகமாக வேண்டிக் கொண்டான்.

கண்கள் துளும்பி விட்டன. சக பிரயாணிகள் யாராவது பார்த்துவிடப் போகிறார்களோ என்ற கூச்சத்தில் சட்டென்று ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டான். 'ஆதித்தபுரம்' என்ற ஸ்டேஷன் தாண்டிச் சென்றது.

ஆதித்தபுரம்!.... நினைத்தவுடனேயே மனோகரனும் கணநேரம் பூரிப்பெய்தினான்; மல்லிகாவையும் மறந்து.

பத்தாண்டுகளுக்குமுன், அவனது கல்லூரி மாணவப் பருவத்தில், இந்தச் சிற்றூரில் தான் இருந்தான். ஆதித்தபுரத்துக்கு இரண்டு ஸ்டேஷன்கள் தள்ளி மல்லிகைப் பந்தல் என்று ஒரு ஸ்டேஷன். அங்கேதான் அவன் வாசித்த கல்லூரி.

மாதாந்திர 'ஸீஸன் டிக்கெட்' வாங்கி வைத்துக் கொண்டு தினசரி ரயிலில் போய் வருவான். அப்போது கல்லூரிக்குள் அவன் அடித்த கொட்டமும், பண்ணின சேஷ்டைகளும்தான் எவ்வளவு? நினைக்க நினைக்க இப்போதும் பெருமையாகத்தான் இருந்தது. கவலையற்றுத் திரிந்த அந்த நாட்கள் மீண்டும் எங்கே வரும்?

கல்லூரியை ஒட்டினாற்போல் மாணவியர் தங்குவதற்கான ஹாஸ்டல் இருந்தது. அதைச் சுற்றிக் 'காம்பவுண்டுச் சுவர்' எழுப்பக் கல்லூரி நிர்வாகத்தினர் தீர்மானித்தனர். மனோகரனுக்கும் அவனது சகாக்களுக்கும் ஒரே எரிச்சல். தைரியமாக அதை ஆட்சேபித்தனர். நிர்வாகத்தினர் தலை வணங்கவில்லை. கட்டுமான வேலையை ஆரம்பித்து விட்டனர். விளைவு? மனோகரனும் அவனது நண்பர்களும் கண்டிராக்டர் வீட்டுக்கு முன் போய்ப் படுத்துக்கொண்டு மறியல் செய்தனர். அரண்டுபோன கண்டிராக்டர் கட்டின டெண்டர் தொகையைக்கூடத் திரும்பிக் கோராமல் ஓடி விட்டார்!

புதிதாக யாராவது ஆசிரியர் வேலைக்கு வந்தால் அவரை ஆழம் பார்ப்பது அவன் கோஷ்டியின் தலையாய பொழுதுபோக்கு. அப்படித்தான் தினகரன் என்று ஒரு சொற்பொழிவாளர் அவன் வகுப்புக்கு முதல் தடவையாக வந்தார். கொஞ்ச நேரம்

ஏதோ பிரசங்கம் செய்து விட்டுக் கரும் பலகைப் பக்கம் எழுதத் திரும்பினர். அவ் வளவுதான்! தட்சணமே மனோகரன் முன் கூட்டியே செய்து வைத்திருந்த காகித அம்பு அவரை நோக்கி ஜிவ்வென்று பறந்து சென்றது.

ஆனல்.... அந்தோ பரிதாபம்! அவர் அம்பு விட்டவனைக் கடைக்கண்ணுல் கவ னித்துவிட்டார். மனோகரனை எழுந்து வெளி யேறச் சொன்னர். தான் கல்லூரி மாணவர் சங்கத் தலைவன் என்பதை அழுத்தலாக அவருக்கு நினைவூட்டினான். அவர் அதற்கும் மசியவில்லை. வேறு வழியின்றி, ரோஷத்துடன் தோடு மனோகரன் வெளியேற நேர்ந்தது.

மறு வாரம் —

தலைநகரிலிருந்து வெளிவரும் 'லம்புட் பிரியன்' என்ற மஞ்சள் பத்திரிகையில் ஒரு பரபரப்பான செய்தி கொட்டை எழுத்துக் களில் வெளியாகியது. 'மல்லிகைப் பந்தல் கல்லூரியில் வேலை பார்க்கும் தினகரன் என்ற ஆசிரியர் துர்நடத்தை கொண்டவர்: அவருக்கும் அங்கு படிக்கும் மனோகரி என்ற மாணவிக்கும் விரும்பத் தகாத தொடர்பு நிலவுகிறது: கல்வி நிலையத்தின் புனிதத்தை யும் ஆசிரியத் தொழிலின் புனிதத்தையும் கெடுக்கும் தினகரன் உடனே திருந்தாவிடில் விபரீத விளைவுகள் நிகழும்....' என்ற எச்சரிக்கை அச்சாகி யிருந்தது.

இந்த ஆதாரமற்ற அபாண்டத்தை எழுதி யனுப்பிய நிருபர் யார் என்று சொல்லவும் வேண்டுமா? உண்மையில் மனோகரி என்ற மாணவியே அங்கு படித்ததில்லை. தன் பெயரைத்தான் மனோகரன் பெண்பாலாக்கி யிருந்தான்.

தகவல் வெளியான பத்திரிகை இதழ் களில் ஐம்பதை உள்ளூர் ஏஜண்டிடமிருந்து மனோகரனும் அவனது நண்பர்களும் விலைக்கு வாங்கி இரவோடு இரவாகக் கல்லூரி நெடுகி லும், ஊர் முழுவதிலும் ஒட்டினர். மானி யான தினகரன் சீக்கிரமே ராஜிநாமாச் செய்துவிட்டுப் போய்விட்டார். மனோகரன் கொக்கரித்தான். அவர் வெளியேறிய தினத் தைத் தோழர்களுடன் வெற்றி விழாவாகவே கொண்டாடினன்.

எக்ஸ்பிரஸ் கிளியூர் ஸ்டேஷனில் நிற்கா மல் ஜிகுஜிகுவென்று விரைந்தது. அடுத்த ஸ்டேஷன் மல்லிகைப்பந்தல்தான். ஏழு மைல் தூரம்; அதிகபட்சம் எட்டு நிமிஷங்கள் பிடிக்கும்.

ஒரு நாள்... நன்ருக நினைவிருக்கிறது. அன்றோடு சர்வகலாசாலைப் பரீட்சை முடிய விருக்கிறது. மனோகரன் ஆதித்தபுரத்தி லிருந்து கல்லூரிக்குச் செல்லும் ரயிலில் முதல் வகுப்புப் பச்சை மெத்தையில் ஒய் யாரமாக அமர்ந்திருந்தான். அவன் வைத் திருந்த 'ஸீஸன் டிக்கெட்' மூன்றும் வகுப்புக் குரியதுதான். எனினும், அவ்வப்போது இவன் சகாக்களோடு தைரியமாக முதல் வகுப்பில்தான் பயணம் செய்வான். அநேக மாக அதை யாரும் கண்டுகொள்ள மாட் டார்கள்.

அன்று அந்த ரயிலில் வந்த டிக்கெட் பரிசோதகர் புதியவர் போலும்: இவனது பெட்டிக்குள் ஏறியவர் இவனது மஞ்சள் நிற டிக்கெட்டைப் பார்த்ததும் புருவத்தை நெரித்தார்.

''மிஸ்டர்...தெரிந்து ஏறினீர்களா? அல்லது தெரியாமலா? இது முதல் வகுப்புப் பெட்டி. நீங்கள் வைத்திருப்பது மூன்றும் வகுப்பு டிக்கெட். எடுங்கள் சீக்கிரம், அப ராதப் பணம் இரண்டு ரூபாயை!'' என்று 'கோட்டு'ப் பையிலிருந்து ரசீதுப் புத்த கத்தை எடுத்துத் திறந்தார்.

மனோகரன் நிதானமாக ஒரு முறை சீட்டி அடித்தான்.

''ஸார் இந்த 'செக்ஷ'னுக்குப் புதிது போலிருக்கிறது. இல்லாவிட்டால் இப்படிப் பேசியிருக்க மாட்டீர். நான் யார் தெரியுமா? மனோகரன் என்ற பெயரைக் கேட்டாலே இந்தப் பக்கத்து ரயில்வே சிப்பந்திகள் எல் லாரும் அலறுவார்கள். நான் எப்போதுமே முதல் வகுப்பில்தான் போவது வழக்கம்; தெரிந்ததா?''

''ஓஹோ.... இது இனசரி செய்யும் குற்றம்தானு? அப்படியென்றல் அபராதத் தொகையை இரட்டிப்பாக்க வேண்டும். எடுங்கள் நாலு ரூபாய். இல்லாவிட்டால் உம்மை மல்லிகைப் பந்தல் ஸ்டேஷனில் இறங்க விடமாட்டேன். நேரே ரயில்வே போலீஸ் தலைமையகம் உள்ள ஸ்டேஷனுக் குத்தான் அழைத்துச் செல்வேன்; உமது 'ஸீஸன் டிக்கெட்'டும் பறிமுதலாகும். தெரியுமா?''

மனோகரனின் முகம் ஜிவு ஜிவு என்று சிவந்தது. நாலு ரூபாயா? அவனிடம் சிகரெட் வாங்க நாலணுக்கள்தான் இருந் தன. இன்னும் இரண்டு மணி நேரத்தில் பரீட்சை வேறு எழுதியாக வேண்டும். என்ன செய்வது? சுற்றுமுற்றும் பார்த்தான்.

''போனல் போகிறது மனோகரன். நான் தருகிறேன் பணம்... ஸார்! இந்தா ருங்கள் நான்கு ரூபாய்!'' என்று ஒரு பெண் குரல் பின்பெஞ்சியிலிருந்து வந்தது.

அவனது சக மாணவி நீலாதான். போன மாதம் கல்லூரிப் பேச்சுப் போட்டியில் அவனை முறியடித்து முதல் பரிசைக் கெலித்தவள். கடைசியில் அவளிடம் யாசகம் பெற்று அவன் தப்பிக்க வேண்டும்? வேறு என்ன செய்வது? அன்றைக்கென்று பார்த்து அவன் கோஷ்டியினரில் யாரையும் காணேம்.

பரிசோதகர் போய் விட்டார்.

மறுநாள்...மல்லிகைப் பந்தல் ஸ்டேஷன் அமர்க்களப்பட்டது. மாலை எக்ஸ்பிரஸில் அந்தப் பரிசோதகருக்கு 'டூட்டி' உண்டு என்று தெரிந்த மனோகரன் அந்த ரயிலைத் தன் கோஷ்டியினரின் மிருக பலத்தால் நிறுத்தி விட்டான். பாவம், அந்தப் பரிசோதகர்! வகையாக மாட்டிக் கொண் டார். அவரது ரசீதுப் புத்தகமும் கிழித் தெறியப்பட்டது! அவரது உத்தியோக உடுப்பில் ஒரு புட்டி மசி கொட்டப்பட் டது. ஸ்டேஷன்மாஸ்டரும், கார்டும், டிரைவரும், சகப் பிரயாணிகளும் எவ் வளவோ கேட்டுக் கொண்டும் பயனில்லை. கடைசியாக அவர் மனோகரனிடம் கைகூப்பி மன்னிப்புக் கோரியதும்தான் விடுபட்டார். அதை ஒரு மாணவன் 'போட்டோ'கூட எடுத்துக் கொண்டான்; ரயில் இரண்டு

மணி நேரம் தாமதித்துக் கிளம்பிச் சென்றது. மனோகரனும் கோஷ்டியாரும் வெற்றிவீரர்களாகக் கோஷித்து ஆர்ப்பரித்தனர்.

மல்லிகைப்பந்தல் ஸ்டேஷன் 'அவுட்டர்' தாண்டியாகி விட்டது. ரயில் இங்கும் நிற்காது. நேரே திருச்சிதான் !

கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஐந்தரை ஆகிவிட்டது. வெளியே வானத்தைப் பார்த்தான். கீழ் வானத் திகந்தத்தில் கருமை பரவியிருந்தது. மழை பெய்து தொலைக்குமோ ? அப்படியாயின் ரயில் ரொம்பவும் தாமதமாகி விடுமே !

அவன் நெஞ்சு இனமறியாக் கலவரத்தில் படபடத்தது. கல்லூரியை விட்ட பிறகு இப்போதுதான் அந்த ஸ்டேஷனைப் பார்க்கப் போகிறான். இடைப்பட்ட காலத்தில் அவன் செய்ததையெல்லாம் இரவுப் பிரயாணங்கள் தாம்.

ரயில் திடுமென்று வேகம் குறைந்து ஊரலாயிற்று. மனோகரன் துணுக்குற்றான். எக்ஸ்பிரஸ் கால அட்டவணைப்படி இங்கு நிற்கக் கூடாதே ! ஒரு வேளை பாதையில் ஏதாவது ரிப்பேர் வேலை நடக்கிறதோ ? ஜன்னல் வழியே வெளியே பார்த்தான்.

அவனைப் போல் ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் பல பிரயாணிகள் விஷயம் புரியாது எட்டிப் பார்த்தனர்.

ரயில் ஸ்டேஷனுக்கு வெளியிலேயே நின்று விட்டது. பிளாட்பாரத்தில் ஏகக் கூட்டம்.

மனோகரனும் இன்னும் சில பிரயாணிகளும் இறங்கிப் போயினர்.

ஒரே மாணவர் கூட்டம்தான். எல்லாரும் விதம் விதமான கைலி வேஷ்டிகள் அணிந்திருந்தனர்; பச்சை, சிவப்பு, நீலம் என்று.

கூட்டத்தின் நடுவே ஒரு ரயில்வே டிக்கட் பரிசோதகர் உன்மத்தம் பிடித்தாற்போல் நின்றிருந்தார். சில மாணவர்கள் அவரிடம் சரமாரியாக வினாக்கள் பொழிந்தனர். அவரும் கூடிய மட்டும் தைரியமாகச் சமாளித்தார். ''நான் என் கடமையைத்தானே செய்தேன்?'' என்ற ஒரே பதிலைத் திரும்பத் திரும்பத் தமிழிலும் ஆங்கிலத்திலும் சொன்னார்; ஆனால் பையன்கள் விடவில்லை.

மனோகரன் என்ன விஷயம் என்று ஒரு மாணவனை விசாரித்தான். அவன் உணர்ச்சியோடு பொழிந்தான்.

''கேளுங்கள் ஸார் ! நேற்று எங்கள் கல்லூரி மாணவர் தலைவர் மூன்றும் வகுப்பு டிக்கெட்டை வைத்துக் கொண்டு ஏதோ ஒரு பதினைந்து மைல் முதல் வகுப்பில் பிரயாணம் செய்து விட்டாராம். அதற்கு இந்தக் கடமை வீரர் உருட்டி மிரட்டி அவரிடம் ஐந்து ரூபாய் வசூலித்து விட்டார். இப்போது மாட்டிக் கொண்டார். கசாப்புக் கடைக்குள் நுழைந்த வெள்ளாடு போல....''

மனோகரன் ஸ்தம்பித்துப் போனான். பத்தாண்டுகளுக்குமுன் நிகழ்ந்த அதே சம்பவம் இன்றும் அரங்கேறுகிறதா ? மாணவர்களின் செயலைக் கண்டிக்க அவனுக்கு வாய் ஏது ? ஆனால்.... ஆனால்.... இந்நேரம் மல்லிகா என்ன ஆனாளோ? இப்போதே இருட்டி விட்டது; மணி ஆறு. அவள் பிரேத தகனம் கூட ஆகியிருக்கலாம். அவள் மலர்வதனத்தைக் காணும் பாக்கியம் இனி அவனுக்கு இல்லையா ? இதேபோல் இன்னும் எத்தனை பிரயாணிகளுக்குத் தத்தம் ஊர் போய்ச் சேர வேண்டிய அவசரமோ ? அதை எப்படி இம் மாணவர்களுக்கு உணர்த்துவது ?

சட்டென்று அவன் மனச்சாட்சி சுட்டது. இப்படித்தானே அன்றும் — பத்தாண்டுகளுக்கு முன்பும் — எத்தனையோ பிரயாணிகள் அவன் கோஷ்டியின் ஆர்ப்பாட்டத்தால்



கல்லூரி மாணவர்களுக்குப் பரிசுத் திட்டம்

ஆகஸ்டு 4-ந் தேதி இதழ் முதல் டிசம்பர் இறுதி இதழ் வரையில் கல்கிப் பத்திரிகையில் இடம் பெறும் எல்லாச் சிறப்புச் சிறுகதைகளையும் ஆழ்ந்து படித்துப் பாருங்கள். அவற்றில் சிறந்ததெனர நீங்கள் கருதும் ஏதேனும் ஒரு சிறப்புச் சிறுகதை குறித்துக் கல்கியில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாத வகையில், இலக்கியத் திறனாய்வு செய்து எமக்கு 1969 ஜனவரி 15-ந் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பிவையுங்கள். சிறந்த இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகளுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் உண்டு. முதல் பரிசு : அடுத்த கல்லூரி ஆண்டுக்கான முழு சம்பளத் தொகை. இரண்டாம் பரிசு : இரண்டு 'டர்ம்' (Term) களுக்கான சம்பளத் தொகை. மூன்றாவது பரிசு : ஒரு 'டர்ம்' சம்பளத் தொகை. பரிசுத் தொகை கல்லூரி முதல்வருக்கு அனுப்பி வைக்கப்படும்

திறனாய்வுக்குச் சிறப்புச் சிறுகதைகளை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள் உறையின் மீது 'இலக்கியத் திறனாய்வுக் கட்டுரை' என்று குறிப்பிட்டு, ஆசிரியர், கல்கி, சென்னை-10 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். அடுத்த ஆண்டு கல்லூரிப் படிப்பைத் தொடர நினைப்பவர்கள் மட்டுமே இப்போட்டியில் கலந்துகொள்ளவும். கடிதப் போக்குவரத்துக் கிடையாது. கட்டுரைகளைத் திருப்பி அனுப்புவதற்கில்லை. கல்கி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

பிரயாணம் தாமதப்பட்டுத் தவித்திருப்பார்கள்? அதை அப்போது அவன் எண்ணிப் பார்த்தானா ?

மாணவர் தலைவனைப் போல் காணப்பட்ட ஒருவன் டிக்கெட் பரிசோதகருக்கு வெகு அருகில், பின் கழுத்தில் கைக்குட்டையைச் செருகியவாறு நின்றிருந்தான். மனோகரன் அவர்களை அணுகினான்.

''இப்போது மன்னிப்புக் கேட்டால், அந்த ஐந்து ரூபாயையும் திருப்பித் தந்தால், உம்மை மன்னிப்போம். அப்போது தான் இந்த ரயிலும் கிளம்பும். இல்லாவிட்டால் யூனியன் ரயில்வே மந்திரியே தில்லியிலிருந்து வந்தால்கூட ரயில் நகராது ; தெரியுமா ?'' மாணவன்தான் பேசினான்.

டிக்கெட் பரிசோதகர் இன்றையத் தஞ்சை ஜில்லா மிராசுதார்போல் பரிதாபமாகக் காணப்பட்டார்.

மனோகரன் அம்மாணவர் தலைவனோடு பேச்சுக் கொடுத்தான்.

''மிஸ்டர்! நான் சொல்லுவதைச் சற்றுக் கேளுங்கள். நான் இந்த ரயிலில் அவசரமாகப் போகிறேன். ' என் மனைவி அங்கே பிரசவத்தில் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறாள் — '' என்றான் நைச்சியமாக.

பின்னாலிருந்து எவனோ இதைக் கேட்டதும், 'மகாராஜா ! ஒரு மஹாராணி! இருவருக்கும் ஒரு குட்டி ராணி !'' என்று பாடினான். மனோகரன் அசாதாரணமான பொறுமையோடு தொடர்ந்தான். ''நானும் உங்கள் கல்லூரிப் பழைய மாணவன் தான். அதோடு மாணவர் சங்கத் தலைவனாகவும் இருந்தவன்.''

''அப்படியா?'' மாணவன் வியப்போடு ஏற இறங்கப் பார்த்தான்.

''எந்த வருஷம்?''

மனோகரன் வருஷத்தைச் சொன்னான். மாணவன் காலடியில் கோழி முட்டை ஒன்றை மிதித்துவிட்டதைப் போல் அருவருப்பாகப் பார்த்தான்.

''.....ப்பூ! பத்தாண்டுகளுக்கு முன்பா? அப்போது இது கல்லூரியாகவா இருந்தது? சிறைக்கூடம் என்றல்லவா சொல்ல வேண்டும்? போவ்... மாஜி சிறைக்கூடத் தலைவரே! நீங்கள் படிக்கும்போது ஒரு 'ஸ்டிரைக்' என்றால் முதல்வர் என்ன செய்வார் ?''

''ஏன்?.... எங்களைக் கூப்பிட்டனுப்புவார். நாங்கள் அவர் அறைக்குத் தைரியமாகச் சென்று 'ஸ்டிரைக்'கைக் கைவிடமாட்டோம் என்று சொல்லுவோம்.....!''

தலைவன் கடகடவென்று சிரித்தான். ''ஓஹோ இதுதான் ஹைதர் காலத்து வழக்கமோ? இப்போதெல்லாம் ஒரு ஸ்டிரைக் என்றால் அதன் காரணத்தைத் தெரிந்து கொள்ள முதல்வர்தான் எங்களைத் தேடி ஹாஸ்டலுக்கு வர வேண்டும். தெரிந்ததா?''

இப்போது இன்னொரு மாணவன் நகைப்பாக வினவினான்.

''ஓய், மாஜி மாணவர் தலைவரே ! நீங்கள் படிக்கும்போது காலாண்டுத் தேர்வு, அரையாண்டுத் தேர்வு எல்லாம் உண்டா ? சொல்லுங்கள் !''

''உண்டு..... ஆனால் அவ்வளவு கடுமையாக இராது!'' என்று மனோகரன் மென்று விழுங்கினான்.

''இப்போது என்ன நடந்தது தெரியுமா? இந்த வருஷம் காலாண்டுத் தேர்வுக்கான தேதிகளை முதல்வர் வெளியிட்டார். நாங்கள் பரீட்சையைப் பகிஷ்கரிப்போம் என்று முதல்வரிடம் போய்ச் சொன்னோம். அவர் மேலதிகாரிகளுக்குப் புகார் செய்தார். கல்வி இலாகாவிலிருந்து என்ன பதில் வந்தது தெரியுமா ? 'இன்று நாடு இருக்கும் சூழ்நிலையில் மாணவர்களை விரோதித்துக் கொள்வது நல்லதல்ல' என்று அவரை மூக்கறுப்பது போல் வந்தது. அவர் அதை எங்களிடம் சொல்லவில்லை..... எப்படியோ.... பரீட்சை நடக்கவில்லை !''

மனோகரன் வாயடைத்துப் போனான். டிக்கெட் பரிசோதகரைத் தீனமாகப் பார்த்தான். அவர் முகம் நிச்சலனமாக இருந்தது.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஒரு முதிய மாது அவர்கள் அருகில் வந்தாள். டிக்கட் பரிசோதகரைப் பார்த்துக் கைகூப்பி விம்மினாள்.

''அப்பா.... எனக்காக நீ இவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு ரயிலைப் போக விடமாட்டாயா? எல்லாம் உன் கையில்தான் இருக்கிறது. என் ஒரே பிள்ளை மிலிட்டிரியில் இருக்கிறான். அவன் வயிற்றில் குண்டுபட்டு தேஜ்பூரில் கிடப்பதாக இன்று அவசரத் தந்தி வந்தது. இன்று அர்த்தஜாம பூஜை முடிந்து உன் கோவிலைச் சாத்துவதற்குள் உன்னை வந்து தரிசிக்கிறேன். எனக்கு என் பிள்ளையைத் திருப்பிக் கொடு அம்பிகே!' என்று அகிலாண்டேசுவரியை வேண்டிக் கொண்டு ஓடோடி ரயிலேறி வந்திருக்கிறேன். இப்போதே அஸ்தமித்துவிட்டது. இனி எப்போது திருவானைக்கா போய்ச் சேருவேன்?'' அந்த அம்மாள் கதறினாள்.

டிக்கெட் பரிசோதகர் கண்களில் நீர் துளித்தது. ''சரி, அம்மா..!'' நானும் என் தந்தையைப் போன உலக மகாயுத்தத்தின் போது பறி தந்தவன்தான். அவர் போனதும் என் பாட்டியின் புத்திர சோகத்தை அனவரதமும் பார்த்திருக்கிறேன்....'' என்றார் நெகிழ்ச்சியாக.

ஐந்து ரூபாயைத் தம் சொந்தப் பர்ஸிலிருந்து எடுத்துத் தலைவனிடம் கொடுத்தார். அவன் விருப்பப் பிரகாரம் அவனே அமைத்த மன்னிப்பு வாசகத்தையும் இரைந்து திருப்பிச் சொன்னார்.

மாணவர்கள் அனைவரும் படபடவென்று கரகோஷம் செய்தனர்.

கொட்டும் மழையில் ரயில் புறப்பட்டது! மணி ஏழு! இன்னும் குறைந்தபட்சம் முக்கால் மணிப் பிரயாணம்.

அந்த அம்மாளுக்கு அநேகமாக அகிலாண்டேச்வரியின் தரிசனம் கிடைத்துவிடும்.

ஆனால்.... ஆனால்... அவன் மல்லிகாவின் கதி....? அவனுக்கும் கொடுப்பினை இருக்கிறதா.....? அகிலாண்டேசுவரி அம்மனுக்குத்தான் தெரியும்!

ரயில் ஜிகுஜிகுவென்று வேகம் எடுத்து விரைந்தது !

12-12-68 முதல் - சென்னை : மிட்லண்ட், அகஸ்தியா, மேகலா
மற்றும் தமிழ்நாடெங்கும்



பெரிய அளவிலே சமையலா ?
அவசரமான சமையலா ?
சிக்கனமான சமையலா ?

எவ்வகைச் சமையலையும் எளிதாக்குகிறது

கால்காஸ்

கால்காஸ் - சமையலுக்கான நவீன எரிபொருள்-ஓட்டல்கள், மருத்துவ மனைகள், உணவு விடுதிகள் எதற்கும் இன்றியமையாதது. ஏனெனில், கால்காஸ்-உடனடியாக சூடுபிடித்து விரைவிலே நன்கு சமைக்க உதவுகிறது-நேரத்தையும், பணத்தையும் மிச்சமாக்குகிறது-உபயோகிக்கவோ எளிதானது-தேவைக்கேற்ப ஏற்றலாம், அணைக்கலாம்-சுத்தமும், சிக்கனமும்கூட. சமையல் நேரத்தை மணிக்கணக்கில் குறைக்கிறது.

கால்காஸ் பாதுகாப்பானது....கால்காஸ் பாதுகாப்பான எஃகு சிலிண்டர்களில் வருகிறது.



வீட்டிலே டெலிவரி கொடுக்கப் படுகிறது !

ஏகபோக விநியோகஸ்தர்கள் : **ஈஸ்ட் கோஸ்ட் காஸ் கோ.**
48-9-5, கோ-ஆபரேடிவ் காலனி, துவாரகாநகர், விசாகப்பட்டணம்-4.
டெலி : 3516, கன்னிமாரா அனெக்ஸ், மவுண்ட் ரோடு, மதராஸ்-2.
டெலி: 83428.

ஏஜெண்டுகள் : மதராஸ், காக்கிநாடா, விசாகப்பட்டணம், விஜயவாடா, ஏலூரு, குண்டூர், பாலகோல், ராஜமுண்டிரி, நெல்லூர், விஜயநகரம், மசூலிப்பட்டணம், சேலம், காட்பாடி, ஓங்கோல், வாரங்கல், பாண்டிச்சேரி, காஞ்சிபுரம், கர்நூல், சித்தூர், திருப்பதி, போபிலி, பார்வதிபுரம், ராமசந்திர புரம், சோம்பேட்டா, பெர்ஹாம்பூர், நரசராவ்பேட், ஸ்ரீகாகுளம், கூடூர், ஜெய்பூர், கம்மம், ஈரோடு.

கால்டெக்ஸ் தயாரிப்பு

C-GAS-G-5-68 TM.

இப்படிச் சொன்னால் என்ன ?



"ஒரு புத்தகம் மேஜை மீது கொட்டாவி விட்டுக் கொண்டு கிடந்தது."

- கத்தோலிக் டைஜஸ்ட்

"கென்னி"



இத்தாலி நாட்டில் ஒரு சிறு கிராமத்தில் உள்ள மூவாயிரம் மக்களும் கம்யூனிஸ்டுகள். அவர்கள் கோயிலுக்குப் போவது கிடையாது. அவர்கள் செய்யும் தொழில் — ஜபமாலை தயாரித்தல்.

கத்தோலிக் டைஜஸ்ட் - பாபு



இரண்டுக்கும் மிக ஆழமான நெஞ்சு.

இரண்டின் வாயும் ஓயவே ஓயாது.

இரண்டிடமும் நெருங்கி உறவாட முற்றும் துறந்த ஞானிகள்கூட அஞ்சுவர்.

இரண்டின் ஆதிக்கத்தில்தான் இந்த உலகம் அடங்கியிருக்கிறதென்று சரித்திரமே சான்றளிக்கிறது.

இரண்டுக்கும் ஒரு கட்டுப்பாடுண்டு. அதை மீறினால் ஆபத்துதான்.

இரண்டும் கோரமும், குளிர்ச்சியும் கொண்டவை; கவர்ச்சியான தோற்றமும் கொண்டவை.

இரண்டும் பொழுதை ரசித்துக் கழிக்க உதவக் கூடியவை.

இரண்டும் உலகத்தின் சிங்காரக் களஞ்சியம்.

இவ்விரண்டும் இல்லையென்றால், உலகமில்லை.... ஏன், வாழ்க்கையே இல்லை.

இந்த இரண்டும் என்ன தெரியுமா?

ஆரணங்கும் ஆழ்கடலும்தான்.

சூடான சாலைகள் !



குளிர் காலத்தில் மேற்கு ஜெர்மனியில் உள்ள சாலைகள் யாவும் உறை பனியால் பாதிக்கப்படுவது வழக்கம். சாலைகளில் பனி உறைந்து விடுவதால் போக்கு வரத்துச் சாதனங்கள் அவற்றைப் பயன்படுத்துகையில் பெரிதும் இடைஞ்சல்களுக்கு ஆளாக நேரிடுகிறது. இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண மூனிச் நகரத் தொழில் நிபுணர்கள் ஒரு புதிய வழியைக் கையாண்டனர். சாலையின் கீழே எக்குக் குழாய்களைச் செலுத்தி அவற்றின் வழியாக மின்சாரத்தைச் செலுத்துவதன் மூலம் அந்தச் சாலைக்குச் சூடேற்றி அதன் மேல் பனி உறைவதைத் தடுப்பதுதான் இந்தப் புதிய வழியாகும். நிபுணர்கள் இந்தப் புதிய முறையைச் சோதித்துப் பார்த்ததில் நல்ல பலன் கிட்டியது. போக்குவரத்துக்குச் சிறிதும் பயன்படாத அளவுக்குப் பிற சாலைகள் எல்லாம் உறை பனியால் மூடிக் கிடந்த போது பரிசோதனைக்கு உட்பட்ட சாலை மட்டும் சொகுசான சவாரிக்கு ஏற்ற வகையில் கோடைக் காலத்தில் இருப்பது போலவே எவ்வித இடையூறுமின்றித் திகழ்ந்தது!

-பூ.பி.எஸ்.


பறந்து போனரே !

ரயான் — ஓ — நீல் என்ற சினிமா நடிகரிடம் கையெழுத்து வாங்க அவருடைய விசிறி ஒருவர் ஹெலிகாப்டரில் பறந்து சென்று அவருடைய வீட்டில் இறங்கினார். கையெழுத்துக் கிடைத்துவிட்டது !

ஸ்கிரீன் - 'பாபு'



வெட்டுவார் இல்லை !



உலகில் உருகுவே, பெல்ஜியம் இந்த இரண்டு நாடுகளில் மட்டும் சினிமா சென்சார் கிடையாது.

"இந்தியன் எக்ஸ்பிரஸ்"

'பாபு'


முகத்தின்
முறுவலுக்குத்
தேவை
முழுப் பாதுகாப்பு...
கிருமிகள் அணுகாதவாறு உங்கள் வாய்க்கு
முழுப் பாதுகாப்புத் தருவது ஸிக்னல்
அதன் செவ் வரிகளிலிருப்பது
கிருமிகளைத் தாக்கும் ஹெக்ஸாக்ளோரபீன்
ஸிக்னல் பற்பசையின் செவ்வரிகளே சொல்லும்: கிருமிகளைத் தாக்கும் ஹெக்ஸாக்ளோரபீன் அடங்கியுள்ளதற்கு சாட்சி. முகத்தின் முறுவலை முத்தெனப் போற்றிக் காப்பீர். ... கிருமிகள் அணுகாது வாய் முழுவதையும் காத்துக்கொள்ள ஸிக்னல் உபயோகியுங்கள். புதுமையின்பச் சுவை, மிதமிஞ்சிய நுரை...வாயார உங்கள் பற்கள் வெண்மை யோங்கும்; வாய்நிரம்பும் தூய்மையோடு உங்கள் வாய் மலரும். ஸிக்னல் புன்னகையே ஆரோக்கியப் புன்னகை!
Signal
THE RED STRIPES CONTAIN HEXACHLOROPHENE
Signal
கண்கூடாகக் காணும்படி
ஓர் நச்சுநாசினி
அடங்கிய பற்பசை
இது ஒன்றே
இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தயாரிப்பு
லின்டாஸ்-SG. 5-140 TN

புகையிலை புராணம்

கும். அழகிரிசாமி

❁ சுமத்ராவில் ஐந்து சகோதரர்கள் என்றும் பஞ்சாயண்டவர்கள் நீதி லக்கு வரமாட்டார்கள்.

❁ புகையிலைக்குப் பிரம்ம பத்திரம் என்று பெயர் வரக் காரணம்?-- 'புகையிலை விடு தூது' கூறுகிறது.

❁ புகை பிடித்ததற்காக அடிபட்டவர்கள் உண்டு. புகை பிடிக்காததற்காக அடிபட்டவர்களும் உண்டு.

இன்று உலகத்தில் புகையிலை உபயோகிக்காத நாடே கிடையாது. சீக்கியர்களைத் தவிர மற்ற எல்லா மதத்தினரும் ஏதேனும் ஓர் உருவில் புகையிலையை உபயோகிக்கிறார்கள். இந்தியாவில் ஆண்டுதோறும் சராசரி 800 கோடி சிகரெட்டுகள் செலவாகின்றன. பிரிட்டனில் ஒரு வருஷத்தில் புகையிலை வரியாகக் கிடைக்கும் தொகை சுமார் 70 கோடி பவுன். மதுபான வரி மூலம் இதில் பாதியளவு தொகைதான் கிடைக்கிறது.

இந்தியாவைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் புறப்பட்டு அமெரிக்காவுக்குப் போய்ச் சேர்ந்த கொலம்பஸ் கியூபாத் தீவில் புகையிலைச் செடியையும் உருளைக் கிழங்குச் செடியையும் முதல் முதலாகப் பார்த்தார். அங்கு வாழ்ந்த பூர்விக ஜாதியார் புகையிலையைப் புகை பிடிக்க உபயோகித்ததைக் கண்டார். ஸ்பெயினுக்குத் திரும்பி வரும்போது புகையிலையையும் தம்மோடு கொண்டு வந்து விட்டார். அன்றுமுதல் புகையிலை சிறிது சிறிதாக உலகெங்கும் பரவத் தொடங்கியது. இந்தியாவுக்குப் புகையிலையைக் கொண்டு வந்தவர்கள் போர்ச்சுகீஸியர்கள்.

இங்கிலாந்துக்குப் புகையிலையைக் கொண்டு வந்தவர் ரால்ப் லேன் என்பவர். அமெரிக்காவில் வெர்ஜீனியா மாகாண கவர்னராக இருந்த அவர் 1586ல் இங்கிலாந்துக்குப் புகையிலையைக் கொண்டு வந்தார். ஆனால் புகை பிடிக்கும் பழக்கத்தை அங்கே நவநாகரிகமான பழக்கமாக்கியவர் ஸர் வால்டர் ராலே என்பவர். இங்கிலாந்துக்குப் புகையிலை வந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் லண்டன் நகரத்தில் மட்டும் 7,000 புகையிலைக் கடைகள் தோன்றிவிட்டன என்றால், புகையிலை எவ்வளவு வேகமாகப் பரவியிருக்கிறது என்பதை எளிதில் கண்டுகொள்ளலாம்

நிக்கோட்டின் விஷம்

புகையிலையின் விஷச் சத்துக்கு "நிக்கோட்டின்" என்று பெயர். இதற்கு இந்தப் பெயர் ஏன் கிடைத்தது தெரியுமா? போர்ச்சுகல் நாட்டில் பிரான்சின் தூதராக இருந்த ஜீன் நிக்கோட் என்பவர் புகையிலையைப் பரப்புவதில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார். அவருடைய பெயரையே புகையிலையின் விஷத்துக்கும் வைத்து விட்டார்கள். அவர் விஷயத்தில் கர்மத்துக்குத் தக்க பலன் கிடைத்து விட்டது என்றே கூற வேண்டும்!

உலகத்தில் விளையும் புகையிலையில் மூன்றில் ஒரு பங்கினை அமெரிக்காவே விநியோகம் செய்கிறது. அங்கு ஒரு வருஷத்தில் மட்டும் நூறு கோடி பவுண்டுக்கும் அதிகமான புகையிலை விளைகிறது.

ஐந்து சகோதரர்கள்

சுமத்ராவில் வாயில் போட்டுச் சுவைக்கும் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, கிராம்பு, புகையிலை ஆகியவற்றை "ஐந்து சகோதரர்கள்" என்று சொல்வார்கள். தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் உள்ள கடைகளில் காசைக் கொடுத்து "மூன்று சரக்குக் கொடுங்கள்" என்று சொன்னாலே போதும்: வெற்றிலை, பாக்கு, புகையிலை ஆகிய மூன்றையும் எடுத்துக் கொடுப்பார் கடைக்காரர்.

புகையிலையை உபயோகிப்பதில் சம்பிரதாயமான சில வழக்கங்களும் உண்டு. இறந்து போன ஒருவரின் நினைவு நாளன்று அவருடைய குடும்பத்தார், இறந்தவருக்குப் பிரியான வஸ்துக்களை வைத்துக் கும்பிடுவதுண்டு. அவர் புகையிலைப் பிரியராக வாழ்ந்திருந்தால் புகையிலையையும் வைத்துக் கும்பிடுவார்கள். இது "மூலைக்கு வைத்துக் கும்பிடுவது" எனப்படும்.


பிணத்தை அடக்கம் செய்யப் போனவர்களுக்குச் சுடுகாட்டிலிருந்து திரும்பி வரும் போது புகையிலையோ, சுருட்டோ கொடுப்பார்கள். இதனால்தான், "பொணத்தோடே போனாலும் பொகையிலை கிடைக்கும். இவனோடே போனால் என்ன கிடைக்கும்" என்ற பழமொழி வழங்குகிறது.

ராஜகுமாரி கதை

புகையிலைச் செடி எப்படி முதல் முதலில் தோன்றியது என்பதைக் கூறும் ஒரு ரசமான கதை உண்டு. மத்தியப் பிரதேசத்தில் வாழும் பூர்விக ஜாதியாரிடையே வழங்கும் ஒரு நாடோடிக் கதையாகும்:

ஒரு காலத்தில் ஒரு ராஜகுமாரி இருந்தாள். அவள் மிகவும் குள்ளமாக இருந்தாள். கண்ணோ மாறுகண். உடலெல்லாம் புண்கள்; ஒரு கை ஊனமாகவும் இருந்தது. ஆனால் முகம் மட்டும் அழகாக இருந்தது; ஆரம்

இனிமையான குரல். அவளைக் கல்யாணம் செய்துகொள்ள யாருமே முன்வரவில்லை. இதனால் அவள் துயரத்தில் மூழ்கினாள். ஒரு நாள் காட்டுக்குப் போய்விட்டாள். அங்கே அவள் மகாப் பிரபுவை (கடவுளை மகாப் பிரபு என்று சொல்வது அவர்கள் வழக்கம்.) சந்தித்தாள். தன்னோடு சரசமாடுவதற்கு அவரை அழைத்தாள் ராஜகுமாரி.



மகா பிரபுவுக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே, ''இனிமேல் நீ பெண்ணாக இருக்க மாட்டாய், நீ புகையிலைச் செடியாக மாறுவாயாக! சகல மனிதர்களும் உன்னிடம் இன்பம் துய்ப்பார்கள்'' என்று சபித்து விட்டார். அவ்வளவுதான்; ராஜகுமாரி அப்பொழுதே புகையிலைச் செடியாக மாறிவிட்டாள். அன்று முதல் மனிதர்கள் உணவையும் மனைவிமாரையும்விடப் புகையிலையை அதிகமாக விரும்பத் தொடங்கினர்'' என்று கதையில் கூறப்பட்டிருக்கிறது.

நான்கு மொழிப் பதில்

''ஒரு சமயம் இந்திரன் பிரம்மதேவனைப் பார்த்து, 'உலகத்தில் எது சிறந்த வஸ்து?' என்று கேட்டான். பிரம்மனுக்கு நான்கு வாய்கள் அல்லவா? அதனால் அந்த நான்கு வாய்களாலும் அவன் பதில் சொன்னான். நான்கு வாய்களும் 'தமாகு, பொகாகு, ஹொாக்ஸொப்பு, புகையிலை' என்று முறையே



ஹிந்துஸ்தானி, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளில் பதில் கூறின.''

இந்த நான்கு சொற்களுக்கும் 'புகையிலை' என்றுதான் பொருள். தென்னிந்தியாவில் வழங்கும் ஒரு பாடல் இவ்வாறு கூறுவதாக ஓர் ஆங்கிலப் புத்தகத்தில் காணப்படுகிறது. இது எந்த மொழியில் இயற்றப்பட்ட பாடலோ தெரியவில்லை.

புகையிலை விடு தூது

தமிழ் நாட்டில் புகையிலையின் பெருமையைக் கூறும் ஒரு பிரபந்தமே இருக்கிறது. பழனி முருகனிடம் காதல் கொண்ட ஓர் இளம் பெண், மயிலையோ, குயிலையோ, கிளியையோ, மேகத்தையோ தூது விடாமல் புகையிலையையே தூது விட்டதாகக் கூறி ''புகையிலை விடு தூது'' என்ற நூலை இயற்றியிருக்கிறார், சீனிச் சர்க்கரைப் புலவர். இவர் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ராமநாதபுரத்தில் வாழ்ந்தவர். புத்தகத்தில் உள்ள ஐம்பத்தொன்பது கண்ணிகளில் ஐம்பத்துமூன்று கண்ணிகள் புகையிலையின் பிரதாபங்களைத்தான் எடுத்துரைக்கின்றன; மீதியுள்ள ஆறு கண்ணிகளில்தான் காதல் விவகாரம் பேசப்படுகிறது.

''புகையிலை விடு தூது'' ஒரு ரசமான கதையைக் கூறுகிறது.

ஒரு காலத்தில் மும்மூர்த்திகளான சிவன், விஷ்ணு, பிரம்மன் ஆகியவரிடையே ஒரு பெரிய விவகாரம் ஏற்பட்டு விட்டது. இந்த விவகாரத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக அவர்கள் மற்ற தேவர்களிடம் சென்றார்கள். மூவரும் தங்கள் வழக்கை எடுத்துரைத்தார்கள். தேவர்களோ, ''உங்கள் விவகாரத்தைப் பின்னால் தீர்த்து வைக்கிறோம்'' என்று சொல்லிவிட்டு, சிவன் கையில் வில்வ இலையையும், விஷ்ணு கையில் துளசியையும், பிரம்மன் கையில் புகையிலையையும் கொடுத்து அனுப்பினார்கள்.

சிவன் கொண்டு போன வில்வ இலையைக் கங்கையின் அலை அடித்துக் கொண்டு போய் விட்டது. விஷ்ணு கொண்டுபோன துளசியைப் பாற்கடல் அடித்துக் கொண்டு போய் விட்டது. பிரம்மனோ தன்னிடம் கொடுத்த புகையிலையைத் தன் நாவில் வசிக்கும் பத்தினியாகிய சரஸ்வதியிடம் தந்து பத்திரப்படுத்தி வைக்கச் சொன்னான். (இதற்கு வாயில் புகையிலையைப் போட்டு ஒதுக்கிக் கொண்டான் என்று பொருள்.)

பின்னொரு நாள் வழக்கைத் தீர்த்துக் கொள்ளப் பழையபடியும் மும்மூர்த்திகள் தேவர்களிடம் வந்தார்கள். தேவர்கள் அம்மூவரையும் பார்த்து, ''நாங்கள் அன்று கொடுத்த இலைகளைக் கொடுங்கள்'' என்று கேட்டார்கள்.

சிவனும் விஷ்ணுவும் அந்த இலைகளைத் தொலைத்து விட்டதால் ஒன்றும் தோன்றாமல் நின்றார்கள்.

பிரம்மன் மட்டும், ''நமது பத்ரம் (இலை) போகையிலே (போய் விடவில்லை)'' என்று சொல்லி சரஸ்வதியின் கையிலிருந்து புகையிலையை வாங்கிக் கொடுத்தான். இதன் காரணமாகப் பிரம்மனுக்கு வழக்கில் வெற்றி கிடைத்தது. புகையிலைக்கும் பிரம்ம பத்ரம் என்ற பெயர் கிடைத்தது.

புகையிலைக்கும், 'போகவில்லை' என்பதற்கும் பொதுவாக 'போகையிலே' என்று பிரம்மன் கூறியதாகப் புலவர் பாடியிருப்பது அற்புதமாக இருக்கிறது.

விடுகதை

இப்படிப் புகையிலைக்கு ஒரு புலவர் தனிப் புத்தகம் இயற்றியிருப்பதைப் போல வேறு சிலர் தனிப் பாடல்களும் இயற்றியிருக்கிறார்கள்.


ஒரு விடுகதை:

நாலெழுத்துப் பூடு:
நடுவே நரம்பிருக்கும்:
காலும் தலையும்
கடைச்சாதி — மேலாக



everest/340 dr 1/PP TM

நீடித்த
பாதுகாப்பை
நாடுவீர்களேயானல்...



...உங்களுக்குத் தேவை

நெரோலாக்

பெயின்டுகள்

குட்லாஸ் நெரோலாக் பெயின்ட்ஸ்—ஒப்பற்ற தரம் வாய்ந்தவை

குட்லாஸ் நெரோலாக பெயின்ட்ஸ் லிமிடெட் த.பெ. 699, ஃபோர்பஸ் பில்டிங், ஹோம் ஸ்ட்ரீட், பம்பாய்-1.

INTERPUB/GNP/17 TAM

குட்லாஸ் நெரோலாக் பெயின்ட்ஸ் லிமிடெட், 29, பெரியண்ண மேஸ்திரி தெரு, சென்னை-1

ஒட்டு முதல்எழுத்தும்
ஒதும்மூன் றும்எழுத்தும்
விட்டால் பரமனுக்கு
வீடு.

அந்த நாலெழுத்துப் பூடு என்ன?

நடுவில் நரம்பிருக்கும் புகையிலேதான்.

புகையிலேயின் காலும் தலேயும் — அதாவது முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் — கடைச் சாதி; புலே என்பது. முதல் எழுத்தையும் மூன்றும் எழுத்தையும் நீக்கிவிட்டால் கைலே என்று ஆகிவிடும். கைலே பரமசிவனுக்கு வீடுதானே?

பெயர் வந்த விதம்

ஆங்கிலத்தில் புகையிலேயின் பெயர் ''டொபேக்கோ''. இதற்கு இந்தப் பெயர் வந்ததன் காரணம் என்ன? வட அமெரிக்காவில் வாழ்ந்த பழங்குடி மக்கள் புகை பிடிப்பதற்கு ஒரு வகைக் குழாயைப் பயன்படுத்தினர்கள். அந்தக் குழாயின் பெயரையே ஆதாரமாக வைத்து டொபேக்கோ என்ற வார்த்தையை உண்டுபண்ணினர்கள்.

இங்கிலாந்தில் எலிஸபெத் மகாராணி ஆட்சி புரிந்தபோது புகையிலேப் பழக்கம் பரவியது. எலிஸபெத் ஆட்சிக் காலத்துக்குப் புகை பிடிக்கும் சகாப்தத்தின் தொடக்க காலம் என்றே பெயர் வைத்துவிடலாம் என மத்தேயு பாரீ என்பவர் கூறியிருக்கிறர். எலிஸபெத் கி. பி. 1603ல் காலமானள். அவளுக்குப் பிறகு முதலாவது ஜேம்ஸ் இங்கிலாந்தின் அரசன் ஆனன். அவன் புகையிலேயை அடியோடு வெறுத்தான். புகையிலேயைப் பற்றி அவன் கூறியதாவது:



''எல்லா விதப் பாவங்களுக்கும் ஆணி வேரான குடிப் பழக்கம் என்பதன் ஒரு கிளேயே புகையிலேப் பழக்கம்....கடவுள் மனிதனுக்கு இனிய சுவாசத்தைக் கொடுத்திருக்கிறர். இது மிகச் சிறந்த ஒரு வரப்பிரசாதம். ஆனல் இந்த வரப்பிரசாதத்தைத் துர்நாற்றம் வீசும் புகையினுல் பாழாக்குகிறர்கள். இது போலித்தனமான, வீண் டம்பமான ஒரு செயலாகும்.''

மேலும் அவன் தன் நாட்டு மக்களே நோக்கி வருத்திக் கூறியதாவது:

''நான் மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். என்ன கொள்கையைக் கருதி, என்ன கௌரவத்தை உத்தேசித்து, காட்டுமிராண்டி இந்தியர்களின் (அமெரிக்காவின் சிவப்பு இந்தியர்களின்) மிருகத்தனமான பழக்க வழக்கங்களேப் பின்பற்றுகிறீர்கள்! இதை யோசித்துப் பாருங்கள். பிரெஞ்சுக்காரர்களின் ஆசாரங்களேயே பின்பற்றச் சம்மதிக்காமல் வெறுக்கிற நாம், ஸ்பெயின் மக்களின் மன உணர்ச்சிகளேயே சகிக்காத நாம், மிருகத்தனமான அடிமை இந்தியர்களேப் பின்பற்றுவதா? இந்த விஷயத்தில் அவர்களேப் பின்பற்றுகிறவர்கள், அவர்கள் நிர்வாணமாகத் திரிகிறர்களே, அதையும் பின்பற்றுவதுதானே? தங்கத்தையும் ரத்தினங்களேயும் ஒதுக்கி விட்டு அவர்களேப் போல் கண்ணுடிக் கற்களே அணிந்து கொண்டு, இறகுகளேச் செருகிக் கொள்வதுதானே?...புகை பிடிக்கும் பழக்கம் கண்ணுக்கு அசிங்கமாக இருக்கிறது. மூக்கு அதை வெறுக்கிறது: மூளே அதனுல் கெடுகிறது: சுவாசப் பைகளுக்கு அபாயம் ஏற்படுகிறது.''

தண்டனேகள்

மேற்கண்டவாறு கூறியதுடன முதலாம் ஜேம்ஸ் நின்றுவிடவில்லே. புகையிலேயைப் பரப்பியவர்களேத் தண்டித்தும் வந்தான். 1620ல் தாமஸ் வார்னர் என்பவனும் மற்ருெருவனும் சேர்ந்து, அமெரிக்காவின் அமேஸான் நதிக் கரையில் புகையிலேயைப் பயிர் செய்யத் தொடங்கினர்கள். அப்போது அமெரிக்கா இங்கிலாந்தின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அதனுல் புகையிலேயைப் பயிர் செய்யக் கூடாது என்று அவர்களுக்குத் தடை விதித்தான் முதலாம் ஜேம்ஸ். தாமஸ் வார்னர் இங்கிலாந்துக்குத் திரும்பி வரும் போது தன்ேேடு கொஞ்சம் புகையிலேயையும் கொண்டு வந்ததற்காகச் சிறைவாசத் தண்டனே விதிக்கப்பட்டான்.

1614லும் 1665லும் இங்கிலாந்தில், பிளேக் நோய் ஏகமாகப் பரவி வந்தது. பிளேக் வராமல் தடுக்கக்கூடிய ஒரே மருந்து புகை பிடிப்பதுதான் என்று கருதி ஆணும் பெண்ணும் குழந்தை குட்டிகளும் கூட மொத்தமாக அப்போது புகை பிடிக்கத் தொடங்கினர்கள். புகையிலேப் புகையினுல் விஷக் கிருமிகள் செத்துப் போகலாம் என்றுலும் அது பிளேக் நோயைத் தடுத்துவிட முடியாது என்று பின்னுல் நிருபணம் ஆகிவிட்டது.

புகை பிடிக்காத மாணவனுக்கு அடி

பிளேக் நோய் பரவி வந்த அந்தக் காலத்தில் டாம் ரோஜர்ஸ் என்பவர் பள்ளி மாணவனுக இருந்தார். அவர் படித்த பள்ளிக் கூடத்தில் நாள்தோறும் காலேயில் எல்லோரும் கண்டிப்பாகப் புகை பிடித்தாக வேண்டுமாம்!-பிளேக் நோய் வராமல் தடுப்பதற்காகத்தான். ஒரு நாள் காலேயில் டாம் ரோஜர்ஸ் புகை பிடிக்கத் தவறி விட்டதற்காக அவரைச் சவுக்கால் அடித்தார்களாம். அவர் அன்று வாங்கிய சவுக்கடியைப் போல் என்றும் வாங்கியதில்லேயாம்! இந்தச் செய்தியைத் தாமஸ் ஹீர்ன் என்பவர் தமது டைரியில் எழுதி வைத்திருக்கிறர்.



விக்டோரியா மகாராணி ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் ஆங்கில சமூகம் புகை

யிலையை வெறுக்கத் தலைப்பட்டது: 1840ல் கிளாஸ்கோவுக்கும் எடின்பரோவுக்கும் இடையில் அடிக்கடி ரயில் பிரயாணம் செய்து வந்த ஒருவர், ரயிலில் மற்றவர்கள் புகை பிடிப்பதால் துர்நாற்றம் தாங்க முடியவில்லை என்று கூறிப் புகார் செய்தார். உடனே ரயில்வே கார்டு வந்து சுற்றுமுற்றும் பார்த்தார். அப்போது அங்கே யாரும் புகை பிடித்துக் கொண்டிருக்கவில்லை. ஆனாலும் பிரயாணி ரயில்வே கம்பெனி மீது வழக்குப் போட்டார். அவருக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்காகக் கம்பெனி எட்டு பவுன் 6 ஷில்லிங், 8 பென்ஸ் நஷ்டஈடு கொடுத்தது.

1818ல் பார்லிமெண்டில் சட்டம் இயற்றி அதன்படி ரயில் வண்டிகளில் புகை பிடிக்கத் தனி அறைகள் ஏற்படுத்த வேண்டும் என்று ரயில்வேக் கம்பெனிகளுக்கு உத்தரவிடப்பட்டது. நம் நாட்டு ரயில் வண்டிகளிலும் சக பிரயாணிகள் ஆட்சேபித்தால் யாரும் புகை பிடிக்கக் கூடாது என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் சில சமயங்களில் இந்த எழுத்துக்களே கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடுகின்றன — சிகரெட் புகையினால்!

குழாய்கள்

சிகரெட்டுகள் பிற்காலத்தில் தோன்றியவை. ஆரம்ப காலத்தில் குழாய்களில் புகையிலையை வைத்துக் கொளுத்திப் புகை பிடித்தார்கள். தென் பிரான்ஸில் வளரும் ப்ரூயீரி என்னும் மரத்தின் கட்டைதான் இந்தக் குழாய் செய்வதற்கு மிகவும் ஏற்றதாம். புகையிலைக் குழாய்களில் கண்ணைக் கவரக் கூடிய சித்திர வேலைப்பாடுகளும் செய்திருக்கிறார்கள். பழங் காலத்தில் உபயோகிக்கப்பட்ட அந்த அழகிய குழாய்கள் இன்றும் காட்சிப் பொருளாக இருந்து வருகின்றன.



குழாயில் புகை பிடிக்கும் காலத்திலோ அதற்குப் பின்போ சுருட்டு உற்பத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். உலகத்திலேயே கியூபா தீவில் செய்யப்படும் ஹவானா சுருட்டுத்தான் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. சுருட்டுச் செய்வதற்கு வேண்டிய புகையிலையை ஒரு விசேஷ முறைப்படி பயிர் செய்ய வேண்டும். துணிகளைப் பந்தல் மாதிரி கட்டி அதன் நிழலில் செடிகளைப் பயிர் செய்து வளர்க்க வேண்டும்.

3

இலக்கியத்தில் புகையிலை

புகை பிடிப்பதைப் பற்றி மேல்நாட்டு இலக்கியங்கள் எவ்வாறு கூறுகின்றன?

ஷேக்ஸ்பியர் வாழ்ந்த காலத்தில்தான் இங்கிலாந்தில் புகை பிடிக்கும் பழக்கம் பரவியது என்றாலும் அவர் அதைப் பற்றி ஓரிடத்தில்கூடக் குறிப்பிடவில்லை. ஆனால் அவர் காலத்தில் வாழ்ந்த வேறு பல புலவர்கள் புகையிலையைப் பாராட்டியோ அல்லது திட்டியோ பாடியிருக்கிறார்கள்.

ராபர்ட் பர்ட்டன் (1577–1640) கூறுவதாவது: ''புகையிலை தெய்வீகமான ஓர் அபூர்வ வஸ்து. அதைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். இதனால் உடலுக்கும் உள்ளத்துக்கும் கெடுதல் நேரும்.''

ஐ. எச். பிரௌன் (1750) சுவாரசியமான ஒரு பாட்டே இயற்றியிருக்கிறார். ''புகையிலையே! உன்னாலும் உன் சகோதரியான மதுவினாலும் கவிஞர்கள் பேரின்பக் களிப்படைகிறார்கள். அந்தக் களிப்பினால், தங்கள் அருகில் அமீனா வந்து நிற்பதைக்கூட அவர்கள் பொருட்படுத்துவதில்லை.''

மோலியர் என்ற புகழ் பெற்ற பிரெஞ்சு நாடகாசிரியர் (1665) தாம் எழுதிய ''டான் ஜுவான்'' என்ற நாடகத்தில் ''அரிஸ்டாட்டிலும் பிற தத்துவ சாஸ்திரங்களும் எதைச் சொன்னாலும் அது புகையிலைக்கு ஈடாகாது. புகையிலைப் பழக்கம் இல்லாதவன் வாழவே தகுதியற்றவன்'' என்று சொல்லியிருக்கிறார்!

புகை பிடிக்காதவனை எந்தப் பெண்ணும் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்றார் ஆர். எல். ஸ்டீவன்ஸன் (1850).

பைரன் (1788) என்ற ஆங்கிலக் கவிஞர், ''மேன்மை பொருந்திய புகையிலையே! சகல நாட்டினருக்கும் நீ களைப்பை நீக்கிக் களிப்பை ஊட்டுகிறாய். குழாய்களில் இருக்கும்போது நீ மிகவும் அந்தஸ்தோடு இருக்கிறாய். ஆனால் உன் உண்மைக் காதலர்கள் உன்னுடைய நிர்வாண கோலத்தையே அதிகம் பாராட்டுவார்கள். ஆகவே எனக்கு ஒரு சுருட்டுக் கொடுங்கள்!'' என்று பாடியிருக்கிறார்!

கண்டனங்கள்

புகையிலையால் ஆங்கிலேயர்கள் காட்டுமிராண்டிகளின் நிலைக்கு இறங்கி விட்டதாகச் சொன்னார் வில்லியம் காம்டன்.

வில்லியம் கூப்பர் (1731) என்ற பிரபல ஆங்கிலக் கவிஞர், ''புகையிலையே, உன் நாற்றம் எரிச்சலை உண்டுபண்ணுகிறது. சமூகத்தின் சந்தோஷ வாழ்வுக்கு நீ விரோதியாக இருக்கிறாய்'' என்று பாடினார்.

''காதலுக்குச் சமாதி கட்டுகிறது புகையிலை'' என்று சொன்னார் டிஸ்ரேலி.

விஞ்ஞான மேதை தாமஸ் எடிஸன், ''ஒருவனுடைய கையில் துப்பாக்கி இருந்தாலும் நான் சகித்துக் கொள்வேன். அவன் கையில் சிகரெட் வைத்திருப்பதை மட்டும் என்னால் சகிக்கவே முடியாது'' என்று ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார்.

மார்க் ட்வெய்ன் என்ற பிரபல அமெரிக்க ஹாஸ்ய எழுத்தாளர் புகையிலையைப் போற்றவும் இல்லை; தூற்றவுமில்லை. தமக்கே உரிய பாணியில் ஒரே ஒரு அபிப்பிராயம் மட்டும் கூறுகிறார். அது என்ன?

''சுருட்டு குடிப்பதை நிறுத்துவது மிகவும் சுலபம். நான் அதைப் பல தடவைகள் நிறுத்தியிருக்கிறேன்'' என்கிறார்.

பிரபல ஆங்கில ஹாஸ்ய எழுத்தாளரான பி. ஜி. ஓட்ஹவுஸ் தம்முடைய புத்தகம் ஒன்றைத் தமது புகையிலைக் குழாய்க்குச் சமர்ப்பணம் செய்திருக்கிறார்!

(அடுத்த இதழில் முடியும்)

வைரமுடைய நெஞ்சு வேண்டும்

சுபஸ்ரீ

"நாயினு! நான் விளையாடப் போறேன்!" என்று ஐந்து வயதுப் பையன் வாசலுக்கு ஓடினான்.

"அரே அப்பாயி, காலங்காத்தாலே எங்கேடா போறே?" என்று அரைச் சோம்பேறித்தனத்துடன் கேட்டு விட்டுச் சுருட்டைச் சுவைத்து அனுபவிக்கலானார், வாட்லா நாராயணன். அனந்தப்பூர் அருகே பன்னிரண்டு மைலில் திம்மாப்பேட்டை கிராமவாசி அவர்.

சென்ற அக்டோபர் மாதம்.

முதல் நாள் பெய்த மழையில் பூமி குளிர்ந்து கிடந்தது. வேர்க்கடலை அறுவடையான வயலில் துள்ளிக் குதித்துச் சென்ற பாலகன் கண்களில் பளிச்சென்று ஒரு கல் பளபளத்தது. விரல்கள் கொள்ளாமல் எடுத்து வந்து நாயினுவிடம் காண்பித்தான் அதிசயப் பொருளை.

'அம்மா பாயோயி! ஏமிரா இதி...!' என்று அடித்துப் புரண்டு எழுந்தார் நாராயணன். சுருட்டின் கங்கு கனன்ற கைகளில் ஒளி வீசும் கல் பளபளத்தது.

வைரக் கல்!

வைர மணியைக் கண்டெடுத்த தமது குலமாணிக்கத்தைக் கட்டித் தழுவிக்கொண்டார், தகப்பன். "மார்பில் அணிவதற்கே உன்னைப் போல் வைர மணிகள் உண்டோ?" என்று கவிஞன் பாடியது எவ்வளவு உண்மை!

ஃ ஃ ஃ

சமீபத்தில் உஸ்மானியா பல்கலைக் கழகத்துப் பொன் விழாவில் பேசுகையில் விஞ்ஞானி திரு ஸி. வி. ராமன் 'அல்ட்ரா வயலட்' விளக்கு எடுத்துக் கொண்டு இரவில் நடந்தால் அனந்தப்பூர்—கடப்பை பிராந்தியத்தில் நிறைய வைரத்தைக் கண்டுபிடிக்கலாம்' என்று கூறியபோது, கூடியிருந்தோர் கண்கள் ஒளி வீசின. அவர் சொல்லி ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் 96 காரட் வைரம் அகப்பட்டிருக்கிறது!



ஆந்திராவில் வைரச் சுரங்கம் என்பது புதிதல்ல; விஜயநகரத்துக் கிருஷ்ண தேவராயர் காலத்திலும் கோல்கொண்டா குதுப் சாஹி வம்சத்தினர் காலத்திலும் பல இடங்களில் வைரச் சுரங்கங்கள் வேலை செய்தன. கோஹினூர் என்ற உலகப் பிரசித்தி பெற்ற வைரம் கோல்கொண்டா சுரங்கங்களில் கண்டெடுக்கப்பட்ட ஒன்றுதானே!

இப்போதும் அனந்தப்பூர் பிராந்தியத்தில் மழை பெய்ததும் பூமியின்மீது வைரக் கற்கள் அகப்படுமாம். அதைக் கண்டுபிடிப்பதையே தொழிலாக உள்ளவர்கள் மழை ஓய்ந்ததும் புறப்பட்டு விடுவார்களாம். இந்த ஸீஸனில் இவற்றை வாங்கவென்றே பம்பாயிலிருந்து வைர வியாபாரிகள் வந்து குந்தக்கல்லில் முகாம் இட்டிருப்பார்களாம்!

பூகர்ப்பத்திலிருந்து ஏதேனும் புதையல் அகப்பட்டால் சர்க்காருக்குத் தெரியப்படுத்தி அதன் விலை மதிப்பீட்டில் ஒரு பகுதி அரசுக்குச் செலுத்த வேண்டும். அதற்கு 'டேக்கா' கொடுத்து, காதும் காதும் வைத்தாற்போல் பேரம் நடந்து வைரம் பம்பாய் மார்க்கெட்டை அடைந்து விடுமாம். அங்கே அதன் விலை பன்மடங்கு பெருகும். பிறகு ஹாலந்து ஆம்ஸ்டர்டாமில் பட்டை தீட்டப்பட்டு, மேலும் பல லட்சங்களாக விலை உயர்ந்து, உலக மார்க்கெட்டை நாடிவிடும்.

ஃ ஃ ஃ

திம்மாப்பேட்டை நாராயணன் இரு உறவினர்களை அழைத்துக்கொண்டு குந்தக்கல் சென்றார். 96 காரட் விலை எத்தனையோ லட்சமாக இருப்பினும், ரூ. 25,000க்குப் பேரம் முடிந்தது. கிராமவாசிக்கு இதைவிட என்ன அதிர்ஷ்டம் வேண்டும்?

உறவினர்களுக்குப் பாதிப் பங்கு போயிற்று; மீதியைத் தமக்குப் பத்திரப்படுத்திக் கொண்டார். ஊருக்குத் திரும்பும் வழியில் ஓர் இடத்தில் இரவு தங்கி, துயில் எழுந்து பார்த்தால்....!

பணத்தைக் காணோம்! 'அட நாராயணா!' என்று அலறினார், நாராயணன். அவருக்கு இப்போது தேவை வைரமுடைய நெஞ்சு!

அனந்தப்பூர் போலீஸ் அதிபர், வைர வியாபாரியையும், இதர உறவினர்களையும் தேடிக்கொண்டிருக்கிறார்.

"இத்தனை நாழி அது வெளிநாடு சென்றிருக்கும்" என்கிறார் ஓர் அனுபவஸ்தர்.

கோஹினூருக்கு அடுத்தபடியாகப் பரிமாண முள்ள இந்தப் புதிய வைரம் யாரை அலங்கரித்து நிற்கிறதோ!



கயல்விழிக்குப் பரிசு

பணக்காரர்களின் தலையில் கை வைத்தாகி விட்டது! ஏழைகளின் தலையில் கை வைத்தாகி விட்டது. தொழிலாளர்களின் தலையில் கை வைத்தாகிவிட்டது. குழந்தைகளின் இனிப்புப் பண்டத்தில் கைவைத்தாகி விட்டது. இனி மாஜி மன்னர்கள்தான் பாக்கி. அவர்கள் தலையிலும் கைவைத்துவிட வேண்டும்! இது தான் காங்கிரஸ்காரர்கள் பேசி வரும் சோஷலிஸ ஜனநாயக பாணி போலும்!

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தலை சிறந்த நாடு இந்தியா. ஒரு காலத்தில் இக் கூற்று உண்மையாக இருந்தது. இப்போதோ வாக்குறுதியை மறுப்பதில் தலையாய நாடாக ஆகிக் கொண்டிருக்கிறது நமது நாடு. நமது நாட்டின் பெருமை நம்மாலேயே பாதாளத்தில் புதைக்கப்படுகிறது.

மாஜி மன்னர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் உதவித் தொகையை நிறுத்த வேண்டும் என்று கூறிக் கொண்டே வந்த போலி சோஷலிஸவாதிகளுக்கே கூட அத்தகைய ஒரு செயல் சற்று இழிவாகப் பட்டு விட்டது போலும்! மொத்தமாக ஒரு தொகையைக் கொடுத்துவிடலாமா என்று யோசித்து வருகிறார்கள். வாக்குறுதியை நிறைவேற்றுவது எப்படி என்பதை இவர்களிடமல்லவா அரிச்சந்திரன் தெரிந்து கொள்ள வேண்டும்!

சங்கரன்கோவில்
18–9–68 பி.எஸ். சண்முகசுந்தரம்

□

''**கோ**மை அழுத கண்ணீர்'' சிறுகதை இன்றைய மாணவர்களின் கடமையை உணர்த்தும் முகமாய் அமைந்துள்ளது வரவேற்கத்தக்க ஒன்றாகும். ''பண்பை, ஒழுக்கத்தை, புனிதத்துவத்தை விட்டுப் படிப்பு என்ன வேண்டியிருக்கு'' என்ற வார்த்தைகளில்தான் எத்தனை உண்மைகள்!

மதுரை–6
8–11–68 கோ. முருகன்

□

வாழ்க்கை என்னும் கடலின் கரையில் முத்துசிவன் அழகாகக் கட்டியிருக்கிறான் ஒரு கிளிஞ்சல் கோபுரம். ஆனால் தூரத்தில் அலைகள் பேரிரைச்சலுடன் ஓடி வருவது தெரிகிறது. கடவுளே! முத்துசிவன் கட்டியிருக்கும் கோபுரம் உடைந்து சிதறிவிடக் கூடாது.

மதுரை — 9
15–11–68 தடா. தனலக்ஷ்மி அம்மாள்

திரு எம்.கே. சங்கரன் அவர்கள் எழுதிய 'விழித்துக் கொண்டார்கள்' என்னும் சிறுகதை முன்னைப் பழமையிலும் பின்னைப் புதுமையிலும் பிழிந்த கருவும் உணர்வின் உயிரும் பொங்கும் தனிநடைத் தெளிவுடையது.

கோவை — 14
22–11–68 ஆர். குழந்தைவேலு

□

'**கல்கி**' இதழில் வெளி வந்த அகிலன் அவர்களுடைய சிறந்த படைப்பான 'கயல் விழி'க்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்திருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இதற்குமுன் அவருக்குப் பரிசு கிடைத்ததும் 'கல்கி'யிலேயே வெளிவந்த 'வேங்கையின் மைந்த'னுக்குத்தான். சிறப்பான படைப்புக்களையே நல்கி வரும் 'கல்கி'க்கு எனது பாராட்டுதல்கள்.

திருப்பூர் — 1
22–11–68 கி. பீமராவ்

□

'**பி**ழைக்கத் தெரியாத வாத்தியார்' என்ற கதையை எழுதிய திரு எஸ். வி. எஸ். அவர்களுக்குப் பாராட்டுதல்கள்.

ரகுராமனைப் போல் தூய எண்ணமும், நன்கு சொல்லித் தரும் திறமையும் கொண்ட பல ஆசிரியர்கள் படும் வேதனைகளுக்கு இக் கதை மாபெரும் மன ஆறுதலை அளிக்கின்றது. அர்ஜுனனை உதாரணமாகக் காட்டியது மிகவும் சிறப்புடையது.

கிரிப்பட்டி
23–11–68 மு. சி. பிரகாசம்

□

சில நாட்களுக்கு முன்னர் பத்திரிகையாளர்களிடம் சென்னை வானொலி நிலைய டைரக்டர் கூறியதாகக் கீழ்க்கண்டவாறு ஒரு பத்திரிகையில் படித்தேன். ''சபாக்களில் நடக்கும் நாடகத்தை அதைப் பார்க்க விரும்புகிறவர்கள் மட்டும் போய்ப் பார்ப்பார்கள். விருப்பம் இல்லாதவர்கள் போக மாட்டார்கள். ரேடியோவில் அதை ஒலிபரப்பினால் எல்லோரும் கேட்க வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே ஒருவிதப் பொறுப்பு எங்களுக்கு ஏற்படுகிறது. மேடை நாடகங்களில் சில அப்படியே ரேடியோவில் ஒலிபரப்பும்படி இருப்பதில்லை. தவிர்க்க வேண்டிய விஷயங்களும் அதில் இருக்கக் கூடும்.''

மேற்சொன்னவைகளை யாவரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இந்தக் கொள்கையையே அவர்கள் சினிமாப் பாட்டுக்களை ஒலிபரப்புவதிலும் மேற்கொண்டால் என்ன?

வேலூர்.
10–11–68 ஜி. ஸ்ரீநிவாசமூர்த்தி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Ceylon